
KALKI 13.3.88 ரூ. 2.

கல்கி



முறிந்துபோகும் திருமணங்கள்...

உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!



ஃபாரெக்ஸ்®-வெஜ்



6 மாதம் முதல்

புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.

இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.

ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி



GX41/203 TML



நாட்டை மூடிவைத்து ஒட்டடை அடிக்க முடியுமானால்...!





* 'கல்கி'க்கு, புகழ்பெற்ற அவருடைய சாமானிய மனிதரின் படத்தை (வேட்டி – சட்டை – குடையோடு) மளமளவென்று வரைந்து, வாழ்த்துக்கள் எழுதிக் கையெழுத்துப் போட்டார் ஆர். கே. லட்சுமண்.

பிரபல கார்ட்டூனிஸ்ட் ஆர். கே. லட்சுமண், பி. டி. கோயங்கா விருது பெறச் சென்னை வந்திருந்தார்.

ஆர். கே. லட்சுமண் வரைந்த வித விதமான காகங்களின் படங்கள், இம்மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஒரு வாரத்துக்கு, நுங்கம்பாக்கம் சாக்ஷி ஆர்ட் காலரியில் வைக்கப்படுகின்றன.

– ஏன் காகங்கள்?

– வேறு எந்தப் பறவை என் வீட்டு ஜன்னல் விளிம்பில் சுதந்தரமாய் வந்து உட்காருகிறது?

– சென்னை வந்ததும் உங்களை உடனே பாதித்தது எது?

– அலங்கோலமான சென்னை. போஸ்டர்கள் – ஆபாசத்தின் உச்சம்.. வெறுப்பூட்டுகின்றன.

– உங்கள் கார்ட்டூன்கள் பலரைக் காயப்படுத்தாவிட்டாலும் கோபப்படுத்தியிருக்குமே?


– நான் ஏன் கோபப்படுத்த வேண்டும்? என் சித்திரங்கள் ஒரு காலும் அதைச் செய்யாது.

– உங்கள் கேலிச் சித்திரங்கள் வன்மையான மென்மையுடன் (**powerfully gentle**) இருப்பதாகச் சொல்கிறார்கள்...

– (பலமாகச் சிரித்து) **gently powerful** தான் சரியாக இருக்கும்!

– நீங்கள் முன்பு எழுதிக் கொண்டிருந்தீர்களே, விட்டுவிட்டீர்களா என்ன?

– நேரம் கிடைப்பதில்லை. ஒரு நாவல் எழுத இப்போது வாய்ப்பு வந்திருக்கிறது. பாதி எழுதியிருக்கிறேன். பத்திரிகை ஒன்று ஆரம்பித்து, மெல்ல மெல்ல லயன்ஸ், ரோடரி கிளப்புகளில் சேர்ந்து, பிறகு அரசியலில் தலைநுழைக்கிற ஆசாமியைப் பற்றியது. இன்னும் முடிக்கவில்லை. எழுதுவது எனக்குச் சுகமான பொழுதுபோக்கு. பதினைந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; கட்டடம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது; பழிவாங்கலில் பலர் பலியானார்கள் என்று தினம் தினம் படிக்கிறபோது, இதிலெல்லாம் இருந்து விலகி உட்கார்ந்து எழுதுவது மனசுக்குப் பெரிய ஆறுதல்... பெயின்டிங்கும் அப்படித்தான். கார்ட்டூன் போடுவது



* காகங்கள் கண்காட்சியில் ஒரு சித்திரம்.

தான் டென்ஷன்!

— உங்களுக்கு மிகப் பிடித்தது எது?

— பிரயாணம். பிரயாணம் செய்வது ரொம்ப சுவாரசியமான அனுபவம். கிடைக்கிற பணத்தை எல்லாம் செலவழித்துக் கொண்டு பிரயாணம் செய்து கொண்டிருப்பது ரொம்பவும் பிடிக்கும்! என் மனைவியுடன் சமீபத்தில் தாய்லாந்துக்குப் போயிருந்தேன். போன வருஷம் அந்தமான் நிகோபார் தீவுகளுக்குப் போனோம்...

— நீங்கள் போடுகிற கார்ட்டூன்களில் எல்லாவற்றிலும் வருகிற சாதாரண மனிதரை எப்போது, எப்படி உருவாக்கினீர்கள்?

— நானா அவரை உருவாக்கினேன்? அவரல்லவா என்னை உருவாக்கினார்!

— கார்ட்டூன்களை வரைவது டென்ஷன் என்றீர்களே? எப்படி?

— காலை எட்டரை மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை என் அலுவலக அறையில் சிந்திப்பேன். தினசரிகளை எல்லாம் படித்துவிட்டு, எதைச் சித்திரமாக வரைவது என்று மண்டையைக் குடைந்து கொள்ளுவேன். எது எடுபடும் என்று யோசித்து யோசித்துத் தலை புண்ணாகிவிடும். (பம்பாய் தவிர, பதினொரு இடங்களுக்கு இவர் கார்ட்டூன்கள் விமானத்திலும், கூரியர் சர்வீஸிலும், பறக்கின்றன.)

— இதை எல்லாம் வரைகிற போது ஓர் அரசியல்வாதியாகவே உங்களையும் நினைத்துக் கொள்கிறீர்களா?

— நான் அரசியல்வாதி அல்ல. ஒரு சாமானியனின் யதார்த்த அறிவை உபயோகிக்கிறேன். யதார்த்த வாழ்க்கையை ஒட்டி என் சித்திரங்களை வரைகிறேன், அவ்வளவுதான்.

— தற்போதுள்ள நாட்டு நிலைமை எப்படி தோன்றுகிறது உங்களுக்கு?

— மோசமான கட்டத்திலிருந்து படுமோசமான கட்டத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அதோ, அந்தக் குழந்தையைக் கேட்டால்கூடச் சொல்லும். சுதந்திரத்தை ஒரு வெள்ளித் தட்டில் வைத்து நமக்குக் கொடுத்து விட்டுப் போனார்கள். விலைமதிப்பற்ற அந்தச் செல்வத்தை நாம் சரியாக மதிக்கத் தவறி விட்டோம். நம்மை ஆள்கிறவர்களையும், அதிகாரிகளையும் பற்றியே முக்கியமாக நினைத்து, ஆளப்படுகிறவர்களைப் பற்றிக் கவலையே இல்லாமல் இருந்தோம். சில படித்தவர்கள் அரசியலுக்கு வருகிறார்கள்... சினிமா ஸ்டார்களும் வருகிறார்கள். 1947ல் நாம் இதைப் பற்றி எல்லாம் யோசிக்கவே இல்லை. அமிதாப்பச்சன் எல்லாம் இப்போது பேசப்படுகிற தலைவர்கள்!... அரசியல்வாதி அல்லாதவர்களை நோக்கி நம் அரசியல் இப்போது போய்க் கொண்டிருக்கிறது. இது மாதிரி ஆட்களுக்கு, ஆட்சி செய்ய வேண்டும் என்ற பேராசை இருக்கிறது. அவர்கள் நேரு, பட்டேல் மாதிரி அரசியல்வாதிகள் அல்ல. முன்பெல்லாம் அரசியல்வாதியின் சின்னமாக இருந்த காந்திகுல்லாய் இப்போது பெரும்பாலும் மறைந்து விட்டது. அதோடு காந்தியமும் போய்விட்டது. நேர்மை, ஒழுக்கம் எல்லாம் விடைபெற்றுக் கொண்டன.

— மறுபடி உங்கள் கேலிச் சித்திரங்களுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது...

— கார்ட்டூன்கள் ஒரேயடியாகச் சம்மட்டி அடியாக இருக்க வேண்டியதில்லை என்பது என் கருத்து. உள் அர்த்தம் தொனிக்க, வசை பாடாத வகையில், சிந்திக்கத் தூண்டுகிற சிநேக பாவத்துடன் கேலிச் சித்திரம் அமைவதைத்தான் நான் விரும்புகிறேன்... என் பாணியில் சித்திரங்கள் வரைவதற்கு ஏன் மற்றவர்களுக்குச் சொல்லித் தரக் கூடாது என்று கேட்கிறார்கள். அது சாத்தியமே இல்லை. நான் எனக்குள் அனுபவித்து உணரும் ஒரு சொந்த உணர்ச்சியை என்னால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன்.

— எம். ஜி. ஆரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

— அவர்தான் சரியான இன்றைய அரசியல்வாதி. இந்திய மனோபாவத்துக்கு ஏற்ற ஹீரோ — ஒர்ஷிப் முறையைச் சரியாகக் கணித்து, பிரமாதமாக வளர்த்துவிட்டு, அதன் மூலம் தாமும் வளர்ந்தவர். இந்தப் பாதையில்தான் இந்திய அரசியல் இனி ஓடும். எவ்ரி டெட்மேன் இஸ் ரிமெம்பர்டு ஹியர்... சர்ச்சில் பிறந்த நாளையோ, இறந்த நாளையோ அங்கே யாராவது நினைவு வைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறார்களா, என்ன? ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது: 'பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் பதினைந்து நாட்கள், ஒரு மாதம் மூடிவிட்டு முழுதும் சுத்தம் செய்வார்களே, அதுமாதிரி நாட்டை அப்படியே பூராவாக மூடி, க்ளீன் பண்ணி அப்புறம் திறந்துவிட வேண்டும்...!' ''

— சாருகேசி



* பத்திரிகைத் துறையில் அசாதாரண சேவை செய்த, முன்னாள் 'ஸ்டேட்ஸ்மன்' ஆசிரியர் ஸாஹே; முன்னாள் 'தைனிக் அஸ்லாம்' ஆசிரியர் ஹஸாரிகா; முன்னாள் 'தினமணி' ஆசிரியர் ஏ. என். சிவராமன், கார்ட்டூனிஸ்ட் ஆர். கே. லட்சுமண் ஆகியோருக்கு பி. டி. கோயங்கா விருது வழங்கினார் சுவாமி சின்மயானந்தா.

உரிமை கீதம்



படத்தை எடுத்தவர்கள் பூவா தலையா போட்டுப் பார்த்திருக்கிறார்கள். பூ விழுந்தால் புதுமையான கதை. தலை விழுந்தால் வழக்கமான ம சா லா. சுண்டி விட்ட காசு குறுக்கே நின்றுவிட்டது போலும். கொஞ்சம் புதுமையான கதையை வழக்கமான மசாலா சேர்த்து வதைத்திருக்கிறார்கள்.

கதையாவது: நேர்மையான அரசியல்வாதியான தன் அப்பனைக் கொன்றவனைத் தேடும் மகன். கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, உண்மையான கொலையாளியைத் தேடும் இளைஞன். இருவருமாகச் சேர்ந்து... எட்ஸெட்ரா. இதில், அண்ணன் — தங்கை பாசம். அம்மா — மகன் பாசம். அப்பா — மகன் பாசம். மோசமான போலீஸ். மகா மோசமான கவிழ்க்கும் அரசியல்வாதி. பணக்கார — ஏழை காதல் என்று சம்பிரதாயமான வெற்றிலைச் சுண்ணாம்பு.

படத்தை உருவாக்கி இருக்கும் டைரக்டர், காமிரா மேன் அத்தனை பேரும் இன்ஸ்டிடியூட் மாணவர்கள். காமிராவில் நேர்த்தி இருக்கிறது. குறிப்பாய்ச் சண்டைக் காட்சிகள். பிரபுவை நாற்காலியில் வைத்துக் கார்த்திக் தள்ளிவிட, பழைய கட்டடத்தின் ஓட்டடையைக் கலைத்துக் கொண்டு பிரபு பின்னேறும் காட்சி; புதிதாய்க் கட்டப்படும் மாளிகையில் கார்த்திக்கும், கொலைகாரனும் கண்ணாமூச்சி விளையாடி, ஜன்னல் வழியே வில்லன் வெளியே விழும் காட்சி; ஓடும் மோ. சைக்கிளிலிருந்து ஓடும் ஆ. ரிக்ஷாவிற்குள் தாவும் காட்சி — ஸ்டண்ட் காட்சிகளில் ஸ்டண்ட் மாஸ்டரும், காமிராக்காரரும் கைகோத்து விருந்து படைக்கிறார்கள்.

போலீஸுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு அம்மாவுக்குக் கொள்ளி; லிப்ட்டிலிருந்து லிப்டைப் பார்த்துச் சுடுதல் போன்ற பல வித்தியாசமான கட்டங்களும், விறுவிறுப்பான திருப்பு முனைகளும் கைவசம் இருந்த போதும், அதை நிதானமான நடையில் கொடுத்திருப்பது தான் ஒட்டவில்லை. கூசாமல் இன்னும் சில நூறடி களை வெட்டியிருந்தால் நறுக்கென்று இருந்திருக்குமோ!

க்ளைமாக்ஸ் — அரசியல்வாதி ரகசியமான வேறு பாதையில் போவார் என்று மேப்பைக் காட்டி இன்ஸ்பெக்டர் ஏதோ விளக்குகிறார். ஆனால் எறும்பு சாரி போல, கார்க்கூட்டத்துடன் அரசியல்வாதி எந்த ரகசியமும் இல்லாமல் வந்து மாட்டிக் கொள்கிறார். எதையும் பெரிதாகப் பண்ண வேண்டும் என்ற படபடப்பு படம் நெடுகத் தெரிகிறது.

சிரிக்க வைக்கும் ஜனகராஜ் திடீரென்று காணாமல் போகிறார். ரஞ்சனி அழகாகச் சிரிக்கிறார். அழகாக அழுகிறார். அநியாயமாக டிராமா செய்து விட்டுச் சாகிறார். பல்லவி புதுப்புது உடைகளில் வருகிறார். புஸ்வாணம் விடுகிறார். டிஸ்கோ சாந்தி டிஸ்க் களுக்க ஆடுகிறார். சாருஹாசன் முதல் ஓவரிலேயே அவுட்.

மனோஜ் — கியான் அதே பழைய நெடியுடன் இசையமைத்திருக்கிறார்கள்.

திறமை இருக்கும் கூட்டணி. நிச்சயம் அடுத்த படத்தை இன்னும் நன்றாகக் கொடுக்கப் போகிறார்கள்.

— ஜெயமன்மதன்

முறிந்து போகும் திருமணங்கள்

முறைப்படி ஜாதகம் பார்த்து நிச்சயித்தத் திருமணம்தான் அவர்களுடையது — நிச்சயதார்த்தம் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பின்தான் திருமணம் நடந்தது. அந்த ஆறு மாதங்களில் ரமா — ராஜா அடிக்கடி சந்தித்தார்கள், பேசினார்கள், நெருங்கிப் பழகினார்கள். மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால், திருமணமாகி ஒரு வருடம் ஆவதற்குள்ளாகவே 'இந்த வாழ்க்கை சரிப்படாது' என்று இருவருக்கும் தோன்றிவிட்டது. 'ரமாவுக்குச் சுயநலம் அதிகம்' என்ற தீர்மானம் ராஜாவின் மனத்தில் வேரூன்றிவிட்டது. 'ராஜாவுக்கு எதிர்பார்ப்புகள் அதிகம்' என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் ரமா.

பிறகென்ன...? டைவர்ஸ்தான்!

இருவரது பெற்றோரும் மீண்டும் முறைப்படி ஜாதகம் பார்க்க ஆரம்பித்தனர். ராஜாவுக்கு வேறொரு பெண் நிச்சயிக்கப்பட்டாள். மீண்டும் சாஸ்திரப்படி கன்னிகாதானம், திருமாங்கல்யதாரணம், சப்தபதி... எல்லாம் நடந்து, இப்போது புதுக் குடித்தனம் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தச் சடங்குகளுக்கெல்லாம் என்ன அர்த்தம்?

ரமாவுக்கு இன்னொரு மாப்பிள்ளை சீக்கிரமே கிடைத்து விடுவான் என்ற நம்பிக்கை அவள் பெற்றோருக்கு இருக்கிறது!

பெயர்கள் மட்டும் மாற்றித்தரப்பட்டுள்ள இந்த உண்மைச் சம்பவம், சமீப காலமாக விவாகரத்து மிகவும் சகஜமாகி விட்டதை உணர்த்துகின்றது. 1960 களில், சென்னை நகரில், ஆண்டொன்றுக்கு ஐம்பது அல்லது அறுபது விவாகரத்து மனுக்கள் மட்டுமே தொடுக்கப்பட்டு வந்தன. இன்று அந்த எண்ணிக்கை ஐந்நூறாகப் பெருகியுள்ளது. 1976 இல் ஹிந்து திருமணச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி கணவன் மனைவி இருவருமே விவாகரத்தை விரும்பினால், அவர்களுக்கு யோசிக்க ஆறு மாத அவகாசம் அளித்து, அதற்குப் பிறகும் அவர்கள் மனம் மாறாமல் இருப்பின் சுலபமாக அவர்கள் பிரிய வழிவகை செய்யப்பட்டது. (Divorce by mutual consent)


இந்தச் சட்டத் திருத்தம் செய்யப்பட்ட பிறகு விவாகரத்துக்கள் அதிகரித்துள்ளதோடு, மரபுகளைப் பொதுவாக மீற விரும்பாத மத்திய தர வகுப்பினரிடையே அவற்றுக்குப் பெருமளவு அங்கீகாரமும் கிடைத்துள்ளது. விவாகரத்துச் செய்தவர்களை அருவருப்புடனும் ஏளனத்துடனும் பார்ப்பது குறைந்து வருகிறது. விவாகரத்துச் செய்தவர்கள் மீண்டும் சாஸ்திரப்படி திருமணம் செய்து கொள்வது ஏற்கப்படுகிறது.

விவாகரத்துக் கோரிக்கைகளை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டியது நீதிமன்றங்களின் கடமை. சாத்தியமாயின், தம்பதியினரிடையே சமரசம் செய்து வைக்க முற்படுவதே முதல் முயற்சியாக இருக்க வேண்டும். ஆனால், வழக்குகள் ஏகமாய்க் குவிந்து கிடக்கும் சூழ்நிலையில், அவ்வாறு ஒவ்வொரு வழக்கையும் அணுகுவதற்கு நேரமும் பொறுமையும் யாருக்கும் இருப்பதில்லை. கர்நாடக மாநிலத்தில் விவாகரத்துப் போன்ற வழக்குகளை மட்டுமே கவனிக்க **Family Court** கள் தனியாக இயங்குகின்றன. இது ஒரு சிறந்த ஏற்பாடு.

சென்ற தலைமுறையைச் சேர்ந்த நீதிபதிகள் சுலபத்தில் விவாகரத்து வழங்கிவிட மாட்டார்கள். நீதிபதிகள் மட்டுமல்ல; வழக்கறிஞர்களே கூடச் சுலபத்தில் வழக்கை நீதிமன்றத்துக்குக் கொண்டு போக மாட்டார்கள். தாங்களே சம்பந்தப்பட்டவர்களிடம் பேசிப் பார்த்துச் சமரசத்துக்கு முயற்சி செய்வார்கள்.

கணவன் வங்கி அதிகாரி. மனைவி அரசுக் கல்லூரியில் பேராசிரியை. மனைவிக்கு மாற்றலாகிவிட்டது. கணவன் தன் வேலையையும் அதே இடத்துக்கு மாற்றிக் கொள்ள முயன்றிருக்கலாம். ஆனால் கௌரவம் இடங் கொடுக்கவில்லை! வேலையை விட்டுவிடும்படி மனைவியை வற்புறுத்தினான். மனைவி மறுத்து, மாற்றலாகி, வெளியூர் போய்த் தனியே குடித்தனம் செய்ய ஆரம்பித்தான். ஒரு வருஷம் இருவருக்கும் இடையே பேச்சு வார்த்தையோ, போக்குவரத்தோ இல்லை. மனைவி கம்மைப் பிரிந்து சென்று விட்ட

மரபுகளைப் பொதுவாக மீற விரும்பாத மத்தியதர வகுப்பினரிடையே விவாகரத்துக்குப் பெருமளவு அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆனால்......



...விவாகரத்துக்கு வலுவான காரணங்கள் இருந்தும், சம்பிரதாயங்களை மீறத் துணிவில்லாததால், அதைக் கோராமல் துன்பப்படுகிறவர்கள் ஏராளம்!

தாகக் கூறி விவாகரத்துக் கோரினன் கணவன். வழக்கில் ஈடுபட்டிருந்த ஒரு ஜூனியர் வழக்கறிஞர் தமது சீனியரிடம் இதைப் பற்றிக் கூற, சீனியர், கணவன் மனைவி இருவரையுமே மூன்றுவதாக ஓர் இடத்துக்கு மாற்றல் கேட்டுப் பெறச் செய்தார். அவர்கள் மீண்டும் இணைந்தனர்! ஆனால் இதுபோன்று இன்று நடப்பது மிக மிக அபூர்வம்.

விவாகரத்துக்கான முதல் முயற்சியை ஆண்களும் பெண்களும் சம அளவில் இன்று எடுக்கிறார்கள். பெண்கள் அதிகமாக அளிக்கும் காரணங்கள் — கணவன் நடத்தை கெட்டவன், குடிகாரன் அல்லது சூதாடுபவனும் இருக்கிறான் போன்றவை தான். ஆண்கள் அளிக்கும் காரணங்கள் இந்த அளவிற்கு வலுவானவையாக இருப்பதில்லை. பெரும்பாலும், மூன்றுவது மனிதரின் தலையீட்டால், ஒரு சிறிய மனஸ்தாபம் அனுவசியமாகப் பெரிதுபடுத்தப்பட்டு மனக்கசப்பு வளர்ந்ததாலேயே அவர்கள் விவாகரத்தை நாடுகிறார்கள். வரதட்சணைக் கொடுமை காரணமாக விவாகரத்துக் கோருபவர்கள் பொதுவாகக் குறைவுதான்.

கணவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டு, வேறொரு பெண்ணிடம் உறவு கொண்டுள்ளதைக் காரணம் காட்டி விவாகரத்துக் கோரும் பெண்களின் எண்ணிக்கை முன்னைப்போதையும் விட அதிகரித்துள்ளது. பெண்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து விழித்துக் கொண்டுள்ளதைச் சுட்டும் ஓர் ஆரோக்கியமான அடையாளம் தான் இது. ஆனால், எல்லா வகுப்பினரிடையேயும், பெண்கள் வழிதவறிச் செல்வதும், திருமண பந்தத்தை மதிக்காமல் வேறொரு ஆணுடன் உறவு வைத்துக் கொள்வதும் கூட மெள்ள அதிகரித்துக் கொண்டு வருகிறது.

உயர் பதவி வகித்த ஒருவர், தம் மனைவியைப் பார்ட்டிகளுக்கு அழைத்துச் சென்று, சகஜமாக எல்லோருடனும் பேசிப் பழகவும், மதுபானம் அருந்தவும் வற்புறுத்தினார். ஆரம்பத்தில் தயங்கிய அவர் மனைவி, சீக்கிரமே அந்த வாழ்க்கை முறையைப் பழகிக் கொண்டு, கணவனுக்கே துரோகம் செய்யத் துணிந்து விட்டார். மகிழ்ச்சியாக இருந்த அவர்கள் மணவாழ்க்கை இன்று முறிந்து போய்க் கிடக்கிறது. அவர்களது மூன்று குழந்தைகளும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டனர்! அவர்கள் மூவரும் அசாதாரண மனப்பாதிப்புக்குள்ளாகியிருப்பதில் வியப்பென்ன?

இது ஒருபுறமிருக்க, ஆண்கள், நியாயமான காரணமின்றி மனைவியைத் துன்புறுத்தியும் மிரட்டியும் கட்டாயப்படுத்தி, விவாகரத்துக்குச் சம்மதிக்கச் செய்து, அதற்குப் பிறகு பணத்துக்காக வேறு திருமணம் செய்து கொள்வதும் சகஜமாக நடந்துகொண்டு தான் இருக்கிறது. சமுதாய நீதியைச் சட்டத்தால் மட்டுமே வழங்க முடியாது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்!

பொதுவாக, திருமணமான முதல் மூன்று வருடங்களில் விவாகரத்துக் கோருவதும், பத்து வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளையுடையவர்கள் விவாகரத்துக் கோருவதும் அரிது. அதேபோல் வயதான தம்பதியிடம் விவாகரத்து என்ற பேச்சுக்கே இடமிராது. அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அனுசரணையாக நடக்கப் பழகியிருப்பார்கள் என்று நாம் எண்ணினோமானால் தவறு செய்தவர்களாவோம்! உதாரணமாக டாக்டர் சந்திரன் தம்பதியை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய இரு குழந்தைகளுக்குமே திருமணமாகி விட்டது; இரண்டு அருமையான பேரக் குழந்தைகளும் பிறந்தாகிவிட்டது... இப்போது சந்திரன் தம்பதி விவாகரத்துக் கோரி மனுச் செய்துள்ளார்கள்! இருவரும் சிறந்த விஞ்ஞானிகள். அவரவரது அலுவலக வாழ்க்கையில், அவரவரது நன்மதிப்பையும் பெற்று, கொடிகட்டிப் பறப்பவர்கள்... ஆனால் சொந்த வாழ்க்கையில், பொறுப்புக்கள் முடிந்து, ஓய்வும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்க வேண்டிய வேளையில் மன வருத்தத்தையும் துன்பத்தையும் மட்டுமே தேடிக் கொண்டுள்ளார்கள். காரணம் — அவரவர் அலுவலகப் பொறுப்பு மிகுதியாகி விட்டதால் தாம்பத்தியத்தில் கிடைக்கும் சிறிய சந்தோஷங்களுக்காக நேரம் ஒதுக்க முடியவில்லை. இதில் ஒருவரையொருவர் பழி சுமத்திக்கொண்டு நிற்கிறார்கள். இவர்களுக்கு இன்று டைவர்ஸ் கிடைத்துவிடும். ஆனால் இதுவே இருபது ஆண்டுகளுக்கு முன்னர் என்றால் நடந்திருக்கக் கூடியதே வேறு!

அறுபது வயதுக் கிழவர் ஒருவர், தம் மனைவி தம்மைப் பிரிந்து வாழ்வதைச் சுட்டிக் காட்டி விவாகரத்துக் கோரியிருந்தார். கிழவருக்குத் தம் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்வதில் விருப்பமில்லை. கௌரவம் இடங்கொடுக்கவில்லை. அவர் மனைவியோ மருமகளின் உபசரிப்பில் கடைசிக் காலத்தைக் கழிக்க விரும்பினார். பிள்ளை வீட்டுக்குப் போய்விட்டார். மனைவி தம்மைப் பிரிந்து சென்று விட்டதாக வழக்குத் தொடுத்துவிட்டார் கிழவர்! வழக்கை விசாரித்த நீதிபதி ஹரிஹர அய்யர் அம்முதியவரைத் தம் அறைக்குத் தனியே அழைத்து விசாரித்தார். பிள்ளைகள் தம்மை அழைக்காத போது, தாமே எப்படி அவர்களுடன் போய் இருப்பது என்றார் முதியவர். உடனே ஹரிஹர அய்யர் அம்முதியவரின் மகனை வரவழைத்து, விஷயத்தை விளக்கினார். நீதிபதியின் முன்னிலையில் மகன் அப்பாவை வணங்கித் தம் வீட்டுக்கு அழைக்க, அவரும் மகிழ்ச்சியுடன் வருவதாக ஒப்புக் கொண்டு போய்ச் சேர்ந்தார்!

இத்தகைய மனப்பான்மை உடைய நீதிபதிகளும் இன்று இல்லை; அதற்குரிய அவகாசமும் இன்றைய பரபரப்பான உலகில் இல்லை; விவாகரத்து நாடி வருகிறவர்களிடம் பொறுமையும் கிடையாது.

ஒத்த கருத்து, சிந்தனை உடையவர்களா கவோ அல்லது ஒரே தொழில் செய்பவர்க ளாகவோ இருப்பின், தம்பதிகள் சந்தோஷ மாக இருக்க முடியும் என்பதோ, காதல் மணம் புரிந்து கொண்டவர்களுக்குப் பிரச் னைகள் இராது என்பதோ மாயையான நம் பிக்கைகள்தான்.

சுனில்... மீனாக்ஷி... ஆமாம்! காதல் திரு மணம்தான் அவர்களுடையது. அப்பா ரௌத்திரமூர்த்தியாகி எதிர்க்க, அம்மா கெஞ்சிக் கூத்தாடி அவரைச் சாந்தப்படுத்த, உற்றார் ஏச, ஊரார் வம்பு பேச, இவர்கள் திருமணம் எல்லாவற்றையும் மீறி இனிதே நடந்தேறியது. இளைய தலைமுறையினருள் பலருக்குச் சுனில் — மீனாக்ஷி திருமணம், காதலை நிறைவேற்றிக் கொள்ளும் துணி வைத் தந்த ஒரு முன்னுதாரணமாக விளங்கி யது... எல்லாம் இரண்டு வருடங்களுக்குத் தான்... மூன்றாவது திருமண தினத்தன்று அவர்கள் விவாகரத்தின் விளிம்பை எட்டி யிருந்தார்கள்! காலம் அப்படியாகி விட்டது!

பழைய பண்பாட்டையும் பாரம்பரியத் தையும் கட்டிக் காக்கும் நோக்குடன் மட் டுமே நாம் விவாகரத்தை எதிர்க்கக் கூடாது தான். ஆனால் பெருகிவரும் விவாகரத்துக் கள், ஒரு சமுதாயத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அடையாளம் அல்ல என்பதை யும் நாம் மறுக்க முடியாது.

சில நேரங்களில் விவாகரத்து விடுதலை யாக அமைவது உண்மைதான். ஆனால் விவாக ரத்துக்குப் பிறகு மனம் புண்படாமல் எந்த விதப் பாதிப்பும் இன்றி ஒருவர் சகஜ வாழ்க்கை வாழ்வது அரிது. குழந்தைகள் இருப்பின், அவர்களுக்கு ஏற்படும் பாதிப் பைப் பற்றித் தனிக் கட்டுரையே எழுத லாம். 'உனக்கு அப்பாவுடன் இருக்க இஷ் டமா; அம்மாவுடன் இருக்க விருப்பமா?' என்று ஒரு குழந்தையிடம் கேள்வி கேட்டுத் திணறடிப்பது எவ்வளவு கொடுமை! மிகச் சிறிய குழந்தையாய் இருந்தாலோ, பொரு ளாதார, மற்றும் இதர வசதிகளைக் குழந்தைக்குத்தரக் கூடியவரிடம் அக்குழந்தை ஒப்படைக்கப்படுகிறது.

தாய் அல்லது தந்தை இறந்துவிட்டால் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்பை விடவும் தாயும் தந்தையும் பிரிந்து வாழ்கின்றனர் என்னும் போது குழந்தையின் உள்ளத்தில் ஏற்படும் பாதிப்பு அதிகமானது மட்டுமல்ல, கொடுமையானது. குழந்தையின் ஏக்கங்களை எழுத்தில் வடிக்க இயலாது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் குழந்தை படுகிற அவதியை யாரும் முழுமையாக உண ரவே முடியாது!

எல்லாம் சரிதான், விவாகரத்துக்கு வலுவான காரணங்கள் இருந்தும்கோராமல், 'விதியே' என்று பொறுத்துக் கொண்டிருப் பவர்கள் பல்லாயிரக்கணக்கில் இல்லையா? இருக்கிறார்கள்தான். சமுதாயம் சிரிக்குமோ என்று அஞ்சியும் பரம்பரையாக வந்த சம்பிர தாயங்களை மீறத் துணிவின்றியும்



உடலாலும் உள்ளத்தாலும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் மனைவியர் மட்டு மல்ல; கணவன்மார்களும் ஏராளம் உண்டு! இதுவும் ஆரோக்கியமானதல்லதான். ஆனால் படிப்படியாக இந்த நிலைமை மாறி வருகிறது.

Mutual consent இல்லாத நிலையில் தம்பதி களில் ஒருவர் திருமணமான பின் மதம் மாறி னாலோ, திருமணத்துக்கு முன்னரே கணவன் அல்லது மனைவிக்கு மனநிலை சரியில்லாத உண்மை மறைக்கப்பட்டுத் திருமணம் நடந் திருந்தாலோ, வீ. டி., தொழுநோய் போன்ற குணப்படுத்த முடியாத வியாதி களுடையவராய் இருந்தாலோ, (தொழு நோயைக் குணப்படுத்த முடியும் என்று இப்போது நிறைய விளம்பரப்படுத்தினாலும், இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படவில்லை) ஒருவரால் மற்றவரது உடலுக்கோ உள்ளத் துக்கோ துன்பம் விளைவிக்கப்பட்டாலோ விவாகரத்துக் கோரிப் பெறலாம்.

விவாகரத்துப் பெறுவது கிள்ளுக்கீரை என்று சிலர் நினைக்கிறார்கள். ஊர் வழக்கப் படி, பஞ்சாயத்துக் கூடி, 'கல்யாணத்தைக் கலைப்பது;' சினிமாக்களில் அடிக்கடி காண் பிக்கப்படுவது போல் மனைவியிடம் கணவன் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு வேறு திருமணம் செய்து கொள்வது போன்றவை சட்டப்படி செல்லுபடியாகாது.



"இந்தப் பத்திரிகை ஆசிரியர் ரொம்பப் பயந்த சுபாவம்..."

"எப்படி?"

"அடுத்த எலெக்ஷனில் ஜானகி அணி ஜெயிக்கும், அல்லது ஜெயலலிதா அணி ஜெயிக்கும். ஒருவேளை இரண்டுமே கூட ஜெயித்து விடலாம்' னு தலையங்கம் எழுதி யிருக்காரே!"

— படுதலம் சுகுமாரன்.

எந்த மனித உறவின் வெற்றிக்கும் மனம் விட்டுப் பேசுவதும், ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுப்பதும், ஒருவரது தனித்தன்மையை மற்றவர் மதிப்பதும் அத்தியாவசியம். தாம்பத்திய வாழ்க்கைக்கோ இக்குணங்கள் இன்றியமையாதவை. இக்குணங்கள் இல்லாதவர்கள் விவாகரத்தால் தற்காலிக விடுதலையுணர்வு பெறக் கூடும். ஆனால் இவர்கள் வேறு திருமணம் செய்து கொண்டாலும் அதே பிரச்னைகள் தொடரத்தான் செய்யும். எனவே, திருமண பந்தத்துக்குள் இறங்கும் முன்னரும் சரி, அதற்குப் பிறகு பிரச்னைகள் எழுந்தாலும் சரி, நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக் கொண்டு சுய விமர்சனம் செய்து கொள்வது நல்லது. சுய விமர்சனம் என்பது இருதரப்பிலும் தன் குற்றம் காண்பதற்காக இருக்க வேண்டும்; அவ்வாறின்றி தன்னைத்தானே நியாயப்படுத்திக் கொள்வதாக அமைந்தால் விம்புதான் வளரும்.

இதமான ஒரு சொல், ஒரு பாசப் புன்னகை, மனம் வருந்தி உகுக்கப்படும் ஒரு சொட்டுக் கண்ணீர், நீள்கின்ற ஒரு நேசக் கரம் — இவை எத்தனையோ இடையூறுகளை நீக்குகின்றன; அற்புதங்களைச் சாதிக்கின்றன. இதனை உணர்ந்து இல்வாழ்க்கையை வெற்றிபெறச் செய்யும் தம்பதிகளே சமுதாயத் திருமண மண்டபத்தின் ஆதாரத் தூண்கள்.

— பிரபல வழக்கறிஞர் ஒருவரது பேட்டியின் தொகுப்பு: **சீதா ரவி**

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்:
கே. வி. ஆனந்த்

நடித்துள்ளவர்கள்:
கமலா, சாந்தாராம்.

"என்ன தலைவரே! காலையில் எழுந்ததும் ஜாகிங் ஓடிவர வேண்டியதுதான்: அதுக்காக இப்படிப் பத்துக் கிலோ மீட்டரா ஓடி வர்றது?"

"என்ன செய்யறதுப்பா, ஒரு வெறி நாய் என்னைத் துரத்திக்கிட்டு வந்துடுச்சு!"

— கடுவை கோபால்சாமி.





கைதி 1: உன்னோட ஞாபக மறதியால் மூணு மாசம் கூடுதலா ஜெயிலில் இருக்க வேண்டி ஆயிட்டதா? அது எப்படி?

ஆட்டோ டிரைவரான கைதி: ஆமாண்ணே, நீதிபதி, 'ஆறு மாசச் சிறைத் தண்டனை' என்றதும் ஞாபக மறதியா, 'மேலே ஏதாச்சும் போட்டுக் கொடுங்க'ன்னு கேட்டுட்டேன்!"

— சிறை. அ. கதிர்வேல்.



பைத்தியத்தை உண்டாக்கும் நாய்க்கடி (RABIES) நோயால் ஒவ்வொரு வருடமும் நாற்பதாயிரம் பேர் இறந்து வருகின்றனர். இந்தியாவின் வீதிகளில் தெரு நாய்கள் உலா வருவது நிற்கும் வரை 'ராபீஸ்' நோயைத் தடுக்க முடியாது!

— கே. ஜி. எஃப். பழனிச்சாமி.



கருத்து: சர்பு!



திகைக்க வைக்கிறார் திகயத்

“உங்கள் மனைவியோ, பெண்ணோ, உடம்பின் பெரும் பகுதி தெரிகிற மாதிரி புடைவை உடுத்தி, ஜாக்கெட் போட்டுக் கொள்ளக் கூடாது. உடம்பு முழுக்க மூடும் சல்வார்—கம்மீஸ்தான் அணிய வேண்டும். உங்கள் வீட்டுக் கல்யாணங்களுக்கு நிறையப் பேரை அழைக்கக் கூடாது. கல்யாணச் சாப்பாடும் கொஞ்சம் பேருக்கு, கொஞ்சமாகத்தான் போட வேண்டும். ஏராளமாக வாரி இறைத்துப் படாடோபமாகச் செலவு செய்யாதீர்கள்!''

— இப்படி உத்தரவுகள் போட்டிருப்பவர், ஒரு மதத் தலைவரோ அரசியல் தலைவரோ அல்ல!

உத்தர பிரதேசம் மீரட் நகரில், லட்சக்கணக்கான விவசாயிகளை வரவழைத்து, கிட்டத்தட்ட ஒரு மாத காலம் உ. பி. அரசுக்கும் மத்திய அரசுக்கும் தலைவலி உண்டாக்கிய ஐம்பத்தொரு வயது மகேந்தர் சிங் திகயத். இவர்தான் பாரதிய கிஸான் யூனியன் எனப்படும் பி. கே. யூ. வின் தலைவர். 'மீரட்டின் மகாத்மா' என்று பல பத்திரிகைகள் இவருக்குப் புகழ்மாலை சூட்டிவிட்டன. காரணம்: ஐந்து லட்சம் பேர் பங்கு கொண்ட போராட்டத்தை அமைதியாக நடத்தியது மட்டுமல்ல, நிலைமை கட்டுக்கடங்காமல் போன போதும் நிதானம் இழக்காமல் இவர் செயல்பட்டதுதான்.

'நாங்கள் ஏராளமான போலீஸ் படையைக் கொண்டு வந்து இங்கே குவித்திருந்தோம். அது தேவையே இல்லை என்று இப்போதுதான் தெரிகிறது. இத்தனை பெரிய ஜனசமுத்திரம் இவ்வளவு அமைதியாகவும் கட்டுப்பாடாகவும் இருப்பது ஆச்சரியமாய் இருக்கிறது.' என்று சொல்லியிருக்கிறார் போலீஸ் அதிகாரி பகத்.

திகயத் அதிகம் படித்தவரல்ல. முரட்டுத்தனமான அரசியலும், அரசியல் தலைவர்களும் அவருக்கு ஒத்து வராது. சரண் சிங்கின் மனைவி காயத்ரி தேவியாகட்டும், மகன் அஜித்சிங் ஆகட்டும், வி. பி. சிங் ஆகட்டும், 'கட்சியை விட்டு வந்தீர்களானால்தான் உங்களுக்கு இங்கே மேடை!' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

மகேந்திர சிங் திகயத் கேட்பது என்ன?

விளைபொருள்களுக்கு லாபகரமான விலை நிர்ணயித்தல், மிகக் குறைந்த மின்சாரக் கட்டணம், நிலவரி குறைப்பு, மேம்பட்ட பாசன வசதிகள் போன்ற அவரது முப்பத்தைந்து கோரிக்கைகளில், பதின்மூன்று ஏற்கெனவே அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டன. மீதி இருபத்திரண்டில், ஐந்து மிக முக்கியமான நிபந்தனைகள்: கரும்புக்கு, க்விண்டலுக்கு முப்பத்தைந்து ரூபாய், சென்ற வருடத்து மின்சாரத் தொகையை வசூலிக்கக் கூடாது, கடந்த ஆறு மாத நில வரியை விட்டுவிட வேண்டும், யூரியா உர விலையை க்விண்டலுக்கு நாற்றியைந்து ரூபாயிலிருந்து எண்பத்தைந்து ரூபாயாகக் குறைக்க வேண்டும். 1987 மார்ச்சில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின் போது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற வேண்டும்!

'இப்படி ஒரு போராட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று கடவுளே எனக்கு ஆணையிட்டிருக்கிறார்!' என்று திகயத் சொல்லுவது யாருக்கும் வேடிக்கையாகத் தெரியவில்லை. (சிறிது காலம் ஆக்ரா மனநோயாளிகள் விடுதியில் இருந்தவர் திகயத்).

கிட்டத்தட்ட ஒரு மாசத்துக்கு லட்சக்கணக்கான விவசாயிகளை மீரட்டில் அமைதியாகப் போராடச் செய்த திகயத், அரசு தங்கள் கோரிக்கைகள் சிலவற்றுக்குச் சம்மதிக்கப் போவதில்லை என்று அறிந்ததும், போராட்டத்தை விலக்கிக் கொண்டு, விவசாயிகளைத் தங்கள் ஊர்களுக்குத் திரும்பச் சொல்லிவிட்டதுதான் அவருடைய போராட்டத் தலைமையின் புத்திசாலித்தனம் என்று ஒரு பத்திரிகை விடாமல் தலையங்கங்கள் எழுதிப் பாராட்டின.

ஆனால் திகயத் சொல்லி விட்டார்:

''இது எங்கள் அரசு அல்ல. இது எங்கள் அரசாக இருந்தால்தானே வரியும், வட்டியும், மின்சாரக் கட்டணமும் செலுத்த வேண்டும்? இந்த அரசு எங்களைக் கண்டு கொள்ளாத வரையில், நாங்களும் இந்த அரசை லட்சியம் செய்யப் போவதில்லை. நாங்கள் ஒத்துழையாமை மேற்கொள்ளுவோம்!''

இந்தத் தீர்மானத்தோடு அமைதியான மறியல் முடிந்து விவசாயிகள் திரும்பியிருக்கிறார்கள்.

இப்படி ஒரு 'சஸ்பென்ஸ்'ஸை உருவாக்கி அரசைத் திகைக்க வைத்து விட்டுக் கையைக் கட்டிக் கொண்டிருக்கிறார் திகயத்!

— சித்தார்த்


இக்கோடையின் கடுமையை இனிமையாக்குங்கள்!
nafed
"சுவை மன்னர்கள்"
nafed
MIXED FRUIT JAM
nafed
MANGO PULP
nafed
APPLE JUICE
nafed
nafed
பரபரப்பூட்டும்
இன்சுவை ரகங்கள்:
டொமேடோ கெச்சப், பைன் ஆப்பிள் ஜூஸ்
தக்காளி ஜூஸ், மாங்கோ பல்ப், ஆரஞ்சு ஜூஸ்
மிக்சட் ப்ரூட் ஜாம், மற்றும் பல விதங்கள்
NAFED PROCESSED FOODS
"Cresent Court "2nd Floor, 963, Poonamallee High Road,
Madras-600 084. Phone: 665851. Telex: MS-7472.


கண்ணாடியிலே பாரு உன் முகத்தை!
அட்டகாசமா சிரிக்கறே!
பட்ஜெட் சலுகைகள்
ராஜீவை டிஸ்மிஸ் செய்ய சில எதிர்க் கட்சிகள் எனக்காக 30 கோடி முதல் 40 கோடி வரை செலவு செய்ய முன் வந்தனர்!
ஜெயில் சிங்
எதிர்க்கட்சிகள்
ஒத்திவைப்பு
கலவரம்
மாகாண கவுன்சில் தேர்தல்கள்



கல்கி

1988 மார்ச் 13
மலர் : 46 இதழ் 33
பிரபவ மாசி 30



பட்ஜெட் என்னும் பனங்காட்டு நரி!

“நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன? மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி,” என்பதாக ஒரு பழமொழி உண்டு. திவாரி சமர்ப்பித்துள்ள பட்ஜெட் இத்தகைய ஓர் எதிரொலியைத்தான் அனைவர் உள்ளங்களிலும் உருவாக்கியிருக்கிறது. பட்ஜெட் மிகவும் மோசமாகக் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் ‘ஏதோ இந்த மட்டில் தப்பினோமே’ என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். அந்த அளவில் நாமும் திவாரிக்கு நன்றி கூறுகிறோம்.

பட்ஜெட், விவசாயத்துக்கு அதிக முக்கியத்துவம் தந்து பல சலுகைகளை வழங்கியிருக்கிறது. இதனை, ‘தேர்தலில் வோட்டு அறுவடை செய்ய விதை தூவியிருக்கிறார் திவாரி’ என்று சிலரும், ‘கடுமையான வறட்சியை உத்தேசித்துச் சலுகைகள் காட்டியிருக்கிறார்’ என்று வேறு சிலரும், ‘கிராமப்புறங்களை மேம்படுத்திக் காந்திய நோக்கில் செயல்பட்டிருக்கிறார்’ என்று மேலும் சிலரும் வர்ணிக்கின்றனர். இதற்காகவும் திவாரிக்கு நன்றி கூறத்தான் வேண்டும். இந்தியாவின் ஆன்மாவான கிராமப்புறங்களை மறந்துவிட்டுச் செயல்படும் எந்த அரசும் உருப்படாது என்பதோடு நாட்டையும் குட்டிச்சுவராக்கியே தீரும். எனவே, மீண்டும் கூறுகிறோம்: “நன்றி மிஸ்டர் திவாரி!”

திவாரிக்குத் தெரிவிக்க வேண்டிய நன்றி இத்துடன் முடிந்து போகிறது. ‘பட்ஜெட் என்பது வெறும் கணக்கு வழக்கு அல்ல; நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ வேண்டிய கொள்கை வகுக்கும் சாதனம்’ என்று கொள்வோமானால் இந்த பட்ஜெட் ஒரு மகத்தான ஏமாற்று வேலையே!

நடந்திருப்பது என்ன? பட்ஜெட்டுக்கு முன்பாகவே பெட்ரோல் விலையைக் கடுமையாக உயர்த்திவிட்டது அரசு. மேலும் எஃகு, நிலக்கரி ஆகியவற்றின் விலைகளைக் கூட்டியது. தவிர, தபால் — தந்தி, டெலிஃபோன் கட்டணங்களைக் கணிசமாக ஏற்றியது. ரயில்வே பட்ஜெட் மூலம் ஏராளமான வருவாயைத் தேடிக் கொண்டது. இப்படி மக்களைக் கசக்கிப் பிழிந்து 3150 கோடிக்குமேல் பறித்துக் கொண்ட பிறகு பட்ஜெட்டில் 1535 கோடிதான் புதிய வரிகளை விதித்திருக்கிறோம். 920 கோடிக்குச் சலுகைகள் வழங்குகிறோம், எனவே , நிகரவரிவிதிப்பு 615 கோடிதான் என்று பாவலா பண்ணுகிறது அரசு. வழக்கத்துக்கு மாறாகச் சலுகைகளின் நீண்ட பட்டியலை முதலில் படித்துவிட்டுப் பிறகு வரிவிதிப்புக்கு வந்தார் திவாரி.

ஆகமொத்தம் நடப்பு ஆண்டுக்கு 3765 கோடிக்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். இதுகூடப் பரவாயில்லை. ஆனால் இதற்குமேல் 7484 கோடி பற்றாக்குறை என்று பட்ஜெட்டில் காட்டப்பட்டிருக்கிறதே, அதுதான் கொடிய வில்லன். விலைவாசிகள் உயர வழிவகுத்து மக்களை வதைக்கப் போவது இதுதான். நோட்டு அச்சடிப்பு, பணவீக்கம், விலைவாசி உயர்வு எல்லாம் படிப்படியாக நிகழும்.

பற்றாக்குறைக்கு ஏற்ப உற்பத்தி அதிகரித்தால் விலைவாசி உயராது என்று கூறப்படுவது உண்மைதான். ஆனால் இந்தப் புத்தகப் பொருளாதாரம் இங்கே நடைமுறையில் அமுலாகாது. காரணம், உற்பத்தி உயர்வுக்கு ஏற்ற சூழ்நிலையை அரசு உருவாக்காததுதான். தொழிலுற்பத்தி அதிகரிக்க, அடிப்படைத் தேவையான (infrastructure) அம்சங்களில் அரசு கவனம் செலுத்தாததோடு, மிக அதிகமான முதலீடுகளை நமது நாட்டில் பெற்றுள்ள அரசுத்துறை நிறுவனங்கள், கோடிக்கணக்கில் நஷ்டம் குவிப்பதில் மகத்தான சாதனை புரிகின்றன! அரசின் ஊதாரிச் செலவினங்கள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுமேயானால், இந்தியா பெருமிதத்தோடு முதலிடம் வகிக்கும்! விவசாய உற்பத்தியோ பருவ மழையை முற்றிலும் நம்பியிருக்கிறது. தனியார் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் தொடர்கின்றன. ஆனால் வேண்டியவருக்கு மட்டும் நைஸாகச் சலுகை தாராளமாகவே காட்டப்படுகிறது!

ஆகமொத்தம், பட்ஜெட் நரி, மேலே விழுந்து பிடுங்காமல் விட்டுவிட்டாலும் பணவீக்க, விலைவாசி உயர்வு நரிகள் நம் மீது பாய்ந்து குதறக் காத்திருக்கின்றன.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



படம் 1



படம் 2



படம் 3



படம் 4

குடிபோதையில் எம்.பி.கடத்தப்பட்டது பற்றி...?

* அ. மும்தாஜ்பேகம், நாவினிப்பட்டி.

? ஜானகி மதுரை வந்தபோது வழிநெடுக ரயிலை நிறுத்தி வரவேற்புக் கொடுத்ததோடு, மக்கள் வெள்ளமாகத் திரண்டதானது அவர் மீது மக்கள் கொண்டுள்ள உறுதியான பற்றைத்தானே காட்டுகிறது?

! பொது மக்களுக்கான வசதிகளைத் தாமதப்படுத்தி நாசமாக்குகிற பொறுப்பற்ற வெறியையே உணர்த்துகிறது. ஏழு மணி நேரம் ரயில் தாமதம். ரயிலில் பயணம் செய்த அத்தனை பேரும் ஜானகி ஆதரவாளர்களா என்ன?

*. லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்).

? பதவிக்காக நான் என்றுமே ஆசைப்பட்டதில்லை என நாவலர் கூறுகிறாரே?

! நம் நாட்டில் எந்தத் தலைவர்தான் பதவி மீது ஆசை வைக்கிறார்? பதவிதான் அவர் மீது ஆசை வைக்கிறது!

* ஏ. செந்தூர் பாண்டி, தூத்துக்குடி.

? லட்சக்கணக்கான வோட்டுக்கள் பெற்று நாடாளுமன்றம் சென்ற ஓர் எம். பி., 'நான் குடிப்பழக்கத்துக்கு அடிமை, அதனால் என்னைக் கடத்தி விட்டார்கள்' என்று அறிக்கை விட்டிருப்பது பற்றி...?

! இவரை வேட்பாளராக்கிய கட்சித் தலைமை முதல், வோட்டுப் போட்ட வாக்காளர் வரை அனைவரும் வெட்கப்பட்டால் போதாது; வருத்தப்பட்டுத் தலையில் அடித்துக் கொண்டு அழவேண்டும்! ஆனால் நமது ஜனநாயகத்தில் வெட்கம், மானம், மனச்சாட்சி என்றெல்லாம் ஏதாவது பாக்கியிருக்கிறதா என்ன? வோட்டும் மெஜாரிட்டியும் கிடைக்குமென்றால் நிர்வாணமாகச் சாலையில் நடக்கவும் தயாராகி விட்டார்கள்!

* ஆர். நாகராஜன், செம்பனார்கோவில்.

? நெடுஞ்செழியன் இடம் தொடர்ந்து இரண்டாம் இடம்தானே?

! இனிமேல் அதுவும் சந்தேகம்தான்!

* கு. கணேசன், சென்னை — 15.

? தமிழ்நாட்டிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு அரைகுறையாகக் காவிரி நீர் விட ஒப்புக் கொண்டதற்காக பெங்களூருக்குப் பறந்து சென்று ஹெக்டேக்கு ஜெயலலிதா நன்றி தெரிவித்திருப்பது எதைக் காட்டுகிறது?

! ஹெக்டேயின் சாமர்த்தியத்தை. அவர்

தண்ணீரும் நிறையக் கொடுத்து விடவில்லை; மின்சாரமும் பெற்றுக் கொண்டு விட்டார்; நன்றியை வாங்கிக் கொண்டு நல்ல பெயரும் சம்பாதித்து விட்டார்!

*** பி. ராஜசேகர், மதுரை.**

? போஃபோர்ஸ் விவகார ஆய்வுக் குழு முன் சாட்சியம் அளிக்க ராஜீவ் அழைக்கப் படுவாரா?

! அவர் அழைக்கப்பட்டால் என்ன; அழைக்கப்படாவிட்டால் என்ன? கமிஷன் தீர்ப்பு என்னவாக இருக்கப் போகிறது என்பது நமக்கு இப்போதே தெரியுமே!

*** டி. ஸ்ரீராமன், குடியாத்தம்.**

? கல்கி வோட்டு யாருக்கு?

! 'ஜ'வுக்கு.

*** கி. நாகராஜன், பழனி.**

? ஒரே நாளில் இருபத்தேழு ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை கவர்னர் மாறுதல் செய்திருக்கிறாரே?

! இருபத்திரண்டு அரசியல் நியமனங்களை (தண்டச் சம்பளம்) நீக்கியதில், பல அதிகாரிகளை அந்த இடங்களில் அமர்த்தியதில், வரிசையாகப் பல மாறுதல்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆட்சி மாறும்போது இப்படி அதிகாரிகளை ஒரு முறை விழித்தெழ உலுக்கி விடுவது சகஜமே.

*** எஸ். ரஷீத் அலி, திருச்சி.**

? பல அலுவலர்களுக்கு இருப்பதுபோல் அரசியல்வாதிகளுக்கும் கல்வித் தகுதி, வயது உச்ச வரம்பு என்று நிர்ணயம் செய்வது நன்றாக இருக்குமல்லவா?

! கோடிக் கணக்கில் லஞ்சம் வாங்கிய, வாங்குகிற அமைச்சர்கள் எல்லாம் நன்றாகப் படித்தவர்கள்தான் நண்பரே! அவர்களிடம் கல்வித் தகுதி இருக்கிறது; பண்பாடு இல்லை.

*** எம். மோகன், பவானி சாகர்.***

? கிராமங்களில் தொலைபேசி வைக்கப்படும் என்று ராஜீவ் தெரிவித்துள்ளாரே, இதனால் இந்தியா எவ்விதத்தில் முன்னேறும் என்று அவர் கருதுகிறார்?

! எத்தனையோ கிராமங்களுக்குச் சாலை வசதி கூட இல்லாத நிலையில் ஓர் அவசரத்துக்குத் தொலைபேசியாவது அருகாமையில் இருந்தால் எவ்வளவோ வசதிதான். நிச்சயமாக முன்னேற்றம்தான். ஆனால் இந்த வசதி எப்போது ஏற்படப் போகிறது என்பதும் அப்படியே உருவானாலும் அந்த ஃபோன் சரியாக வேலை செய்யுமா என்பதும்

யோசிக்க வேண்டிய அம்சங்கள்.

*** வெ. ரவி, சென்னை — 5.**

? நம்ம ஊர் சட்டசபையில் நடந்த நிகழ்ச்சிகள் அசிங்கமானவை என்றால் 23.2.88 ராஜ்ய சபாவில் நடந்தவை...?

! அசிங்கத்திலும் அசிங்கமானவை; இது திறந்த சாக்கடை; அது பாதாளச் சாக்கடை! ஆபத்து அதிகம்!

*** குரு வைத்தியநாதன், கோவிந்தபுத்தூர்.**

? இந்திய ஜனநாயகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

! கூட்டத்துக்குக் கூலி கொடுத்து ஆள் பிடித்து, அவர்களைச் சட்டம், விதி முறைகளை மீறி லாரிகளில் ஆடுமாடு போல் அடைத்து வந்து உயிர்ப்பலி கொடுக்கும் கொடுமையைக் கண்டு கொண்டிருக்கிறது. தடை விதிக்குமா தமிழக அரசு? அல்லது நாளை இங்கு ராஜீவ் பங்கேற்கும் காங்கிரஸ் கூட்டத்துக்கும் இப்படித்தானே ஆள் பிடித்து வரவேண்டியிருக்கும் என்பதால் கண்டு கொள்ளாமல் இருந்து விடுமா?

*** துரை இராஜேந்திரன், திருப்பூர்.**

? ஜெயலலிதாவை நம்பி ஏமாற வேண்டாம் என்கிறாரே பாக்யராஜ்?

! இவரை மட்டுமே நம்பி ஏமாந்தால் போதும் என்கிறார் போலும்!

*** பாக்கியமுத்து, திருச்சி — 20.**

? ஆயிரம் பெருச்சாளிகளின் பிராண்டலை விட ஒரு சிங்கத்தின் பிடியில் சிக்குவது மேலானதுதானே?

! அப்படித்தான் பலரும் நினைப்பதாகத் தோன்றுகிறது. சமீபத்தில் சென்னை கிறிஸ்துவக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட ஆய்வின்படி இன்று தமிழக மக்களிடையே மிகப் பிரபலமான அரசியல்வாதி மு. கருணாநிதி; அடுத்தது ராஜீவ் காந்தி; மூன்றாவது ஜெயலலிதா; நான்காவதாகத்தான் ஜானகி.

*** ரூ. 15 பரிசு பெறுபவர்:**
எம். மோகன்,
V.D.C.; T-6, ஸ்டேட் பாங்க் சாலை,
பவானி சாகர் — 638 451.

மாமியார் சார்பிலும் நன்றி!

* என்னதான் தன் மருமகளைப் பற்றி ஒரு மாமியார் குறை சொன்னாலும், ஒரு மானப் பிரச்னையோ, குடும்பப் பிரச்னையோ வந்தால் மருமகளை விட்டுக் கொடுக்கமாட்டார் என்பதைச் சிறுகதை மூலம் நிரூபித்துள்ளார் ருக்மணி பார்த்தசாரதி! எனது சார்பிலும், எனது மாமியார் சார்பிலும் நன்றிகள்!

மதுரை — 16, மாலதி ராமதாஸ்.

* மனிதன் இறந்தாலும் அவனது இலட்சியங்கள் இறப்பதில்லை என்ற உண்மையைச் சொன்ன தமிழன்பனின் கவிதை உள்ளத்தில் உட்கார்ந்து கொண்டது.

பையூர், கா. மணி.

* கா. க. வேலாயுதம் எழுதிய 'பிக்பாக்கெட் ஜாக்கிரதை' என்ற கதை காவல் துறையை மிகவும் இழிவு படுத்துவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட கதைகளைத் தங்கள் வாசகர்கள் படிக்கும் போது காவல் துறையின் மீது மிகவும் தாழ்ந்த அபிப்ராயமே ஏற்படும்.

முன்னிக்குளம், எல். சிவராமகிருஷ்ணன்.

* போலீஸ்காரர்களின் சில நடவடிக்கைகளைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டி விட்டார் கா. க. வேலாயுதன், 'பிக்பாக்கெட் ஜாக்கிரதை' சிறுகதை மூலம். அனைத்து சம்பவங்களும் கண்முன்னே நடப்பதைப் போல் இருந்தது. பாராட்டுக்கள்!

சீர்காழி, ஜெயா சண்முகம்.

* விவரமறியா விடலைப் பருவத்துக் காதலை, வெகு இயல்பாய் இளமைத் துள்ளலுடன் விவரித்த பிருதிவிராஜின் ''கனவுப் பறவைகள்'' சிறுகதையை ஒரு முறைக்கு இருமுறையாய்ப் படித்து ரசித்தேன்!

சைதாப்பேட்டை, இரா. சி. இரஞ்சன்.

* கடைசி பக்கத்தில் வெளியான தலைமைச் செயலாளரைப் பற்றிய விவரம் சுவையானது. சரியான நேரத்தில் சரியான நபர் நமது தலைமைச் செயலராக வாய்த்தது நமது அதிர்ஷ்டமே.

விருத்தாசலம், சித்ரபானு.

* பாரி நிறுவனத்தின் வரலாற்றையும் அதற்கு ஏற்பட்ட சரிவையும்; அதைச் சரிப்படுத்திய எம். வி. அருணாசலத்தின் முயற்சிகளையும் விளக்கியது பாராட்டத்தக்கது. இதைப் படிக்கும் ஒவ்வொரு இளைஞனுக்கும் 'சோதனையையும் மீறி சாதனை படைக்கலாம்' என்ற உற்சாக உணர்வு தோற்றிக் கொள்ளும் என்பது உறுதி.

சென்னை — 14, ஜே. பி. பொன் பிரபாகர்.

* மூன்று தலைமுறைகளைக் கண்ட புதிய கவர்னருடைய திறமையின் பின்னணியைப் படிக்கும் போது சகலத்திலும் குழம்பிப் போய்க் கிடக்கும் தமிழகத்திற்கு ஏற்ற கவர்னர்தான் வந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

ராமநாதபுரம், சு. மூர்த்தி.

* கா. க. வேலாயுதன் எழுதிய சிறுகதையில் மிகைப் படுத்துதல் ஏதுமில்லை. அதே சமயத்தில் ''தில்லி தபாலில்'', டெல்லி போலீஸாரின் சேவை பற்றிய செய்தி, ஆச்சரியக் கடலில் மூழ்கவைத்து மனத்திற்கு ஆறுதலைத் தந்தது.

காட்டூர், எஸ். அருள்மொழி.

* பட்ஜெட் என்றாலே 'விலையேற்றத்திற்கான அதிகாரபூர்வமான அறிக்கை' என்று பொருளாகிவிட்ட இக் காலத்தில், பொருளாதாரம் சீர்குலையாமல் இருக்கும் வகையில், சி. எஸ். சொன்னபடி ஒரு நல்ல பட்ஜெட்டை அடுத்த வருடமாவது எதிர்பார்க்கலாமா.....?

பழனி — 15, கி. நாகராஜன்.

* 'பட்ஜெட் என்றால் என்ன? என்பதை மிகத் தெளிவான முறையில் வெளியிட்டமை பாராட்டத் தக்கது. மக்கள் தொகை என்பது சிறந்த செல்வம்தான். ஆனால் அந்தச் செல்வத்தின் மதிப்பு அதன் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; அறிவின் தன்மையைப் பொறுத்தே இருக்கிறது, என்ற கருத்து எவ்வளவு முக்கியமானது! மொத்தத்தில் பேட்டி ஜொலித்தது.

விருத்தாசலம், ஏ. டி. பூவராகன்.

* வருமான வரி விலக்கு உச்சவரம்பு பற்றி சி. சுப்பிரமணியம் கூறிய கருத்து ஏற்கத்தக்கதல்ல. நேரடி வரி என்பது வசதியானவர்களிடமிருந்து பெறப்படுவது என்ற சொல்லே கேள்விக்குரியது. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பது போல; அத்தகைய வருமானம் உள்ள ஒருவர், ஸ்டேடஸுக்கு ஏற்றபடி சமுதாயத்தில் வாழவேண்டியுள்ளது. அதன்படி அவருக்குச் சம்பளம் வாங்கிய முதல் வாரத்திலேயே கையைக் கடிக்க ஆரம்பித்து விடுகிறது. இத்தகையவர்கள், அக்டோபர் முதல் மார்ச் வரை மாதா மாதம் ஒரு கணிசமான தொகை வருமான வரி என்ற அளவில் பிடிக்கப்படும்போது படும் கஷ்டம் சொல்லி மாளாது.

திருச்சி — 18, ராஜி ராதா.

* 28.2.88 இதழ் தலையங்கம் டாப், எக்ஸலண்ட். நடந்ததை, நடப்பதை, நடக்கப் போவதை, சரியாகக் கணித்து எழுதிய பாங்கு மெச்சத்தக்கது. சி. எஸ். பற்றி எழுதிய வார்த்தை நூற்றுக்கு நூறு உண்மை. சி. எஸ். இன் சேவை தமிழ்நாட்டுக்குத் தேவை. பயன்படுத்துவோர் நல்ல பலன் அடையலாம். தமிழ்நாடு சுபிட்சம் அடையும்.

அவினாசி, சீதா சந்திரன்.

* திரு. சி. சுப்பிரமணியம் ஒரு வெகுஜனத் தலைவரே அல்ல. இன்றைய வாக்காளர்களில் ஐம்பது சதவிகிதத்தினருக்கு மேற்பட்டோர் 'யார் இந்தச் சுப்ரமணியம்' என்றே கேட்க முனைவர். ஜெயலலிதா அலையிலோ அல்லது மீண்டும் அடிக்கப் போகும் கருணாநிதி அலையிலோ சி. எஸ். அடித்துச் செல்லப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?

சென்னை — 2, ச. இராமலிங்கம்.

"தெரிந்து குற்றம் செய்தவர்களுக்கும், கொலை பாதகத்தில் ஈடுபட்டவர்களுக்கும் ஒரு வழக்கறிஞர் ஆஜராவது தார்மிக ரீதியில் சரியா?"என்று கேட்பவர்களுக்குத் தக்க பதிலைச் சொல்கிறது இந்த உண்மைச் சம்பவம்...

பரீட்சைகள் முடிந்து, கட்டவிழ்ந்த உணர்வோடு ஊருக்குத் திரும்பியிருந்தான் கிரீஷ். இரண்டு நாட்கள் நிம்மதியாய்ச் சாப்பிட்டுத் தூங்குவதில் கழிந்தன. மூன்றும் நாள், அக்கா சாந்தி வேலைக்குப் புறப்படும் முன் சொல்லிவிட்டுப் போனாள்: ராம் தயாள் வீட்டில் இன்னிக்குச் சாயங்காலம் ஒரு 'பார்ட்டி' இருக்கு. நீ அஞ்சு மணிக்குக் காரை எடுத்துண்டு அங்கே நேரே போயிடு. நான் வேலை முடிஞ்சதும் நேரே அங்கே வந்து சேர்ந்துடறேன்.

கிரீஷ் சரியாக ஐந்து மணிக்கு ராம்தயாள் வீட்டில் இருந்தான். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். சூழ்நிலை ரம்மியமாக இருந்தது. பங்களாவின் பின்புறம் பசும்புல் தரை. சோலையாகச் சில மரங்கள். கூடு திரும்பிய பறவைகளின் ஒலியோடு இளைஞர்களின், யுவதிகளின் கலகல சிரிப்பொலி கலந்தது.

''ஹலோ!'' — யாரோ தோளைத் தட்டத் திரும்பிப் பார்த்தான் கிரீஷ்.

புன்னகையுடன் பீர் நிரம்பிய கண்ணாடி டம்ளர் அவனிடம் நீட்டப்பட்டது.

சந்தோஷமாய் வாங்கிக் கொண்டான். டம்ளர் காலியானதும் சந்தோஷம் பன்மடங்காகியிருப்பதை உணர்ந்தான்.

சாந்தி வந்தபோது இரண்டாவது டம்ளரைக் காலியாக்கியிருந்தான் கிரீஷ். சிற்றுண்டிகள் நிறைய வழங்கப்பட்டன. அவற்றுடன் மூன்றாவதாக ஒரு டம்ளர் பீரை உறிஞ்சினான்.

நட்சத்திரங்கள் வானத்தில் கண்கொட்ட ஆரம்பித்தபோது கிரீஷிடம் வந்து, ''போகலாமா?'' என்றாள் சாந்தி. இருவரும் காரை நோக்கி நடந்தார்கள்..

"**அ**தற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குச் சுத்தமாக நினைவில்லை... ஆஸ்பத்திரியில் கண் விழித்ததுதான் தெரியும். உடம்பெல்லாம் கட்டு; தாங்க முடியாத வலி. அதைவிடக் கொடுமையாக இருந்தது — நான் மது அருந்திவிட்டுக் 'கார்' ஓட்டியதால், கார் விபத்துக்குள்ளாகி, அக்கா இறந்து போயிருந்தாள் என்ற செய்திதான்! அதற்காக என் மேல் வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். ஆனால், காரை நோக்கி நடந்ததுவரைதான் எனக்கு நினைவிருக்கிறது; அதற்குப் பிறகு ஆஸ்பத்திரியில் வலியுடன் கண் விழித்ததுதான் தெரிகிறது. இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்தது என்றே எனக்குத் தெரியவில்லை'' என்றான் கிரீஷ்.

அவனுக்காக வாதாட ஒப்புக் கொண்டிருந்த வழக்கறிஞர் ரங்கநாதன் அனுதாபத்துடன் விவரங்களைக் கேட்டுக் கொண்டார்.



பிறகு. கிரீஷின் பேரில் வழக்குப் பதிவாகி யிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரித்தார்.

கிரீஷுக்கு எதிராக நான்கு சாட்சிகள் இருந்தனர். சாந்தியும் கிரீஷும் வீடு திரும் பிக் கொண்டிருந்த போது. எதிர்திசையில் அதே சாலையில் காரில் பயணம் செய்த வெங்கட்ராமன் தம்பதியினர், சாந்தியின் சிவப்புக் கார் 90 கி.மீ. வேகத்தில் போய்க் கொண்டிருந்தது என்றும், தங்கள் காரைக் கடந்ததுமே, ஒரு அபாயகரமான வளைவில் அதே வேகத்தில், திரும்பி, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால் சுழன்று, வட்டமடித்துப் பிறகு கண் பார் வையிலிருந்தே மறைந்து விட்டது என்றும் கூறினர். என்னவாயிற்று என்று பார்க்க அவர்கள் திரும்பிப் போனபோது, கனக சபை வீட்டு முன் தோட்டத்தில் கார் கவிழ்ந்து கிடந்ததாகவும் சொன்னார்கள்.

டி.வி. பார்த்துக் கொண்டிருந்த கனக சபை தம் வீட்டு வாசலில் பயங்கரமான சப்தம் கேட்கவே அவசர அவசரமாக வெளியே வந்து பார்த்திருக்கிறார். கவிழ்ந்து கிடந்த காரைப் பார்த்த அதிர்ச்சியில் சிலை யாகி நிற்காமல், ஒரு டாக்டரான அவர், உடனே செயல்பட்டிருக்கிறார். காரின் வலது பக்க முன் இருக்கையிலிருந்து ஓர் இளைஞனையும் இடது பக்க இருக்கையி லிருந்து ஒரு யுவதியையும் விடுவித்திருக் கிறார். பெண்ணின் நிலை மோசமாக இருந் திருக்கிறது; அவளுக்கு முதலுதவி அளிப் பதற்குள் அவள் உயிர் பிரிந்துவிட்டிருக் கிறது.

— இந்தத் தகவல்களைப் போலீஸ் ரிப் போர்ட்டிலிருந்துதான் ரங்கநாதன் தெரிந்து கொண்டாரேயொழிய அவரால் டாக்டரை ஒரு வார்த்தைகூடப் பேச வைக்க முடிய வில்லை. மதுப் பழக்கத்தின் தீமைகளைச் சாடினாரேயொழிய வழக்குக்குச் சம்பந்த மான எந்தத் தகவலையும் கூற டாக்டர் மறுத்து விட்டார். ரங்கநாதனிடம் "போலீஸ் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறேன் பார்த் துக் கொள்ளுங்கள்" என்றே திரும்பத் திரும்பக் கூறி அனுப்பி விட்டார்.

கான்ஸ்டபிள் கந்தசாமி நான்காவது சாட்சி. கிரீஷின் மூச்சுக் காற்றைப் 'பலூன்' வைத்துப் பரிசோதித்து விட்டுக் 'குடித்து விட்டுக் கார் ஓட்டியதாக' வழக்கில் பதிவு செய்திருந்தார்.

கிரீஷ் குற்றவாளி அல்ல என்று ரங்க நாதனுக்கு உறுதியாகத் தெரியாவிட்டாலும், அவன் தன் நினைவிழந்த சமயத்தில் சம்ப வம் நடந்திருந்ததால், அவனால் எந்த வாதங் களுக்கும் பதில் சொல்ல முடியாது என்பது உறுதியாகத் தெரிந்தது. நீதி விசாரணை நடந் தாலும், அது அவனுக்குத் தன்னைக் காத்துக் கொள்ள ஒரு நியாயமான வாய்ப்பு அளித்த தாக இராது என்று பட்டது. 'தெய்வம் விட்ட வழி' என்று கடமையாற்ற நீதி மன் றத்துக்குப் போனார் ரங்கநாதன்.

விசாரணை ஆரம்பமாயிற்று. அரசுத் தரப்பு வக்கீல் சாட்சிகளாக அழைத்ததன் பேரில் வெங்கட்ராமன் தம்பதிகள், கான்ஸ் டபிள் கந்தசாமி, டாக்டர் கனகசபை — எல்லோருமே தாங்கள் பார்த்ததை அணு அணுவாக விவரித்தார்கள். நீதிபதி வக்கீல் ரங்கநாதனைப் பார்த்தார். "குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். கனத்த நிசப்தம் நீதிமன் றத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

குறுக்கு விசாரணையில் என்னத்தைக் கேட்பது என்று வக்கீல் ரங்கநாதனுக்குப் புரியவில்லை. சாட்சிகள் நடந்ததை நடந்த படி கூறுகிறார்கள். கிரீஷோ நடந்தது எது வும் நினைவு இல்லை என்கிறான். மது அருந்தி மதி மயங்கியிருந்த இவனுக்கு நீதிபதி கருணை காட்டுவாரா? அக்காவின் மரணத் துக்குக் காரணமாயிருந்தான் என்று தண் டனையைக் கடுமையாக்குவாரா?

"கேள்விகள் ஒன்றும் இல்லை யுவர் ஆனர்" என்று வருத்தமும் ஏமாற்றமும் தொனிக்க முணுமுணுத்தார் ரங்கநாதன். அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. நீதிமன்ற நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு டாக்டரின் பரபரப்பான குரல் ஒலித்தது.

"யுவர் ஆனர்! நான் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன்... விபத்து நடந்த அன்று காரின் இடது பக்கத்திலிருந்து ஒரு பெண்ணையும், வலது பக்கத்திலிருந்து ஓர் இளைஞனையும் விடுவித்ததாக நான் கான்ஸ் டபிள் கந்தசாமிக்கு ரிப்போர்ட் கொடுக்கும் போது சொன்னேன்... அது சரிதான். ஆனால் திடீரென்று ஒரு விஷயம் இப்போது தான் எனக்கு உதயமாகிறது.... கார் கவிழ்ந்த நிலையில் கிடந்தது... கவிழ்ந்து கிடக்கும் காரின் இடது பக்கத்தில்தானே டிரைவர் சீட் இருக்கும். அதனால் காரை ஓட்டி வந்தது கிரீஷின் அக்காவாகத்தான் இருந்திருக்க முடியும். எல்லாமே மிக வேகமாக நடந்து முடிந்துவிட்டதாலும் ஒரு டாக்டர் என்ற முறையில், அவள் உயிரைக் காப்பாற்று வதில்தான் என் கவனம் அதிகமாகப் பதிந் திருந்ததாலும் காரின் ஓட்டுனர் இருக்கையி லிருந்து யாரை விடுவித்தேன் என்பது முன்பு என் மனத்தில் பதியவில்லை.... ஆனால் கவிழ்ந்து கிடக்கும் காரின் இடது, வலது பக்கங்கள் மாறித்தானே இருக் கும்......"

நீதிபதி உள்பட கோர்ட்டில் ஒவ்வொரு வர் உடலிலும் மின்சாரம் பாய்ந்தது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது. நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார். கிரீஷ் கடுமையான தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டான். அவனது இளமைப் பருவம் அனாவசியமா கச் சிறைவாசத்தில் வீணாகாமல் தப்பித்தது.

வழக்கறிஞர் ரங்கநாதன் குற்றவாளி களுக்காக ஆஜர் ஆவதில் தவறில்லை என் பதை முன்னெப்போதையும் விடத் தெளி வாகவும் வலுவாகவும் உணர்ந்தார்.

— ஸ்பான் இதழில் வெளியான உண்மைச் சம்பவத்தின் தழுவல்.



"கைநீட்டிக் கடன் வாங்கிட்டு அதைக் கொடுக்க முடியாமல் கூனிக் குறுகி நிற்கிற சமாசாரமே எனக்குப் பிடிக்காது!"
"ஆமாங்க, நானும் அப்படித்தான்! அதுனால, தர முடியாதுன்னு 'பளிச்'சுன்னு சொல்லிடுவேன்..."
— மணியன் தர்மலிங்கம்


ஃபைப்ரோபிளெக்ஸ்

குவில்ட்

மெத்தைகள், தலையணைகள் மற்றும் குஷன்களின்

சுகத்தை அனுபவியுங்கள்

ஃபைப்ரோபிளெக்ஸ்
ஒய்வு
நோயெல்லாம்
சுகமயமாக்கிட
உங்களுக்கோர்
உறுதுணை
வாழ்நாள்
முழுதும்!



Manufacturers:

BHARAT MOTORS

SALES & ADMINISTRATIVE OFFICE

151, Mount Road, Madras-600 002
Phone: 861923/863250/865512
Tlx: 41-6136 BM IN

FACTORY:
Industrial Estate,
Pettai,
Tirunelveli-627 010
Tel: 23622
Tlx: 0433 225 BM IN

DEALERS IN TAMILNADU

MADRAS CITY: **ANNA NAGAR**: Ruskos, Ph: 613042 • **ANNA NAGAR EAST**: M.A. Varghese & Sons, Ph: 612984/611570 • **BROADWAY**: Ramji Steel Furniture, Ph: 21986 • **CHETPUT**: Nathan Furniture House, Ph: 663962 • **CHROMEPET**: Alankar, Ph: 403973 • **EGMORE**: Neo Foam Palace, Ph: 566288 • **ROYAPETTAH**: Jayabharatham Furniture • Ph: 841384, A.K.K. Traders, Ph: 843745 • Arasan Engg. Enterprises, Ph: 812020 • **TAMBARAM**: Alankar, Ph: 403762.

CUDDALORE: Mahalakshmi Traders, 22-A, Car St. • **CUMBUM**: Jeya Coirs, Ph: 466 • **ERODE**: Rani Furnitures, Ph: 78684 • **KARAIKUDI**: Saravana Associates, 116 Kallukatti West • **KUMBAKONAM**: Mathivanan & Co., Ph: 21311 • Lakshmi Furnitures: Ph: 20591 • **MADURAI**: Joy Enterprises, Ph: 25558 • AR.AS. & PV.PV. Ph: 25231 • Raja Furniture, 12, West Avanimoola St. • **MANNARGUDI**: Royal Furniture Mart, 19, Municipal Bldg, VOC Road • **MYLADUTHURAI**: K.V.S. & CO. Ph: 2785 • Maruti Rexine Centre 112-A, First Floor, No. 2. Road, (Near Sundaram Theatre) • **NAGAPATTINAM**: Kaleeswari Enterprises, Ph: 744 • **NAGERCOIL**: Santhosh Agencies, Ph: 3216 • **NAMAKKAL**: Nirmal Enterprises, Ph: 2932 PP • **OOTY**: Meena Enterprises, 10, Municipal Buildings, MS Lane, Upper Bazaar Road, • **PARAMAKUDI**: M.S.K. Traders, 5/209-B, Shoukathali St. • **POLLACHI**: Sri Sakthi Agencies, Ph: 5096 • **SALEM**: Gupta Furnitures, Ph: 62065 • **SATHYAMANGALAM**: P.N.N. Enterprises, 388-D, Bazaar Main Road • **THANJAVUR**: Vinoth Agencies, 1647, South Main St. • Sri Devi Agencies 1514, South Rampart, Opp: Thiruvalluvar Theatre, • **TIRUNELVELI**: AR.AS. & PV.PV. Ph: 24541-3 • **TIRUVANNAMALAI**: Jai & Co. Ph: 2988 • **TRICHY**: Jyothi Furnitures, Ph: 26523 • **TUTICORIN**: Sathya Agencies, Ph: 20161 • **VELLORE**: Sabari Agencies, Shop: 2, Kanik Building, Near Sathuvachan Bus Stop • **VILLUPURAM**: Siva Steel House, 172, Nehruji Road • **VIRUDUNAGAR**: Raja Furniture, Ph: 4873 • Jebam Enterprises, Ramamoorthy Road •

PONDICHERRY: Home Decors, Ph: 4616 • Sundarang & Co., Ph: 4310 • Vinod Steel Agencies, Ph: 3168.

adsindia

வேரில்லாத மரங்கள்

தட தடவென்று 'ஷூ' கால்களோடு உள்ளே வந்து, மேஜைமேல் இருந்த புத்தகங்களைத் தள்ளிக் கலைத்து, கீழே விழுந்தவற்றை மீண்டும் எடுத்து வைக்கக் கூடத் தோன்றாமல் நகத்தைக் கடித்தபடி எதையோ தேடி, அது கிடைக்காத ஏமாற்றத்தோடு வெளியே ராஜா ஓட, அத்தனையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த தணிகாசலத்துள் சன்னமாய்க் கோபம் புருபுருவென்று தலைதூக்கியது...

'ஷூ' கால்களோடு அறைக்குள் வராதேடா, சாமி படங்கள் இருக்கின்றன, கொஞ்சம் பயபக்தியாய் நடந்து கொள்' — என்று நூறு தரம் கரடியாய்க் கத்தியாயிற்று; தொண்டைத் தண்ணீர் வறண்டதுதான் மிச்சமே ஒழிய, இவர் ஏன் சொல்கிறார், எதற்காகச் சொல்கிறார் என்று எதையும் ராஜா புரிந்து கொண்டதாய்க் காணோம்!

வயசு ஒன்பது ஆகிறது — கடாமாடு மாதிரி... தின்பதற்கும், தூங்குவதற்கும் நன்றாகத் தெரிகிறது; ஆனால் பெரியவர்கள், பெருந்தலை, மரியாதை, அடக்கம், பவிசு என்றால் மட்டும் வீசை என்ன விலை என்கிற தினுசில் நடத்தை இருக்கிறது....

எங்கே இருந்து வந்தது இவனுக்குள் இத்தனை முரட்டுத்தனமும், அடாவடியும்! இவனைப் பெத்த மாதவன் இந்த வயதில் என்னமாய் அடக்க ஒடுக்கமாய் இருப்பான்!

வெள்ளன எழுந்து, பல்துலக்கி, நெற்றியில் துளி திருநீறு பூசி, வாசத் திண்ணையில் உட்கார்ந்து தேவாரமும், திருவாசகமும் சொன்னான் என்றால், அக்கம் பக்கத்தார் 'என்ன குரல் இது; என்ன உச்சரிப்பு இது! என்னமாய்ப் பக்தி சிரத்தையுடன் இந்த வயதில் சொல்லுகிறான்!' என்று பக்கத்தில் நின்று வியப்போடு கேட்டுவிட்டுப் போவார்கள்!

ஹூம்—, அது அந்தக் காலம்.....

எனக்குத்தான் அதிசயமாய்ப் பிள்ளை பிறந்திருக்கிறது என்கிற அசட்டுத்தனம் எதுவும் இல்லாமல், பையன் நாளைக்கு ஊர் மெச்ச வாழ வேண்டுமே என்கிற ஆதங்கத்தில், பயத்தில், கட்டுப்பாடாய்க் குழந்தைகளை வளர்த்த காலம்...

இப்போது மாதிரியா?

ராஜா சரியாகப் படிக்க மாட்டேன் என்கிறான்; வேளைக்கொரு சட்டையை மாட்டிக் கொள்வதிலும், ஊர் சுற்றுவதிலும், இந்த வயதிலேயே புத்தி போனால் நாளைக்குப் படித்து, பாஸ் செய்து, நல்ல வேலையில் சேருவது எப்படி? இல்லை, ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் செய்யப் போவதுதான் எப்படி?

இதை எல்லாம் சொல்லப் போனால் மாதவனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விடுகிறது...

"ஒண்ணுமில்லாததப் பெரிசு பண்ணாதீங்கப்பா, ஒரு வருஷம் போனா, விளையாட்டுப் புத்தி மாறி அடங்கிடுவான்" என்கிறான். இல்லை என்றால், "எல்லாம் நீங்க ரெண்டு பேரும் கொடுக்கிற எடம்தான்.. பெரியவங்களா லட்சணமா கண்டிச்சு வளர்க்கிறதை விட்டுட்டு ஆனாலும் ரொம்பத்தான் செல்லம் கொடுத்து அவனைக் குட்டிச்சுவராக்கிட்டீங்க.. நா கண்டிச்சப்பல்லாம் 'போனாப் போதுடா'—னு குறுக்க வந்து தடுத்திட்டு, இப்ப 'உம்பிள்ளை மோசமா இருக்கான்டா'னு புகார் செஞ்சா நான் என்ன பண்ணறது?" என்று இவர் மேலேயே பாய்கிறான்!

இடம் கொடுத்தது நானா, இல்லை அந்தப் பரிமளமா? காலையில் கண்விழித்ததிலிருந்து இரவு உறங்கப் போகும் வரை பரிமளத்தின் பின்னால்தான் ரா்ஜா ஓடிக் கொண்டே இருக்கிறான்— 'கதை சொல்லுங்க பாட்டி'; 'சாப்பாடு போடுங்க பாட்டி'; என்று சதா சர்வகாலம் அவரோடு தானே இருக்கிறான்! அப்புறம், பேரனுக்கு நல்லது, கெட்டதை அவர்தானே மனத்தில் பதிகிற மாதிரி எடுத்துச் சொல்ல வேண்டும்...?

நல்லது, கெட்டதையா?

யார், அத்தையம்மாவா?

கோபத்தினூடே, சிரிக்கவும் தோன்றியது தணிகாசலத்துக்கு...

செருப்பை மாட்டிக் கொண்டு, டாக்கு டாக்கென்று வீட்டுக்குள்ளேயே, என்னவோ தான் அமெரிக்காவில் பிறந்து, லண்டனில் வளர்ந்த மாதிரி, வளைய வரும் அத்தம்மாவாவது 'இது மரியாதைக் குறைச்சல்டா தம்பி' என்று பேரனுக்குப் புத்தி சொல்வதாவது...

பரிமளமும் சரி, வசந்தாவும் சரி, வீட்டுக்குள்ளே செருப்பை மாட்டிக் கொண்டு நடப்பது, தணிகாசலத்துக்குச் சுத்தமாய்ப் பிடிக்காத சமாசாரம்...

இவர்களோடு சேர்ந்து வாழ வந்த புதிதில் 'என்னடா இது, ஊர் உலகத்துல இல்

சிவசங்கரி


லாத பழக்கமா இருக்கு?' என்று அருவருத்து முகம் சுளித்ததற்கு மதிப்பளித்து, இருவரும் சில மாதங்களுக்கு வீட்டுக்குள் செருப்பு அணியாமல் இருந்தது நிஜம்தான். ஆனால், மெள்ள மெள்ள 'அத்தையம்மா கால்ல ஆணிவந்திருக்கு. செருப்பு இல்லாம நடக் காதீங்கனு டாக்டர் சொல்லிட்டாரு' என்று ஏதேதோ நொண்டிச் சாக்குகளைக் காரணம் காட்டிவிட்டு, இருவரும் பழையபடி ரப்பர் செருப்புகளை வீட்டுக்குள்ளும் அணிய முற் பட, அதே நினைப்பில் வளர்க்கப்பட்ட ராஜா வும் செருப்பு, ஷூ கால்களோடு இவர் பூஜை செய்யும் அறைக்குள் கூட வந்து போவதை என்ன முயன்றும் தடுக்க முடிய வில்லைதான்...

நிலைமை ஒருநாள் மிஞ்சிப் போய் "பூஜை அறைக்குள்ளாறயும், சமையல் அறைக்குள் ளாறயும் செருப்புக் காலோடு வர்றவங்க, பக்தி பத்தியும், சாமி பத்தியும் பேசக் கூட யோக்கியதை இல்லாதவங்க" என்று எதற் காகவோ எழுந்த சண்டையில் இதையும் இழுத்துக் கத்திய போது, நமுட்டுச் சிரிப் போடு "படத்துலேயும், ஒரு அறையையும் மட்டும் ஆண்டவன் இருக்கறதா நினைச்சுக் கும்பிடறவங்களுக்குத்தான் இது தப்பு, இது ரைட்டு எல்லாம்;... எங்களுக்கு இல்லை..." என்று பரிமளம் முகத்துக்கெதிரிலேயே கேலி பண்ணிய பிறகு, இது குறித்துப் பேசுவதை விட்டாயிற்று....

போகட்டும்... எக்கேடுகெட்டு எப்படி வேண்டுமானாலும் அவர்கள் போகட்டும்...

இல்லை இல்லை... அப்படி விட முடிய வில்லையே!

ஆயிரம் இருந்தாலும் மாதவன் என் பிள்ளை, ராஜா அவன் வயிற்றுப் பேரன்... பரம்பரை ரத்தம் அவர்கள் உடம்பில் ஓடும் போது, ஒழியட்டும் என்று விட்டேத்தியாக இருக்க முடியவில்லையே?



எந்தவிதத்திலும் சமாதானமடையா மல் மனசுக்குள் ஆயிரம் கேள்விகள் குடைய, இருப்புக் கொள்ளாமல் தணிகா சலம் எழுந்து நின்றார். ஸ்டாண்டில் தொங் கிய சட்டையை எடுத்து உதறி அணிந்து, வாசலுக்கு வந்து செருப்பை மாட்டிக் கொண்டு படிகளில் இறங்கினார்.

கேட்டருகில் செடிகளுக்கு ரப்பர் குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த பரி மளத்தைத் தாண்டும் போது, சிமெண்ட் தரையில் தேங்கி நின்ற நீரில் கால் வழுக்கி, விழப் பார்த்து, ஒரு நிதானம் சமாளித்தவர், கண்களில் வெளிச்சம் போட உறுமினார்:

"காலை கையை ஒழுங்கா வச்சிகிட்டு, எங்காரியத்தப் பாத்துக்கிட்டு 'சிவனே'னு இருக்கிறது கண்ணுல உறுத் துதா? கண்ட எடத்துல தண் ணியக் கொட்டி வச்சிட்டா, நான் சறுக்கி விழுந்து காலை ஒடிச்சுக்குவேன்... அப்புறமா



படாதிபதி: என்னோட படத்தில் ஒரு பிச்சைக்காரன் வேடத்தில் வரணும். நூறு ரூபாய்க்குச் செக் தர்றேன். நடிக்கிறியா?''

பிச்சைக்காரன்: நானும் ஒரு புரொட்யூசரா இருந்தவன்தான். எனக்கும் செக்கைப் பற்றித் தெரியும். கேஷா தர்றதா இருந்தால் நடிக்கலாம்!''

— ஜோலை. அ. கதிர்வேல்.

கிழவனாலே யாருக்கு என்ன பிரயோஜனம்னு இன்னும் அதிகமா மருமகளோட சேர்ந்துகிட்டுக் கரிச்சுக் கொட்டலாம். அப்ப திருப்தியாயிடும் இல்லே?''

தேவையில்லாமல் வார்த்தைகள் அடிவயிற்றிலிருந்து காட்டமாய் வந்து விழ, சிலிர்த்துக் கொண்டு, அந்தக் கோபத்துக்குச் சற்றும் குறையாமல் பரிமளம் பதிலுக்குச் சரக்கென்று கத்தினார்.

''உக்காந்து தின்னா மனுஷங்களுக்குக் கொழுப்பு ஏறிடும்னு கேள்விப்பட்டிருக்கேன்; இப்ப அனுபவிக்கிறேன்... வாயத் திறந்தா வம்பு வருதுன்னு நான் பாட்டுக்கு வேலைகளைச் செஞ்சிட்டிருக்கிறது கூடப் பொறுக்காம சண்டைக்கு இழுக்கறது உங்களுக்கே நல்லா இருக்கா? அட—எதுவானாலும் என்னோட நிறுத்திக்கறது... இதுல வசந்தாவை ஏன் இழுக்கறீங்க? ஆமா சாமி... உங்களுக்கு மொடக்கு வாதம் வரணும், என் மருமகளும் நானும் ஸ்வீட்டா செஞ்சு சாப்பிடணும்னு காத்திட்டுத்தான் இருக்கோம்... புரிஞ்சு போச்சு இல்லே... ஆளை விடுங்க...''

பரிமளம் கத்தத் தொடங்கிய உடனேயே சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து விட்ட அவஸ்தையுடன், அங்கு நிற்காமல் அகல அகலமாய்க் கால்களை வைத்துத் தெருவில் தணிகாசலம் நடக்க, அவர் கண்களை விட்டு மறைந்த பின்னரும், மொணமொணவென்று ஆத்திரம் தீர வைது தீர்த்த பரிமளம், தொடர்ந்து தண்ணீர் ஊற்றப் பிடிக்காமல் குழாயை நிறுத்தி விட்டு வராந்தா படிக்கட்டுகளில் வந்து அமர்ந்தார்.

புடவைத் தலைப்பினால் கழுத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்த நிமிஷத்தில், ராஜா உள்ளே இருந்து திடுதிடுவென்று ஓடிவந்தான்.

''பாட்டி... பாட்டீ...''

காதருகில் வந்து உரக்க அழைக்க, பரிமளம் முகத்தைச் சுளித்தார்.

''ஏண்டா இப்படி அலர்றே, காது செவிடாயிடற மாதிரி...?''

''என் புஸ்தகத்தில் 'ஸ்டார் நைட்' டிக்கெட் வெச்சிருந்தேனே பாத்தீங்களா?''

பதில் கூறப் பிடிக்காமல் பரிமளம் முகத்தைத் திருப்பிக் கொள்ள, முரட்டுத்தனமாய் அவன் முகத்தைத் தன் பக்கம் ராஜா திருப்பினான்.

''கேக்கறேன் இல்லே? போன வாரம் தாத்தா ஐம்பது ரூபாய் பணம் கொடுத்து வாங்கித் தந்தாரே, அந்த டிக்கெட்! வந்து தேடி எடுத்துத் தாங்க... நாழியாச்சு... ரஜினிகாந்த், கமல் எல்லாரும் வர்றாங்க... இப்பவே போனாத்தான் நல்ல எடமாப் புடிக்க முடியும்... எழுந்திருங்க...''

கையைப் பிடித்து அவன் இழுத்ததில், ஏற்கெனவே இருந்த கோபம் அதிகமாக, வள்ளென்று விழுந்தாள்...

''உங்க தாத்தாவுக்கு உருப்படியா என்ன செய்யத் தெரியும்? தான் ஒண்ணுத்துக்கும் உதவாம தண்டத்துக்கு இருக்கிற மாதிரி உன்னையும் தயார் செய்ய இப்பவே துவங்கிட்டாராக்கும்! ஸ்டார் நைட்டாம், ஸ்டார் நைட்... படிக்கிற பையனுக்கு அதெல்லாம் எதுக்குன்னு எடுத்துச் சொல்லாம டிக்கெட் வாங்கித் தர்றாராமா, டிக்கெட்! ஏகவே... இந்த அநியாயத்தை நான் எங்க கொண்டு...''

அவன் முடிக்கும் முன், வாசலில் ராஜாவின் நண்பன் மகேஷ், அவனைவிட நாலைந்து வயது மூத்தவன், வந்து நின்று ''கிளம்பிட்டியா ராஜா?'' என, ஏதோ நினைப்புக்கு வந்தவனாய், ''ஓ! டிக்கெட்ட உன்கிட்ட கொடுத்திட்டு நான் வீடு பூரா தேடிட்டு இருக்கேனா?'' என்றபடி ஓட முற்பட்ட ராஜாவை, ''டே... இருடா...'' என்று பரிமளம் தடுத்தார்.

''என்ன பாட்டி... சீக்கிரம் சொல்லுங்க. நாழியாச்சு.''

''உன் ஃப்ரெண்ட் வந்து கூப்பிட்டா அப்படியே ஓடிடறதா? பெரியவங்ககிட்டச் சொல்லிக்க வேண்டாமா? யாரோட போறே.... எங்க போறே, எப்ப...?''

பொறுமை இழந்து ராஜா பேசிக் கொண்டே நகர்ந்தான்:

''காலையிலே நான் அம்மா கிட்டச் சொல்லிட்டேன்.'' அலட்சியமாய்க் கூறியவன், அவசரமாய் வெளியில் போக, பரிமளம் நீளமாய்ப் பெருமூச்சொன்றை வெளியிட்டார்.

யாரைக் கொண்டிருக்கிறது இந்தப் பிள்ளை? இப்படித் தான்தோன்றித்தனத்துடன் பேசிப் பழக...?

பெரியவர்களிடம் ஒரு மரியாதை, படிப்பில் கவனம், கேட்ட கேள்விக்கு நின்று பதில்? ம்ஹூம்... ஒன்றும் மருந்துக்குக் கூடக் கிடையாது...

எப்பப்பாரு துக்கிரியாய் ஒரு பேச்சு, உனக்கென்ன என்று எதிர்க் கேள்வி, ஒரு பேச்சுக்கு எடுத்தெறிந்து ஒன்பது பதில்கள்...

வசந்தாவின் பையனா இவன் என்று வருத்தமாக இருக்கிறது.

நோயாளி: டாக்டர்! வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. பேசாம தற்கொலை செய்துக்கலாம் போலத் தோணுது... என்ன செய்யலாம்?

டாக்டர்: கவலைப்படாதீங்க. உங்க வீட்டில இருக்கிற டி.வியை முதலில் வித்திடுங்க. எல்லாம் சரியாயிடும்.

— திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.



அந்தக் காலத்தில் எட்டு வயதிலேயே பதினைந்து 'தேவ ரகசியங்களும்' வசந்தாவுக்கு அத்துபடி...

'சந்தோஷ தேவ ரகசியத்தை—கபரியல் சம்மனசு தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னது. தேவமாதா தான் மாசமாக இருந்த போதும் எலிஸபத் அம்மாவைக் கண்டு ஆறுதலாய் வினவினது. கர்த்தர் பிறந்தது. விருத்த சேதனம். காணாமல் போன ஏசுவைக் கண்டுபிடிப்பது—' என்று ஐந்து. பிரிவுகள் அடங்கிய 'சந்தோஷ தேவ ரகசியத்தை— விளக்கமாய்ச் சொல்லி ''அருள் நிறைந்த மரியே வாழ்க'' என்று கணீரென்று எப்படி எடுத்துரைப்பாள்?

அது மட்டுமா?—

ஏசு முள் முடி அணிந்ததை. மற்றவர்களால் அவர் ஏசப்படுவதை. காட்டிக் கொடுக்கப்படுவதை. சிலுவையில் அறையப் படுவதைக் கூறும்' துக்க தேவ ரகசியத்தையும்; ஏசு மீண்டும் உயிர்பித்தல், ஆவியை அனுப்புதல், சீடர்கள் உலகெங்கும் செல்லச் செய்தல், மாதாவை ராணியாக, பாதுகாவலியாக ஏற்றலையும் விளக்கும் 'மகிமை தேவ ரகசியத்தை'யும் கவனத்தோடு சொல்லும் போது. கேட்பவர்களின் கண்கள் கலங்கி விடுமே!

ஹூம்... அது அந்தக் காலம்...

அப்போது வசந்தாவை வளர்த்த ரீதியிலேயே இப்போது ராஜாவையும் வளர்க்கலாம் என்றால் எங்கே? வீட்டில் ஆந்தை மாதிரி வந்து கிழம் உட்கார்ந்திருக்கையில் எதை உருப்படியாய்ச் சாதிக்க முடிகிறது?

பீடத்தின் முன் மண்டி போட வைத்து. ''சொல்லு ராஜா... பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே'' — என்று ஒரு வரி சொல்லிக் கொடுப்பதற்குள் மூக்கில் வேர்த்த கழுகு மாதிரி வந்து விடுகிறாரே!

ஆண்டவர் விஷயத்தில்தான் இப்படியா — என்றால், இல்லை. ஈதற்கும் நான்—என் பேரன் என்று வந்து விடுகிறாரே!

சாப்பிட உட்கார்ந்தால், 'ராஜா — அதச் சாப்பிடாத. அது மீன். நாம சாப்பிடக் கூடாது.' என்று விஷத்தை ஆக்கி வைத்து விட்ட மாதிரி எச்சரிக்கிறார்...

தான் சாப்பிடா விட்டால் போகட்டும்; பேரனையும் கெடுத்தால் எப்படி?

''உங்கப்பாவை எல்லாத்துலேயும் மூக்கை நுழைக்காம இருக்கச் சொல்லி வைங்க.'' என்று தப்பித் தவறி, தாளமாட்டாமல் வசந்தா சொல்லிவிட்டால் போயிற்று. என்னமோ அப்பாவை அசிங்கமாய் ஏசிவிட்ட மாதிரி மாதவன் கரகாட்டம் ஆடிவிடுகிறார்...

மொத்தத்தில் எதுவும் நன்றாக இல்லை. மனத்தில் நிம்மதியும் இல்லை.

ஹூம்....

தமக்குத்தாமே குருட்டு யோசனை பண்ணிக் கொண்டதில் வேண்டாத கசப்புகள் அதிகமாகி 'நான் மட்டும் இந்த வீட்டில் காசு வாங்காத வேலைக்காரியாய் ஏன் உழைக்க வேண்டும்? என்று அடிக்கடி தோன்றும் வீம்பு அன்றும் எழ. உள்ளே போய், எந்தக் காரியமும் செய்யப் பிடிக்காமல் பரிமளம் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

ஆபிஸில், மேலதிகாரியிடம், செய்யாத வேலைக்காகத் திட்டு வாங்கிய வசந்தாவும், ஸ்கூட்டர் டயர் பஞ்சராகி அதோடு ஒருமணி நேரம் போல மன்றாடிவிட்டு, வசந்தாவின் பொறுமலாலும் களைத்துப் போன மாதவனும், வீட்டு வாசல்படி ஏறிய போது மணி ஏழரை ஆகியிருந்தது.

அத்தையம்மா சமைத்து வைத்திருப்பார், சுடச்சுடச் சாப்பிட்டு விட்டுப் பொழுதோடு படுக்கலாம் என்கிற எதிர்பார்ப்பில் மண் விழுந்ததோடு 'எங்கயாவது அனாதை மடம் இருந்தா என்னைச் சேர்த்து விட்டுரு... என்னால தாங்க முடியல' என்று பரிமளம் விசும்பியதும் சேர்ந்து கொள்ள,

வசந்தா மாதவனிடம் கத்த.

அவன் அப்பாவை முறைக்க,

அவர் பரிமளத்தைக் குற்றம் சாட்ட,

இப்படி எல்லாரும் ஒருவர் மேல் ஒருவர் புகார் படிப்பதில் மும்முரமாய் ஈடுபட்டதில், அடுத்த வாரம் நடக்கப் போகும் பரீட்சைக்குப் படிக்காமல், தாத்தாவிடம் ஸ்பெஷல் ஃபீஸ் கட்ட பணம் வேண்டும் என்று பொய் சொல்லி ஏமாற்றி வாங்கிய டிக்கெட்டில் தன் வயசுக்கும் மீறின நண்பனோடு ஸ்டார் நைட்டுக்கு ராஜா போனதையோ, மூன்றாம் தர ஹோட்டலில் எதையோ தின்றுவிட்டு லேட்டாக வந்ததையோ கண்டிக்க வேண்டும் என்று கூடத் தோன்றாததில், வழக்கம் போல அந்தச் சண்டையால் பாதிக்கப்படாமல் தப்பித்ததும் ராஜாதான்; யாருமே உணராத வகையில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்ததும் ராஜாதான்...

(தொடரும்)

டெபாசிட்டிற்கு முன்கூட்டியே வட்டித் தொகை அளிக்கப்படுகிறது!

டெபாசிட் திட்டங்களின் விவரம்

i. பிக்ஸட் டெபாசிட்டுகள்:

டெபாசிட் காலம்	வட்டி விகிதம்
6 மாதங்கள்	13%
ஒரு வருடம்	14%
2 வருடங்கள்	14%
3 வருடங்கள்	14%

ii. க்யுமுலேட்டிவ் டெபாசிட்டுகள் :

டெபாசிட் காலம்	டெபாசிட் தொகை ரூ.	டெபாசிட் முடிவடைந்ததும் பெறும் தொகை ரூ.	கணக்கிட்ட வட்டி விகிதம் ரூ.
1 வருடம்	1000	1149	14.9%
2 வருடங்கள்	1000	1320	16.0%
3 வருடங்கள்	1000	1518	17.26%

iii. திருமகள் டெபாசிட் சர்டிபிகேட்டுகள்:

டெபாசிட் தொகை ரூ.	டெபாசிட் செலுத்தும் மாதங்களும்* திரும்பப்பெறும் தொகையும்						
	36 ரூ.	*72 ரூ.	*108 ரூ.	*144 ரூ.	**156 ரூ.	**168 ரூ.	**180 ரூ.
1000/-	1518/-	2305/-	3500/-	5313/-	6105/-	7017/-	8065/-

* 12 வருடம் வரை டெபாசிட்டுகள் ஒவ்வொரு 36 மாதங்களுக்குப் பிறகும் புதுப்பிக்கப்பட்டால்.
** மேற்கொண்டு 15 வருடம் வரை ஒவ்வொரு வருடமும் டெபாசிட் புதுப்பிக்கப்பட்டால்.

iv. ரெக்கரிங் டெபாசிட்டுகள்:

மாதாந்திர டெபாசிட் ரூ.	12 மாதங்களுக்கு ரூ.	24 மாதங்களுக்கு ரூ.	36 மாதங்களுக்கு ரூ.
25/-	322/-	686/-	1091/-
50/-	644/-	1372/-	2182/-

சிறப்பு அம்சங்கள்:

- வட்டித் தொகையையும், டெபாசிட் தொகையையும் நாட்டின் எல்லா இடங்களிலும் முழுமையாக அளிக்கிறோம்.
- 3000 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு மாதாந்திர வட்டியும், மற்ற டெபாசிட்களுக்கு காலாண்டுக்கு ஒருமுறை வட்டியும் அளிக்கப்படும்.
- ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலேயே, முன்கூட்டியே தேதியிட்ட பன்னிரெண்டு மாதத்திற்கான காசோலைகள் அல்லது காலாண்டுக்கான காசோலைகள் நான்கும் அனுப்பப்படும்.
- வெளியூர் காசோலைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- ஆறே மாதத்திற்கான குறைந்தகால டெபாசிட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- டெபாசிட் ரசீதின்பேரில் தேவைப்பட்டால் முன்கூட்டியே டெபாசிட் தொகையை திரும்ப பெற்றுக்கொள்ளவும் அல்லது டெபாசிட் ரசீதின்பெயரில் கடன் வாங்கவும் வசதி உண்டு.
- உங்கள் டெபாசிட் விண்ணப்பங்களும், காசோலைகளும் எங்களுக்கு கிடைத்த தேதி முதல் உங்கள் வட்டிதொகை கணக்கிடப்படுகிறது.

அ) பிக்ஸட் டெபாசிட்டுகள்/க்யூமுலேட்டிவ் டெபாசிட்டுகள்/திருமகள் டெபாசிட்டுகளை ரூ. 1000 அல்லது அதன் மடங்குகளில் டெபாசிட் பெற்றுக் கொள்ளப்படும்.

ஆ) ரெக்கரிங் டெபாசிட்டுகளை ரூ. 25 அல்லது அதன் மடங்குகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

பாங்குகள் அல்லாத பண முதலீட்டுக் கம்பெனிகளின் விதிகள் (ரிசர்வ் பாங்கு) 1977-பாங்குகள் அல்லாத முதலீட்டுக் கம்பெனிகள் மற்றும் இதர பாங்குகள் அல்லாத கம்பெனிகளுக்கான (விளம்பரம்) விதிமுறைகள் 1977-ன் படி, கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

A. கம்பெனியின் பெயர் : லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

B. கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட தேதி : 1.6.1977

C. கம்பெனியால் நடத்தப்படும் வியாபாரம் : மோட்டார் வாகனங்கள் மற்றும் மெஷின்களை தவணையில் வாங்க கடன் அளித்தல்.

D. கம்பெனியின் நடப்பு பற்றிய சிறிய விளக்கம் : கம்பெனியின் போர்ட் ஆப் டைரக்டர்கள் மேற்பார்வையில் மேனேஜிங் டைரக்டரால் கம்பெனி நடத்தப்படுகிறது.

E. கம்பெனி டைரக்டர்களின் பெயர், விலாசம் மற்றும் தொழில்

பெயர்	விலாசம்	தொழில்
1. திரு. P.G. சரண்யன் சேர்மன்	15, சலிவன் கார்டன் காலனி, கீழ்பாக்கம், சென்னை 600 010	பாங்கர்.
2. திரு. ஸ்ரீஹரி நாயுடு	12, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, குடியாத்தம், வடஆர்காடு மாவட்டம் தமிழ்நாடு	தொழிலதிபர்.
3. திரு. H.R. பலவராஜ்	26/A 2, டிரான்சி ரோடு, பெங்களூர் 560 052 கர்நாடகா மாநிலம்.	தொழிலதிபர்.
4. திரு. தேவராஜ் சோர்டியா	624, அண்ணா சாலை, சென்னை 600 006.	பாங்கர் தொழிலதிபர்.
5. திரு. M.P. சிவண்ணா	பொம்மனஹள்ளி, D.R. காலேஜ்போஸ்ட், பெங்களூர் 560 029.	தொழிலதிபர்.
6. திரு. J. மோகன் ரங்கராஜ்	மகாத்மாகாந்தி ரோடு, வெங்கல் போஸ்ட், கரூர் தாலுக்கா, திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.	நிலச்சுவான்தார்.
7. திரு. S. பிரேம்சந்த் (மானேஜிங் டைரக்டர்)	15, சலிவன் கார்டன் காலனி, கீழ்பாக்கம், சென்னை 600 010.	தொழிலதிபர்.

F. இந்த விளம்பரம் பிரசுரமான ஆண்டின் முந்தைய மூன்று ஆண்டுகளில் கம்பெனிக்கு ஏற்பட்ட லாபங்கள் - (வருமானவரி செலுத்துவதற்கான ஏற்பாட்டின் முன்பும், பின்பும்)

ஆண்டு முடிவின் லாபம்.	வரிக்கான ஏற்பாட்டின் முன் ஏற்பட்ட லாபம். ரூ.	வரிக்கான ஏற்பாடு செய்தபின் லாபம். ரூ.	அளிக்கப்பட்ட டிவிடெண்டு.
31-12-1984	1,40,635.43	55,635.43	7½%
31-12-1985	1,52,466.00	1,23,589.00	15%
31-12-1986	2,55,604.00	2,29,691.00	16%

G. தற்போதைய, கணக்கு சரிபார்க்கப்பட்ட, பாலன்ஸ்ஷீட்டின்படி, கம்பெனியின் நிதிநிலைமையின் விளக்கம்.

கம்பெனியின் நிதிநிலை

கடன்கள்	31.12.86 (ரூ. லட்சங்களில்)	31.12.85	சொத்துக்கள்	31.12.86 (ரூ. லட்சங்களில்)	31.12.85
ஷேர் கேபிடல்	20.24	7.64	நிலையான சொத்துக்கள்	29.36	20.98
பிளைவப்பு மற்றும் அதிகப்படி மானவை	13.21	12.53	மற்ற முதலீடுகள்	0.10	0.06
பாதுகாப்பான கடன்கள்	17.85	20.44	தற்போதைய சொத்துக்கள், கொடுத்த கடன்கள், அட்வான்ஸ் தொகைகள்	97.07	89.78
பாதுகாப்பில்லாத வாங்க முடியாத கடன்கள்	62.31	54.59	இதர செலவுகள்	—	—
தற்போதைய கடன்கள்	12.92	15.62	—	—	—
மொத்தம்	126.53	110.82	மொத்தம்	126.53	110.82

தொடரும் கடன்கள் - இல்லை.

H. a) விதிகளின்படி, முதலீட்டுத் தொகைகள் மூலம் கம்பெனியால் ஈட்ட முடியும் தொகை - ரூபாய் 211 லட்சங்கள்.

b) 31.12.86 அன்று வரை டெபாசிட்டுகளின் கூட்டுத் தொகை ரூ. 62.31 லட்சம்.

I. கம்பெனியில் OVERDUE மற்றும் UNCLAIMED டெபாசிட்டுகள் இல்லை.

J. i) விதிகளின்படி எல்லா தகுதிகளையும் கம்பெனி பெற்றிருக்கிறது.

ii) இந்திய ரிசர்வ் பேங்கின் விதிகள் கடைப்பிடிப்பதால் மட்டும் டெபாசிட்களை திரும்ப அளிப்பதற்கு ரிசர்வ் பாங்கின் உத்தரவாதம் கிடையாது.

iii) இந்தக் கம்பெனியில் செய்யப்படும் முதலீடுகள் பாதுகாப்பானவை அல்லாத ரகத்தைச் சேர்ந்தது. மற்ற, பாதுகாப்பற்ற கடன் தொகைகளுக்கு ஈடாக மதிக்கப்படுகிறது.

போர்டின் ஆணைப்படி,
லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட் லிமிடெட்.

P.G. சரண்யன்.
சேர்மன்
(கரூர்வைஸ்யா பாங்கின் முன்னாள் சேர்மன்)
சென்னை.

S. பிரேம்சந்த்
மானேஜிங் டைரக்டர்.

லக்ஷ்மி ட்ரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கிவ்ராஜ் எஸ்டேட்,
624, அண்ணாசாலை, சென்னை 600 006.
தொலைபேசி : 476646/470311.
கிளை : 80, ஸ்டேஷன் தெரு, ராதா நகர், குரோம்பேட்,
சென்னை 600 044. தொலைபேசி : 401267.

LTC :
கடந்த 10 வருட காலமாக
எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள
வாடிக்கையாளர்களுக்கு நன்றி !

எண்ணத்தில்தான் இருக்கு...

மணி ஒன்று.

வெளியூர் ஆசிரியர்கள் வட்டமாக அமர்ந்து, அவரவர் கேரியரை எடுத்து வைத்து மதிய உணவு உண்ணத் தொடங்கினார்கள்.

"தமிழய்யா, சாப்பிடலையா?" என்றார் தங்கராஜ் வாத்தியார்.

"இதோ வந்திட்டேன்..." என்றபடி எழுதி முடித்த கடிதத்தை அவசரம் அவசரமாக மடித்து, ஒட்டி, முகவரி எழுதி, அஞ்சல் செய்யக் கொடுத்துவிட ஒரு மாணவனைத் தேடினேன், நான்.

எட்டாம் வகுப்பில் செல்வகுமார் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். ஏழெட்டு மாணவர்கள் சத்துணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"டேய், செல்வகுமார்...!"

விருட்டென்று எழுந்து, பேனாவை மூடிக் கொண்டே வந்தான் அவன்.

"என்னடா, மாயமா சாப்பிட்டிட்டே? ஏதோ எழுதிக்கிட்டிருக்கியே...?"

வாய் நிறையச் சோற்றை வைத்து அரைத்துக் கொண்டிருந்த ராஜகுமாரன் சத்தம் போட்டுச் சொன்னான்.

"அவன் மத்தியானம் சாப்பிட மாட்டான், சார்..."

எனக்கு நறுக் கென்றது.

'மத்தியானம் சாப்பிட மாட்டானா?'

"ஏம்ப்பா அப்படியா?" — வியப்புடன் வேகமாகக் கேட்டேன்.

செல்வகுமார் ஒன்றும் பேசாமல் நின்றிருந்தான்.

"என்னடா ராஜகுமாரன் என்னமோ சொல்றானே?"

திரும்பவும் அவனை உசுப்பினேன்.

இப்போதும் அமைதியாய் நின்றான்.

கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிற 'கறையான்பட்டி'யிலிருந்து வருகிறவன் அவன். அவனுடன் வருகிற எல்லாரும் சத்துணவோ, வீட்டுச் சாப்பாடோ உண்ணுகிறபோது அவன் மட்டும் ஏன் மதியம் உண்பதில்லை?

எனக்குக் கோபம் வந்தது.

"ஏய், என்னடா சாப்பிட்டாயா? இல்லையா?"

"இல்லே சார்...!"

"ஏன் சாப்பிடலே?"

"அவன் தினம் தினம் சாப்பிட மாட்டான் சார்..." — சோற்றை அள்ளி வாய்க்குக் கொண்டு சென்றபடியே சொன்னான் மாரியப்பன்.

"அப்படியாடா?"

"ஆமா, சார்."

"ஏன்?"

மறுபடியும் மௌனம்.

"சரி, வீட்டிலிருந்து கொண்டு வந்து சாப்பிட வேண்டியதுதானே?"

இப்போதும் மௌனம்தான்.

"கழுதே! ஏதாவது பதில் சொல்லுடா. கேட்கிறேனில்ல?"

தலைகுனிந்தே நின்றான்.

நான் ஒரு நிமிடம் அமைதி காத்தேன். என் ஆத்திரம் அடங்கியது.

"சரி, போ. உன்னை நாளைக்குப் பேசிக்கிறேன்..." என்று கடிதத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு நானும் சாப்பிட உட்கார்ந்தேன்.

மறுநாள்.

எட்டாம் வகுப்பில் எல்லா மாணவர் மத்தியிலும் அவனை விசாரித்தேன்.

ஆறும் வகுப்பில் அவன் படிக்கும் போது ஒரு நாள் பள்ளிச் சத்துணவில் ஒரு புழுவைப் பார்த்து விட்டானும். அன்று முதல் பள்ளிக் கூடத்தில் சோறு வாங்குவதில்லை. வீட்டிலிருந்தாவது கொண்டு வந்து சாப்பிடலாமே என்று கேட்டால் பதிலில்லை.

எனக்கு ஒரு பக்கம் வருத்தமும், மறு பக்கம் அவன் மதிய உணவைப் புறக்கணிப்பதை எண்ணிக் கோபமும் ஏற்பட்டன. அவன் மதியப் பட்டினி கிடப்பது என்னை என்னவோ செய்தது.

மற்ற பையன்கள் மூலமாக, ஏன் அவன் வீட்டிலிருந்து உணவு கொண்டு வருவதில்லை என்பதற்கான காரணம் தெரிய வந்தது.

அவனுடைய வீட்டில் தினசரியும் கூழ், களி, பழையது போன்ற உணவுதான்!

இப்போது, என்னால் அவன் மனத்தின் அடி உணர்வுகளை மனிதாபிமானத்தோடு சிந்தித்துப் பார்க்க முடிந்தது.

கூழ், களி போன்ற உணவைக் கொண்டு வந்து சக மாணவருடன் சேர்ந்து உண்பதற்கு இடங்கொடாத அவனது தன்மானம்; நாணம்; தன் வட்டிலில் வாங்கிய சத்துணவில் ஒரு புழுவைப் பார்த்து விட்டதற்காக, அன்று முதல் வாங்காது விட்டு ஒழித்த அவனது மன உறுதி...!

இவையெல்லாம் என்னை ஒரு புறம் நெகிழ்ச்சி கொள்ள வைத்தாலும், மறுபுறம்

அதற்காக இந்த விரதம் தேவையில்லாதது என்ற எண்ணத்தையே எனக்குள் வலியுறுத்தியது.

ஆறும் வகுப்பிலிருந்து கிட்டத்தட்ட மூன்றாண்டுகளாகப் படித்துக் கொண்டிருக்கிற அவனது உண்ணா நோன்பு, எனக்கு இப்போதுதான் தெரிய வந்திருக்கிறது என்பதை நினைத்த போது வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.

அவனை எப்படியும் மதிய உணவு உண்ணச் செய்ய வேண்டும். அது, அவனுடைய ஆசிரியனான எனது கடமை என்ற உணர்வு எனக்குள் தீவிரமாக ஏற்பட்டது.

அவனை அன்புடனும் ஆதரவுடனும் கண்டித்ததோடு, மதிய உணவின் இன்றியமையாமையைக் கூறி, நெல்லரிசிச் சோறு உண்பது தான் பெருமை, மற்ற உணவு வகைகளை உண்பது சிறுமை என்ற எண்ணம் முட்டாள்தனமானது என்று நிறைய அறிவுரைகளை



நா.ஜெயபாலன்

வகுப்பு முழுதுக்குச் சொன்னேன்.

"நம்ம வீட்டில் சமைச்ச உணவுங்கிற ஒரு பெருமையே போதும்டா. அது நெல்லுச்சோறா, சோளக் கஞ்சியா, கேப்பக் களியா, கம்பங் கூழா என்கிறதைப் பற்றியே கவலை இல்லை. உண்ணும் உணவில் என்ன இருக்கு? எண்ணும் எண்ணத்தில்தான்டா எல்லாம் இருக்கு. நாம் உண்ணுகிற உணவுன்னு எதெது இருக்கோ, அது அத்தனையும் நமக்குச் சமம்தான். எல்லா உணவிலேயும் நமக்கு வேண்டிய ஏதோ ஒரு சத்து இருக்கத்தான் செய்யுது. ஒண்ணு... நீ இங்கே போடறதை வாங்கிச் சாப்பிடு; அதுக்கு உன் மனசு ஒப்பலேன்னா, வீட்டில் இருந்து கொண்டு வந்து சாப்பிடு. பட்டினி மட்டும் கிடக்காதே... நாளையிலிருந்து நீ சோறு கொண்டு வந்து சாப்பிடணும். என்னடா செல்வகுமார் நான் சொல்றது? இது அவனுக்கு மட்டும் இல்லே; எல்லாருக்கும்தான்!"

வகுப்பு முடிந்து போயிற்று!

மறுநாள், அவன் நினைவாகவே நான் பள்ளிக்குச் சென்றேன்.

ஆனால் —

அவன் ஏமாற்றி விட்டான்.

சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டு தலையாட்டியதோடு சரி. சோறு கொண்டு வரவும் இல்லை; வாங்கித் தின்னவும் இல்லை.

"நான் சொல்லியும் நீ சோறு கொண்டு வரலையேடா..." என்ற ஆத்திரத்திலும் ஆதங்கத்திலும் நான் இரண்டு நாட்கள் அவனிடம் பேசவே இல்லை!

அந்த வாரம் கழிந்தது.

அன்று —

அந்த வகுப்புக்கு மாதாந்திரத் தேர்வு நடத்துவதற்காக வாங்கிச் சென்றிருந்த ஒரு குயர் வெள்ளைப் பேப்பர் என் சோற்றுப் பையில் இருந்தது. நந்தகுமாரைப் போய் அதை எடுத்து வரச் செய்தேன்.

பேப்பரைச் சுருட்டி மேலே ஒரு காகிதம் போட்டு நூலைச் சுற்றிக் கட்டியிருந்தான் கடைக்காரன்.

கட்டை அவிழ்த்துப் பேப்பரை விரித்த போதும், அது வளைந்து, வளைந்து சுருண்டு கொண்டது. விரித்து வைத்து, அதைத் தடவித் தடவிச் சமப்படுத்த முயன்றேன். சரியாகவில்லை.

சட்டென்று ஒரு யோசனை வர, காகிதத்தைப் பின் பக்கமாக மடித்துச் சுருட்டினேன். இரண்டு மூன்று நிமிடங்கள் அப்படியே அழுத்தி, நெருக்கிப் பிடித்திருந்து எடுத்த போது காகிதம் முன்பு போல் சுருண்டு கொள்ளாது எழுதுவதற்கு வசதியாகப் படிந்து சமதளமாய் ஆகியிருந்தது.

அதிலிருந்து ஒரு தாளைப் பிரித்தெடுத்து, முன்வரிசையிலிருந்த வல்லபிக்கு நீட்டிய போது, எனக்குள் பளிச்சென்றது.

ஒரு வளைவை நிமிர்த்தி, சமப்படுத்த, அதன் எதிர்த் திசையில் மற்றொரு வளைவை ஏற்படுத்தினால் அது நிமிர்ந்து சமதளமாகி, படிமானமாக ஆகிவிடுகிறதே...

மறுபடியும் எனக்குள் ஒரு வெளிச்சம் பாய்வது போல் இருந்தது.

பேப்பரை யாருக்கும் கொடுக்காமல் அப்படியே வைத்து விட்டேன்.

"செல்வகுமார் எழுந்திருடா!" என்றேன்.

எழுந்து நின்றான்.

"நாளையிலிருந்து நீ சாப்பாடு கொண்டு வந்து சாப்பிடணும். அப்படி நீ கொண்டு வரலேன்னா, நானும் சாப்பிட மாட்டேன். நான் சாப்பாடு கொண்டு வர மாட்டேன்னு நினைக்காதீங்க: கொண்டு வருவேன்: ஆனா சாப்பிடாமப் பட்டினி கிடப்பேன்.

மாணவர்கள் அசந்து போய், கண்களை அகல விரித்து, வியப்பும் திகைப்புமாய் என்னைப் பார்த்தார்கள்.

"உட்கார்" என்று செல்வகுமாரை உட்கார வைத்துவிட்டு என் வேலையைத் தொடங்கினேன்.

மறுநாள்.

பஸ்ஸை விட்டு இறங்கிப் பள்ளிக்குள் நுழைந்து அலுவலக அறையிலிருந்த பெட்டியின் மேல் என் சாப்பாட்டுப் பையை வைத்த படி திரும்பினேன்.

எட்டாம் வகுப்பே கலகலப்பாக இருப்பது தெரிந்தது.

என் பாடவேளை வந்தது.

வகுப்புக்குள் நுழையும் போது —

முகத்தில் மலர்ச்சியும், இதழ்களில் புன்னகையுமாய் எழுந்து நின்ற அந்த மாணவர்கள் எனக்கு, "வணக்கம், ஐயா!" சொல்லவில்லை!

"செல்வகுமார் சோறு கொண்டு வந்திருக்கிறான், சார்!" என்றார்கள்.

என் மனம் பொங்கல் பானை போல், பொங்கிப் பூரித்தது.

மாறிய மதுரைகள்



ஒரே ஒரு கண்ணகி
ஊரை எரித்தாள்!
அதற்காக
ஊர்கள் தோறும்
எத்தனை கண்ணகிகளை
நீ
எரிப்பாய் நெருப்பே?

கண்ணகியாவது
கோவலனுக்காகக்
கொளுத்தினாள்
மதுரையை!

இன்றைய
கண்ணகிகளின் கதையோ
பரிதாபமானது!
அவர்களைக்
கோவலர்களே வந்து
கொளுத்துகிறார்கள்!

— மு. மேத்தா.

பொன்னியின் செல்வன்



M.

அத்தியாயம் 52

உடைந்த படகு

இடி விழுந்ததனால் பாய் மரத்தின் உச்சியில் தீப்பிடித்து எரிவதைப் பார்த்ததும் இனி அம்மரக்கலம் தப்பிக்க முடியாது என்று வந்தியத் தேவன் நிச்சயமடைந்தான். எனவே, தானும் உயிரோடு தப்பிக்க முடியாது.

வந்தியத் தேவனுக்கு அப்போது சிறிதும் மனக்கிலேசம் உண்டாகவில்லை. உற்சாகந்தான் மிகுந்தது. கலகல வென்று சிரித்தான். பாய் மரத்தோடு தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான். நடுக்கடலில் தீயில் வெந்து சாக வேண்டியதில்லையல்லவா? அதைக் காட்டிலும் குளிர்ந்த நீரில் முழுகிக் கடலின் அடியில் சென்று அமைதியாக உயிர் விடுவது மேல் அல்லவா?

ஆயுளில் மிச்சமுள்ள சிறிது நேரத்தை வீணாக்க வந்தியத்தேவன் விரும்பவில்லை. தீப்பற்றி எரிந்த கப்பலின் வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்துக் கொந்தளித்த கடலின் சௌந்தரியத்தை அனுபவிக்க விரும்பினான். தன் உடல் சமாதி அடையப் போகும் இடத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வது நல்லதல்லவா? இம்மாதிரி அகால மரணமடைந்தவர்கள் ஆவி உருவத்தில் இறந்த இடத்தைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்வார்களே? அம்மாதிரி தன் ஆவியும் இந்தக் கடலின் மேலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்குமோ! காற்றில் மிதக்குமோ? அலைகளின் மேலே உலாவுமோ? சுழற்காற்று அடிக்கும் போது தன் ஆவியும் சுற்றிச் சுற்றி வருமோ?

ஆகா! எப்போதாவது ஒரு நாள் இந்தக் கடலில் அரசிளங்குமரி கப்பல் ஏறிப் போனாலும் போவாள். கப்பலை ஓட்டும் மாலுமிகள் "வந்தியத் தேவன் கப்பலோடு முழுகிய இடம் இதுதான்!" என்று காட்டுவார்கள்.

அமரர் கல்கி



அவளுடைய வேல் விழிகளில் கண்ணீர் துளித்து அவளது முழுமதி முகத்தில் முத்து முத்தாகச் சிந்தும். ஆவி வடிவத்திலே அதை அருகிலிருந்து தான் பார்க்கும்படி நேர்ந்தால், அவளுடைய கண்ணீரைத் தன்னால் துடைக்க முடியுமா?......

கப்பல் ஒரு பேரலையின் சிகரத்தின் மேலே ஏறியது. பாய்மரத் தீவர்த்தி போட்ட வெளிச்சத்தில் சுற்றிலும் வெகுதூரம் தெரிந்தது. கரும் பளிங்கு நிறம் பெற்றுத் திகழ்ந்த கடல் நீரில் பாய்மரத் தீயின் ஒளி விழுந்த இடம் மட்டும் பொன் வெள்ளமாகத் திகழ்ந்தது. இந்த அழகின் அற்புதத்தை வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்து முடிவதற்குள் அவனுடைய கண்ணையும் கவனத்தையும் வேறொன்று கவர்ந்தது.

சற்றுத் தூரத்தில் அவன் ஒரு மரக்கலத்தைப் பார்த்தான். அதில் புலிக் கொடி பறக்கக் கண்டான்.

கடவுளே! உன் விந்தைகளுக்கு எல்லையே இல்லை போலும்! — அந்த மரக்கலத்திலே வருகிறவர் இளவரசர் அருள்மொழி வர்மராகத்தான் இருக்க வேண்டும். தன்னைத் தேடிக் கொண்டுதான் அவர் வருகிறார்;— என்று அவனுடைய உள்ளுணர்ச்சி கூறியது!

வந்தியத் தேவன் ஏறியிருந்த கப்பல் சிக்கிக் கொண்டு தத்தளித்த அதே சுழிக் காற்றில் பார்த்திபேந்திரனுடைய கப்பலும் அகப்பட்டுக் கொண்டது. ஆனால் இந்தக் கப்பலில் அச்சுழிக் காற்றின் தன்மையை அறிந்தவர்களும் கப்பலோட்டும் கலையில் வல்லவர்களுமான மாலுமிகள் இருந்தார்கள். பாய்மரங்களில் விரித்திருந்த பாய்களை அவர்கள் இறக்கிச் சுற்றி வைத்தார்கள். காற்றின் வேகம் முழுவதையும் கப்பல் எதிர்த்து நிற்பது அவசியமில்லாத வண்ணமாகக் கப்பலின் சுக்கானைப் பிடித்து இயக்கி வந்தார்கள். ஒரு நிமிஷம் கப்பல் அடியோடு சாய்ந்து 'இதோ கவிழ்ந்து விட்டது' என்று தோன்றும். மறு நிமிடம் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கும். மலை போன்ற அலைகள் அந்தக் கப்பலை எத்தனைதான் தாக்கியும் அதில் இணைக்கப்பட்டிருந்த மரங்களும் பலகைகளும் சிறிதேனும் பிளந்து கொடுக்க வேண்டுமே! கிடையவே கிடையாது! சமுத்திரராஜன் அந்தக் கப்பலைப் பந்து ஆடுவது போல் தூக்கி எறிந்து விளையாடினான். சுழிக் காற்று அக்கப்பலைப் பம்பரம் சுற்றுவது போலச் சுழற்றிச் சுழற்றி அலைத்தது.

வானத்திலிருந்து வெள்ளம் பொழிந்து அந்தக் கப்பலைக் கடலில் அமுக்கி அழித்துவிடப் பார்த்தது. சோழ நாட்டுத் தச்சுவேலை நிபுணர்கள் கட்டிய அக்கப்பலை— தமிழகத்தின் புகழ் பெற்ற மாலுமிகள் ஓட்டிய அக்கப்பலை — கடலும் மழையும் காற்றும் சேர்ந்து தாக்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"இதைக் காட்டிலும் கொடிய சுழிக்காற்றுகளையும் சண்டமாருதங்களையும் நான் பார்த்திருக்கிறேன்; சமாளித்திருக்கிறேன். ஆகையால் கவலைப்படத் தேவையில்லை!" என்று கலபதி கூறினான். ஆனால் அவன் பார்த்திபேந்திரனிடமும் இளவரசரிடமும் வேறொரு அபாயத்தைப் பற்றித் தன் பயத்தை வெளியிட்டான்.

கரிய மேகங்கள் திரண்டு வந்து வானை மூடி நாலாபுறமும் இருள் சூழச் செய்து விட்டன. போதாததற்குச் சோனாமாரியாக மழையும் பெய்தது. கடலில் எழுந்த அலைகளோ வரிசை வரிசையான மலைத் தொடர்களைப் போல் கப்பலைச் சுற்றித் திரையிட்டு மறைத்தன. இந்த நிலையில் அவர்கள் எந்தக் கப்பலைத் தேடிச் சென்றார்களோ அது வெகு சமீபத்தில் வந்தாலும் பார்க்க முடியாது. அந்தக் கப்பலும் இதைப் போலத் தான் சுற்றிச் சுழன்று தத்தளித்துக் கொண்டிருக்கும். கப்பல்கள் ஒன்றோடொன்று மோதினால் இரண்டும் சுக்கல் சுக்கலாகிப் போய்விடும். கப்பலில் உள்ளவர்களின் கதி அதோகதி தான்!

ஆகவே சுழிக் காற்றின் அபாயத்தைக் காட்டிலும் சுற்றிலும் ஒன்றும் பார்க்க முடியாமலிருப்பதுதான் அதிக அபாயம் என்று அம்மரக்கலத் தலைவன் கூறினான்.

இது இளவரசருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆகவே அவர் அத்தனை காற்றிலும் மழையிலும் கப்பலின் ஓரமாக நின்றுகொண்டு தன் கூரிய கண்களின் பார்வையை நாலாபுறமும் செலுத்திக் கொண்டிருந்தார். மின்னல் மின்னியபோதெல்லாம் அவருடைய கண்கள் அதிவேகமாகச் சுழன்று சுற்றுப்புறமெங்கும் உற்றுப் பார்த்தன. அவருடைய உள்ளம் எப்படித் தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதைச் சொல்லி முடியாது. தன் அருமைத் தமக்கை அனுப்பிய தூதன் முரட்டு அராபியர்களிடமும் கொலைகார மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். அது போதாது என்று இந்தச் சுழிக் காற்று வேறு வந்து சேர்ந்தது. ஒருவேளை அவ்வீர வாலிபன் ஏறியுள்ள கப்பலைக் கண்டுபிடிக்க முடியாமலே போய் விடுமோ! கண்டுபிடித்தாலும் அவனை உயிரோடு காண்பது சாத்தியமா? — கலபதி அஞ்சுவது போல் அவன் ஏறியிருக்கும் கப்பல் மேல் நம் கப்பல் மோதி இரண்டும் கடலில் மூழ்கினால் வேடிக்கையாகத்தானிருக்கும்! ஆனால் தந்தையிடம் சொல்ல வேண்டிய செய்தியைச் சொல்லுவது யார்? பார்த்திபேந்திரனிடம் அந்தக் குடும்ப இரகசியத்தைக் கூறுவது இயலாத காரியம்.





கூறினால், அந்தப் பல்லவனுக்கு அது கேலியாயிருக்கும்; அதன் முக்கியத்தை அவன் உணர மாட்டான்.

இதுகாறும் இளவரசர் செய்ய எண்ணிய காரியம் எதிலும் தோல்வியடைந்ததில்லை. இப்போது தோல்வி ஏற்பட்டு விடுமோ?— இல்லை, ஒரு நாளும் இல்லை. பொன்னியின் செல்வனுக்குத் தீங்கு நேருவதையோ, தோல்வி ஏற்படுவதையோ சமுத்திர ராஜன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்!

இருளையும் மழையையும் கிழித்துக் கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்த இளவரசரும் அந்தப் பேரிடி முழக்கத்தைக் கேட்டார். அப்போது மின்னிய மின்னலுக்கு அவரும் கண்களைச் சிறிது மூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. கண்ணைத் திறந்து பார்த்த போது மின்னல் வெளிச்சமில்லாத வேறொரு வெளிச்சத்தைக் கண்டார். சற்றுத் தூரத்தில் ஒரு கப்பல் விரித்த பாய் மரங்களுடன் பேயாடுவது போல் ஆடிக் கொண்டிருந்தது! அதன் பாய் மரத்தின் உச்சியில் தீப்பற்றி எரிந்தது! அந்தத் தீயின் வெளிச்சத்தில் இளவரசர் அதில் ஒரு மனிதன் பாய்மரத்தோடு சேர்ந்து நிற்பதைக் கண்டார்! கடவுளே! இத்தகைய அற்புதமும் நடக்கக் கூடுமா? — அவன் அந்த வீர இளைஞனாகிய வந்தியத் தேவன் தான்! அவன் மட்டும் ஏன் தனியாக நிற்கிறான்? மற்றவர்கள் என்ன ஆனார்கள்? — அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதற்கு இப்போது நேரமில்லை. செய்ய வேண்டியது இன்னதென்பதை ஒரு நொடிப் பொழுதில் இளவரசர் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் பார்த்த காட்சியைக் கப்பலில் இருந்த மற்றவர்கள் பலரும் பார்த்தார்கள். ''அதோ!'' என்று அவர்கள் ஏக காலத்தில் எழுப்பிய பெரிய கூச்சல் காற்றின் பயங்கர சத்தத்தையும் மீறிக் கொண்டு எழுந்தது.

கப்பலோடு சேர்த்துக் கட்டியிருந்த படகண்டை போய் இளவரசர் நின்று கொண்டு, அருகில் நின்ற மாலுமிகளைப் பார்த்து ''உங்களில் யார் என்னுடன் வருவீர்கள்?'' என்று உரத்த குரலில் கேட்டார். அவர் செய்ய உத்

தேசித்த காரியம் இன்னதென்று ஊகித்தறிந்து மாலுமிகள் திகைத்தார்கள். ஆயினும் பலர் போட்டியிட்டு முன் வந்தார்கள்.

பார்த்திபேந்திரனும் கலபதியும் வந்து தடுக்கப் பார்த்தார்கள்.

"இளவரசே! இது என்ன காரியம்! இந்தக் கொந்தளிக்கும் கடலில் படகு எப்படிச் செலுத்த முடியும்? எரிகின்ற கப்பலில் உள்ளவனை எப்படிக் காப்பாற்ற முடியும்? — ஆனாலும் முயற்சி செய்து பார்க்கலாம். தாங்கள் போக வேண்டாம்; போவதற்கு எங்களில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஜாக்கிரதை! இச்சமயம் என்னைத் தடுக்கப் பார்க்கிறவர்களை நான் ஒரு நாளும் மன்னிக்க முடியாது!" என்று இராஜ கம்பீரமான அதிகார தோரணையில் கூறினார். அதே சமயத்தில் படகை அவிழ்த்து விட்டார். "உங்களில் இரண்டு பேர் போதும்; வாருங்கள்!" என்றார்.

படகு கடலில் இறங்கியது. இளவரசரும் அவர் குறிப்பிட்ட இருவரும் அதில் குதித்தார்கள். மறுகணமே படகு கப்பலை விட்டு அகன்று சென்றது. அலைகளின்மேல் ஆவேசக் கூத்து ஆடியது. இளவரசரும் மற்ற இருவரும் துடுப்புகளைப் பலங்கொண்ட மட்டும் வலித்தார்கள். சிறிது சிறிதாகப் படகு எரிகின்ற கப்பலை அணுகியது. இதற்குள் தீ உச்சியிலிருந்து பாதி பாய்மரம் வரையில் இறங்கி விட்டிருந்தது. ஆனால் வந்தியத்தேவனோ அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் தீயின் வெளிச்சத்தில் கப்பலைப் பார்த்தான்; கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வந்த படகையும் பார்த்தான். அந்த அதிசயத்தில் தன்னை மறந்திருந்தான். தான் ஏதேனும் செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

"குதி! கடலில் குதி!" என்று கத்தினார் இளவரசர். அவன் காதில் அது விழவில்லை. செயலற்ற பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தான்.

ஆயிற்று; இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் கப்பல் அடித்தளத்துக்கு நெருப்பு வந்து விடும்; கப்பல் முழுகி விடும். அப்புறம் அவனைக் காப்பாற்றுவது இயலாத காரியமாகிவிடும்.

என்ன செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் இளவரசர் ஒரு நொடியில் முடிவு செய்தார். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கென்றே அந்த அபாயப் படகில் சேர்த்துக் கட்டியிருந்த நீளக் கயிற்றின் இன்னொரு நுனியைத் தமது இடுப்பில் சுற்றி இறுக்கிக் கட்டிக் கொண்டார். மாலுமிகள் இருவருக்கும் எச்சரிக்கை செய்துவிட்டுக் கடலில் குதித்தார்.

இத்தனை நேரம் படகுடன் விளையாடிய அலைகள் இப்போது இளவரசருடன் விளையாடின. ஒரு கணம் அவரை வானத்துக்கு உயர்த்தின; மறுகணம் பாதாளத்தில் தள்ளின. எனினும் இளவரசர் திசையும் குறியும் தவறாமல் எரிகின்ற கப்பலை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு பெரிய, மிகப் பெரிய அலை வந்தது! இளவரசர் மேலே அது விழுந்திருந்தால் அவரை அமுக்கிக் கடலின் அடியில் கொண்டுபோயிருக்கக் கூடும்! ஆனால் அது நல்ல அலை; இளவரசருக்கு ஏவல் செய்ய வந்தது.



அவரைத் தன் உச்சியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய் எரிகின்ற கப்பலின் மேல் தளத்தில் எறிந்தது.

ஏற்கெனவே கட்டு அவிழ்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இளவரசரைப் பார்த்ததும் 'ஆ' என்று அலறி அவரை எடுப்பதற்காகத் தாவிக் குனிந்தான். இளவரசர் அவனுடைய கழுத்தை அப்படியே இறுக்கிக் கட்டிக் கொண்டார். அவன் காதுக்குள் "என்னைப் பிடித்துக் கொண்டு வா! விட்டு விடாதே!" என்றார். சொல்லி முடிந்த தட்சணமே இருவரும் மறுபடியும் கடலில் மிதந்து அலைகளினால் மொத்துண்டார்கள்.

மாலுமிகள் துடுப்புத் தள்ளுவதை நிறுத்திக் கயிற்றைப் பிடித்து இழுக்கலானார்கள்.

இளவரசரும் அவரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த வந்தியத் தேவனும் படகை அணுகினார்கள்.

படகைப் பிடித்து அதில் ஏறுவது எளிய காரியமில்லை. அலைகளுடன் போராடிக் கொண்டு வந்தியத் தேவனையும் தாங்கிக் கொண்டு படகில் ஏறுவதற்கு முயன்ற ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாக இருந்தது.

இதோ படகு கைக்கு அகப்படுவது போலிருக்கும்; அடுத்த கணம் எட்டாத தூரத்தில் போய் விடும்.

கடைசியாக, அதற்கும் ஒரு பெரிய அலை உதவி செய்தது. படகின் அருகில் உயரமாக எழுந்த அந்தப் பேரலையோடு அவர்களும் எழுந்தார்கள். மாலுமிகளின் உதவியுடன் படகில் குதித்தார்கள்.

"துடுப்பை வலியுங்கள்! வேகமாய் வலியுங்கள்!" என்றார் இளவரசர்.

ஏனெனில், எரிகின்ற கப்பல் கடலில் முழுகும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அப்படி முழுகும்போது ஏற்படும் கொந்தளிப்பில் படகு கவிழ்ந்தாலும் கவிழ்ந்து விடும். அது மட்டுமன்று; கப்பல் முழுகித் தீ அணைந்து விட்டாலும் பிறகு மற்றொரு கப்பலை அவர்கள் பிடிப்பதும் அசாத்தியமாகி விடலாம்.

ஆகா! அதோ கப்பல் முழுகத் தொடங்கி விட்டது. கொழுந்து விட்டு எரிந்த பாய்மரங்களுடனே அது கடலில் முழுகிய காட்சிதான் என்ன பயங்கர சௌந்தரியமாயிருந்தது?

அதை அவர்களால் அதிக நேரம் அனுபவிக்க முடியவில்லை.

இளவரசர் எதிர்பார்த்தது போலவே கடலில் ஒரு பெரிய கொந்தளிப்பு. வானளாவி மேலெழுந்த அலைகள்.

படகு என்னமோ அலைகளைச் சமாளித்துக் கொண்டது. ஆனால் எரிந்த கப்பல் முழுகியதும் சுற்றிலும் சூழ்ந்த இருளில் மற்றொரு கப்பல் இருந்த இடமே தெரியாமல் போயிற்று. திக்குத் திசை ஒன்றுமே தெரியவில்லை.

படகும் கப்பலும் ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அகன்று போய்க் கொண்டிருக்கின்றனவோ, — அதைத் தெரிந்து கொள்ளவும் வழியில்லை.

இரண்டிலும் அபாயம் உண்டு.

இருட்டில் கப்பல் இருக்குமிடம் தெரியாமல் அதை நெருங்கிச் சென்று முட்டிக் கொண்டால், படகு துகள் துகளாகும்.

விலகிப் போய் விட்டால், கேட்பானேன்? நடுக்கடலில், காரிருளில் அந்தச் சின்னஞ் சிறு படகினால் என்ன செய்ய முடியும்?

சமுத்திர ராஜனே! உன் காதலி பொன்னி நதி தந்த அருமைச் செல்வனை நீதான் காப்பாற்ற வேண்டும்!

வாயுபகவானுடைய லீலைகள் வெகு வெகு அதிசயமானவை. அந்தப் பெரும் சுழிக் காற்று எவ்வளவு அவசரமாக வந்ததோ அவ்வளவு அவசரமாகவே போய் விட்டது. போகும் வழியிலெல்லாம் கடலைப் படாதபாடு படுத்தி விட்டுப் போய் விட்டது.

சுழிக்காற்றுப் போய் விட்டது சரிதான்; ஆனால் அதனால் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு இலேசில் அடங்கி விடாது. ஒரு இரவும் ஒரு பகலும் நீடித்திருந்தாலும் இருக்கும். அந்தக் கொந்தளிப்பின் வேகம் நெடுந்தூரம்



அருள்வாக்கு

இஷ்டத்தைத் தருவது ஒன்றாகவும், நல்லதைச் செய்வது வேறொன்றாகவும் இருக்கின்றன. ப்ரேயஸ், ச்ரேயஸ் என்று இவற்றை உபநிஷத்தில் சொல்லி இருக்கிறது. இஷ்டமாக இருப்பது எதுவோ அதுவே நமக்குப் பிரியமாக இருக்கிறது. அதுதான் ப்ரேயஸ். இந்த வார்த்தை நடைமுறையில் இல்லை. ச்ரேயஸ் என்ற வார்த்தையை அடிக்கடி கேள்விப்படுகிறோம். உசந்த நன்மைகள் உண்டாக வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யும்போது, "எல்லா ச்ரேயஸும் உண்டாகட்டும்" என்கிறோம். எது உண்மையில் ஓர் உயிருக்கு நல்லதைத் தருவதோ அதுவே ச்ரேயஸ்.

ச்ரேயஸை விட்டு விட்டுப் ப்ரேயஸைப் பிடித்துக் கொள்கிறோம். இஷ்டம் என்று ஒன்றில் போய் விழுகிறோம். கண்டதைத் தின்கிறோம். அப்புறம் அதனால் கஷ்டம் தெரிகிறது. அந்த நிலையில் இஷ்டப்பட முடியாத ஒன்றுதான் — கசப்பு மருந்து, பட்டினி போன்ற ஒன்றுதான் — கஷ்டத்தைப் போக்கி நல்லதைச் செய்ய முடியும் என்று தெரிகிறது. இஷ்டப்பட முடியாத அந்த ஒன்றை ஏற்கிறோம்.

இஷ்டப்படி மனஸை ஓடவிட்டு, அதன் விளைவாகக் கண்டபடி காரியம் செய்து, கஷ்டத்தைத் தேடிக் கொள்ளாமல் இருக்க, தர்ம சாஸ்திரக் கட்டைப் போட்டுக் கொள்ள வேண்டும். அதிலே விதித்திருக்கிற ரூல்கள் மனஸுக்கு இஷ்டமானதாக இருக்காது. போட்டு நெரிக்கிற மாதிரிதான் இருக்கும். ஆனால் இதில் உற்சாகம் ஊட்டுவதான ஓர் அம்சம் இருக்கிறது!

கசப்பு மருந்தைப் பிடித்துச் சாப்பிடுவது என்பது இல்லை. ஒரு நாளும் இல்லை. வேண்டா வெறுப்பாகத்தான் சாப்பிடுவோம். சாஸ்திர ரூல்கள் இப்படி இல்லை. கொஞ்ச காலம் அவற்றைப் பின்பற்றிச் செய்தோமானால் அப்புறம் அவற்றிலேயே ஒரு பிடிப்பு, ஒரு பிடித்தம் ஏற்பட்டு விடும். 'விதியே' என்று அந்த விதிகளை அனுஷ்டிக்காமல் சரியான ஒன்றைச் செய்கிறோம் என்ற சந்தோஷம் ஏற்பட்டுப் பிரியத்தோடு அவற்றை அனுசரிக்க ஆரம்பிப்போம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

பிரயாணம் செய்யும். கோடிக் கரையின் விஸ்தாரமான மணற் பிரதேசத்தையெல்லாம் கடல் ஏறி மூடிவிடும். நாகப்பட்டினத்தின் கடற்கரை மீது பேரலைகள் மோதி இடித்துத் தகர்க்கப் பார்க்கும். இன்னும் அக் கொந்தளிப்பு காங்கேசன் துறை — திரிகோணமலை வரையில் பரவும். மாதோட்டத்தையும் இராமேசுவரத்தையும்கூட ஒரு கை பார்த்துவிடும்.

இளவரசர் முதலியோர் ஏறியிருந்த படகு அலைகளால் மொத்துண்டு மிதந்து கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் துடுப்பு வலிப்பதையும் நிறுத்தி விட்டார்கள். திக்கும் திசையும் தெரியாதபோது, கப்பல் எங்கே இருக்கிறதென்றும் தெரியாதபோது, துடுப்பு வலித்து ஆவது என்ன?

காற்று ஓய்ந்து விட்டது; மழை ஓய்ந்து விட்டது; இடியும் மின்னலும் நின்று விட்டன.

ஆனால் அலைகளின் ஆங்காரம் மட்டும் சிறிதளவும் குன்றவில்லை.

படகு அந்த அலைகளில் தத்தளித்துக் கொண்டேயிருந்தது.

சற்றும் எதிர்பாராத ஓர் அபாயம் அதை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதோ வந்து விட்டது!

எரிந்த கப்பல் முழுகிற்றல்லவா? அப்போது முழுதும் எரியாத ஒரு பாய்மரம் அதிலிருந்து பிரிந்தது. கடலில் அது மிதந்து மிதந்து படகுக்கு அருகில் வந்தது. இருட்டின் காரணமாக வெகு சமீபத்தில் வரும் வரையில் அதை ஒருவரும் பார்க்கவில்லை.

பார்த்தவுடனே, "துடுப்பு வலியுங்கள்! துடுப்பு வலியுங்கள்!" என்று இளவரசர் கூவினார்.

அவர் கூவி வாய் மூடுவதற்குள் அந்தப் பாய்மரம் படகின் அடிப்பகுதியில் இடித்தது.

இடித்த வேகத்தில் படகு 'படார்' என்று பிளந்தது. முதலில் இரண்டு பகுதிகளாகப் பிளந்தது. பிறகு சிறிய சிறிய பலகைத் துண்டுகளாகப் பிளந்து சிதறியது.

"நண்பா! பயப்படாதே! இந்தப் படகைக் காட்டிலும் அந்தப் பாய்மரம் பத்திரமானது. தாவி அதைப் பற்றிக் கொள்!" என்றார் இளவரசர்.

(தொடரும்)



பக்கத்து மேஜையில் இருந்த அந்தத் தந்தி, காற்றுப் பட்டுப் படபடத்தது. மைதிலி அதைக் கையில் எடுத்துத் திரும்பவும் வாசித்தாள்.

'ஸ்ரீகுமாரை விவாகரத்து செய்து விட்டேன். வரும் ஞாயிறு ஹாஸ்டலுக்கு வருகிறேன்.

— திலகா.'

ஸ்ரீகுமார்... மைதிலியின் இரண்டாவது அப்பா...!

அவளுக்கு இடுப்புக்குக் கையை அரண் கொடுத்துச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. அந்தச் சிரிப்பு மனத்தை ஆற்றும். துக்கத்தின் அடர்த்தியைக் குறைக்கும். ஆனால் வேதனையில் சிரிப்பு வருவது அத்தனை சுலபமில்லை. கல்லில் வேர் முளைப்பது மாதிரி சிரமமான காரியம்.

மைதிலிக்கு முதல் அப்பா நன்றாக ஞாபகம் இருந்தார். மைதிலியின் நிஜ அப்பா அவர். திடீரென்று அம்மாவுக்குச் சினிமா சான்ஸ் வந்ததும் அவர் ஓடிப் போனார். தம் மனைவியின் ஸ்பரிசமும் அழகும் தமக்கு மட்டுமே என்கிற இறுமாப்பு கலைந்து போன வேதனை. பிளவு முற்றி, அப்பா விவாகரத்து செய்தார். அம்மா கவலைப்படவில்லை. விவாகரத்து ஆன நாலாம் நாள் ஸ்ரீகுமாரைக் கல்யாணம் செய்து கொண்டாள். 'என்னால் வாழ முடியும்' என்று 'சினி — மாளிகை' பத்திரிகையில் கவர் ஸ்டோரியாகச் சிரித்தாள். ஸ்ரீகுமாருக்கு மைதிலியைப் பிடிக்கவில்லை. ''அவன் பெத்த பிள்ளையை என் கண்ணுல காட்டாதே,'' என்றான். மைதிலி ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டாள். பதின்மூன்று ஆண்டுகளாக ஹாஸ்டல் வாழ்க்கை தான்.

இப்போது அந்த 'ஸ்ரீகுமாரை விவாகரத்து செய்துவிட்டேன்' என்று தந்தி அடித்திருக்கிறாள் அம்மா!

திலகா ஞாயிற்றுக்கிழமை வந்தாள்.

''எப்படி இருக்கே மைதிலி?''

''உம்.''

''என் தந்தி கிடைச்சுதா?''

''உம்.''

மேலே என்ன பேச என்பது போல் திலகா தயங்கினாள். கண்ணில் பொய் இமைகளின் நடுவே தயக்கம் தெரிந்தது.

''நான் ஸ்ரீகுமாரை... டிவோர்ஸ் பண்ணிட்டேன்...''

''உம்.''

''ஏன்னு கேட்க மாட்டியா?''

''......''

''அவருக்கு மார்க்கெட் போனவுடனே காம்ப்ளெக்ஸ் வந்திடுச்சி. நீ அவனோட நடிக்கக் கூடாது, என்னோடதான் நடிக்கணும்னார். அவர் கூட மட்டும்தான் நடிக்கணும்னா இன்னிக்கு நிலைமையில வருஷத்துக்கு ஒரு படம் கூட வர்றது கஷ்டம். திலீப் குமாரோட நடிக்க சான்ஸ் வந்திச்சு. நடிக்கக் கூடாதுன்னு பிடிவாதம் பிடிச்சார். திலீப் போட நடிக்கிறது என்ன சாமானியமா? தாங்க முடியலே... டிவோர்ஸ் பண்ணிட்டேன்.''

''......''

''வந்து... மைதிலி... இப்ப நான் சொல்ல வந்தது என்னன்னா...?''

''என்ன?''

''நான்... நானும்திலீப்குமாரும்கல்யாணம் பண்ணிக்கலாம்னு... முடிவு செஞ்சிருக்



கோம்.''

மைதிலி விளையாட்டு மைதானத்திலிருந்து பார்வையை விலக்கி, திலகாவைப் பார்த்தாள். திலகாவின் முகத்தில் நிதானம் இருந்தது. தான் செய்வதுதான் சரி என்கிற அகங்காரம் இருந்தது.

மைதிலிக்குத் திலீப்குமாரைத் தெரியும். நன்றாகவே தெரியும். 'அங்கிள்' என்று சொல்கிற அளவு உரிமை உண்டு. மற்ற உறவுகள் 'ஸார்' என்பதுடன் நின்றுவிடும். திலீப்குமார் அந்த வட்டத்தை விட்டுக் கொஞ்சம் விலகியவர். அவர் மகன் கிரீஷ் பக்கத்து ஹாஸ்டலில் இருக்கிறான். அவனை அவர் பார்க்க வரும் சமயம், திலகா மைதிலிக்கு ஏதாவது கொடுத்து அனுப்புவாள். அதைக் கொடுக்க வருவார்.

திலீப்குமாருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. குழந்தைகள், மனைவி என்று சந்தோஷமான தாம்பத்தியம் நடத்திக் கொண்டிருந்தவரின் மனசில் கல் எறிந்து குழப்பி விட்டிருக்கிறாளா இவள்?

அந்த 'அங்கிள்' தான் அடுத்த 'அப்பாவா?' எனக்கு அவர் மூன்றாவது அப்பாவாகி விடுவார்!

மைதிலி பதில் பேசாமல் திலகாவைப் பார்த்தாள். நிதானமாய்த் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தாள் திலகா.

''ம்மா...''

''என்ன மைதிலி?''

''திலீப்குமாரைக் கல்யாணம் பண்ணிக்

அவர்களைக் காப்பாற்ற வேண்டும்...



கணும்னு தீர்மானிச்சுட்டியா?''

''உம்... உங்கிட்ட சொல்லிட்டு நாளைக்குக் காலைல பேப்பருக்கு நியூஸ் கொடுத்திடலாம்னு நினைச்சோம்.''

''அவர் வொய்ஃபுக்குத் தெரியுமா?''

''சமாளிச்சிக்கலாம்னு சொல்லிட்டார். சாதுவாம். எப்படியாவது சரிக்கட்டிடுவார்.''

''உனக்கு மனசு குத்தலையா?''

''இங்க பாரு மைதிலி... இப்ப நான் அவரைப் பண்ணிக்கிட்டால்தான் ஓர் இமேஜ் உருவாகும். அவர் படத்தில் என்னைப் போடுவார். ஏற்கெனவே இன்னொருத்தி போட்டி போடுறா... உனக்கு வியாபார நெளிவு சுளிவு தெரியாது மைதிலி!''

''கல்யாணம் வியாபாரமில்லேம்மா...''

''உனக்குப் புரியாது மைதிலி. நான் இப்ப அவரைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னு... பணம் இருக்காது நமக்கு. இருக்கிற பணமும் குறையும். உனக்கு இதே வசதி கிடைக்காது.''

''வசதி இல்லாமல் போகலாம்... ஆனால்... நிம்மதி கிடைக்கும். நிம்மதி இருந்தால் போதும். மனசுல சந்தோஷம் வந்திடும்.''

இலகா இளக்காரமாய்ச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு எரிச்சல் ஏற்படுத்திற்று.

மைதிலி மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஐந்து நிமிடங்கள் காத்திருந்து இலகா ஹை ஹீல்ஸ் சப்திக்க வெளியேறினாள்.

மைதிலி திரும்ப அறைக் கதவைத் திறந்து பார்த்தபொழுது இலகா மாணவிகளுக்கு ஆட்டோகிராப் போட்டுக் கொண்டிருந்தாள்.

மனம் ஒரு நிலையில் இல்லை. தொண்டை வரை வந்து எம்பிக் குதிப்பது போல் ஹிம்சை. இலகா இதற்குள் 'பிரஸ் மீட்டைக் கூட்டியிருப்பாள். 'திலீப்குமாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று பளிச்சென்று மின்னும் காமிரா வெளிச்சங்களுக்கு நடுவில் இருட்டுச் செய்தி சொல்லியிருப்பாள்.

மைதிலியின் கண்களுள் சூடு பரவியது. அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுத் திரும்பினாள்.

''யாரு?''

''மேட்ரன் வந்திருக்கேன் மைதிலி... உனக்கு போன் வந்திருக்கு.''

''யார்கிட்டேயிருந்து மேடம்?''

கதவைத் திறந்தபோது வெள்ளை வெளேரென்ற சேலையில் மேட்ரன் நின்றிருந்தாள். நெற்றியில், கண்ணில், உதட்டு விளிம்பில் இறுக்கம் இருந்தது.

''யாரோ... கிரீஷாம்...''

மைதிலி ரிசப்ஷனுக்குப் போய் போன் பேசினாள்.

''ஹலோ... மைதிலி ஹியர்.''

''நான் கிரீஷ் பேசறேன் மைதிலி.''

''சொல்லுங்க.''

''சேதி கேள்விப்பட்டியா?''

''உம்...''

''என்ன பண்ண?''

''நாம என்ன பண்ண முடியும்? அணில் வானத்தைத் தொட முடியாது கிரீஷ்.''

இதற்கு முன் கிரீஷுடன் இத்தனை உரிமையோடு பேசியதில்லை. நாலைந்து தடவை பார்த்திருக்கிறாள். அவனுடன் 'நோட்ஸ்' பரிமாறிக் கொண்டதுண்டு. இமைரென்று அந்த எல்லையைத் தாண்டிச் சொந்த விவகாரங்களைப் பேசிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் சங்கடப்படுத்திற்று.

''மைதிலி... உன்னைப் பார்க்க முடியுமா?''

''......''

''மைதிலி... நான் பேசறதைக் கேக்குறியா...?''

''ஆமா... உம்... பார்த்து லாபமில்லை கிரீஷ். அவங்க தீர்மானிச்சிட்டாங்க.''

''இல்லை, மைதிலி! நாம அவங்களை எப்படியாவது காப்பாத்தியாகணும்! இப்பவே காலேஜுக்குள்ள என்னைப் பார்த்துக் கண்டதும் கேக்க ஆரம்பிச்சுட்டாங்க மைதிலி. இதுக்கு ஒரு முடிவு எடுக்கணும். ப்ளீஸ்... பீச்சுக்கு வா மைதிலி... வருவியா?''

''......''

''ப்ளீஸ்.''

''உம்.''

கிரீஷ் ஐந்து நிமிடங்களில் வந்தான். கண்களில் வேதனை இருந்தது. முகத்தில் சோர்வு படர்ந்திருந்தது. மைதிலி பக்கத்தில் உட்



நண்பர்: ஒண்ணு, நீங்க கவர்ன்மெண்ட் டாக்டர் உத்தியோகத்தை ராஜினாமா செய்ங்க; அல்லது, இந்த பிரைவேட் கிளினிக்கை விடுங்க!

டாக்டர்: ஏன்?

நண்பர்: அங்கே வர்றவங்களிடம் ஃபீஸ் கேட்டு, இங்கே வர்றவங்களிடம் லஞ்சம் கேட்டு ஒரே குளறுபடி பண்ணிடறீங்களாம்...!

— அ. தெய்வசிகாமணி.

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)
9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017

தளபதி திடமதி



பரிசு ரூ. 400/-

சென்ற வாரம் நூறு ரூபாய் பரிசுகள் இரண்டினை இரு வாசகர்கள் தட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். அடுத்து இருநூறு ரூபாய் பரிசு பெறப் போகிறவர் யார்? மாறிவரும் அரசியல் சூழ்நிலைகள் சமுதாயப் பிரச்னைகளுக்கு ஏற்ப, தளபதி திடமதி என்ன 'விட்' அடிப்பார் என்பதைக் கீழே கூப்பனில் எழுதி அனுப்புங்கள். பிரகாசமானால் பரிசு ரூ. 25/-. அடுத்து வரும் பல வாரங்களில் ஒருவரே எழுதிய சில துணுக்குகள் பிரகாசமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சப் பரிசு ரூ. 400/-. உறை மீது "தளபதி திடமதி" என்று குறிப்பிடவும்.

கூப்பன்:

கல்கி இதழ் 13.3.88 — முடிவு தேதி: 22.3.88.

தளபதி திடமதி: "..................

....

....

....

....

....

....

....

....

....

....

....

....

என் பெயர்: ....

விலாசம்: ....

....

சார்ந்து கொண்டு முழங்கால்களைக் கட்டிக் கொண்டான். பேச முடியாதபடி ஒரு தவிப்பு தெரிந்தது.

"சொன்னால் தப்பா நினைச்சுக்கக் கூடாது," என்று ஆரம்பித்தான்.

"சொல்லுங்க."

கிரீஷ் முகத்தை ஒரு நிமிஷம் கைகளால் பொத்திக் கொண்டு அழுத்தமாய்த் துடைத்தான்.

"வந்து... மைதிலி... நான் சொல்லப் போவதைக் கேட்டு நீ அதிர்ந்துவிடக் கூடாது."

அவன் சொன்னதைக் கேட்டு அதிராமல் இருக்க முடியவில்லை.

திலகாவால் நம்ப முடியவில்லை. ஒரு தடவை கண்ணைக் கசக்கிக் கொண்டாள். இல்லை — இது நிஜம்தான். சத்தியமான நிஜம். மகள் திருமணக் கோலத்தில் நிற்கும் நிஜம்.

கடவுளே! என்ன ஆயிற்று இந்தப் பெண்ணுக்கு? படிப்பை முடிக்க முழுசாய் இன்னும் ஒரு மாதம்தானே இருக்கிறது! அதற்குள் என்ன அவசரம்?

"எங்களை ஆசீர்வாதம் பண்ணும்மா."

மைதிலியின் நிதானம் பிசிறில்லாமல் குரலில் பரவிக் கிடந்தது. கழுத்தில் மாலைக்குள் படர்ந்திருந்த ஈரத்தை இயல்பாய்த் துடைத்துக் கொண்டாள்.

"என்ன பண்ணியிருக்கேன்னு உனக்குப் புரியுதா மைதிலி?"

"நல்லாப் புரியுதும்மா."

"ஏம்ப்பா... உனக்கு எங்க புத்தி போச்சுது?"

கிரீஷ் மாலையைக் கழற்றி, கையில் படர விட்டுக் கொண்டு சிரித்தான்.

"எங்கேயும் போகாம என்கிட்டேயே புத்தி இருக்கிறதுனாலேதான் இப்படி நடத்துக்க முடிஞ்சுது ஆண்ட்டி."

"உங்கப்பாவுக்குத் தெரிஞ்சா என்ன நடக்கும்?"

"ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு நேரா இங்கேதான் வர்றோம், ஆண்ட்டி. இனிமேதான் அப்பாகிட்டே போகணும். அவருக்கும் அதிர்ச்சியாத்தான் இருக்கும். ஆனா... சில விபரீதங்களைத் தடுக்கணும்னா அதிர்ச்சியைத் தர்றதைத் தவிர வேறே வழியில்லே," என்றான் கிரீஷ்.

திலகா பதில் பேசாமல் ஆணி அடித்த மாதிரி நின்றாள். காவிரி கோபம் கொண்டு வெள்ளமாய்ப் பாய்கிற மாதிரி அவள் மனம் சுழன்றது.

"எங்களுக்கு வேற முடிவு சத்தியமாத் தெரியலே. நாங்க உங்க கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டோமே தவிர, நாங்க காதலர்கள் இல்லே. எங்களுக்குள்ள இப்போதைக்குச் சக மனுஷர் மேல் உள்ள அன்பு இருக்குது. அது காதலா மாறுகிற வரைக்கும் நாங்க காத்திருப்போம். அது எங்களுக்குப் பெரிசில்லே" என்றான் கிரீஷ்.



頭痛油
身体驅風
அமிர்தாஞ்சனின் ஹீரோ சூப்பர் பாம்.
சீன மொழியில் இதன் மறுபெயர்
'வலி நிவாரணம்'.
OBM 707 TM
HERO
Amrutanjan Limited
ஹீரோ சூப்பர் பாம் தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கிறது.

ஆகவே, ⑨

செக்ஷன் 302 படி...

"மிஸ்டர் அந்தோணி, நிவிதாவை நமக்கெதிராப் பயன்படுத்தறாங்களா... எப்படி? புரியலையே'' என்றான் ஷியாம், நாற்காலியில் இடம், வலமாக லேசாக ஆடிக் கொண்டு.

''எந்த வகையிலேன்னு எனக்குத் தெரியலே. ஆனா அந்த ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்காரங்க ஏதோ ஒரு குறுக்குத் திட்டத்திலே இறங்கியிருக்காங்க. என் உதவி வேணும்னு தைரியமாக் கேட்டானே அவன்? லஞ்சம் தர்றேன்னு ஆசை காட்டினானே...''

''சரி, என்ன மாதிரி உதவின்னு சொல்லலையா?''

''நான்தான் அவனைப் பேசவே விடலையே.''

''தப்புப் பண்ணிட்டீங்க சார். அவன் தனியா சந்திக்கணும்னு சொன்னானே, நீங்க சரி, சந்திக்கலாம்னு சொல்லியிருக்கணும். அவன் சொல்ற இடத்தில போய்ச் சந்திச்சிருக்கணும். என்ன உதவி கேக்கறான், என்ன அவன் நோக்கம்னு தெரிஞ்சிக்கற வாய்ப்பை விட்டுட்டீங்களே..''

''அந்தச் சமயம் எனக்கு மூளை இப்படிக் ஓர்ட்டிக்கலா வேலை செய்யலே சார். என்னை விலை பேசற அவமானம் ஏற்பட்டதிலே கோபமா பதில் சொல்லத்தான் தோணிச்சு.''

''நிவிதா ஹரியைத் தன் சொந்தக்காரன்னு சொன்னாளா?''

''ஆமாம் சார்.''

''என்ன பேசினேன்னு கேட்டதுக்கும் பதில் சொன்னாளா?''

''ஆமாம் சார். பர்ஸனல்னு சொல்லிச்சி.''

''ஐ. சி. ஆனா நிவிதாவைப் பொறுத்த வரை இந்தப் பத்து நாள்லயே ஓரளவு கணிக்க முடியுதே... நல்ல குடும்பத்துப் பொண்ணு. கண்ணியமான பொண்ணு. தன்மானம் பார்க்கிற குணம். அதேசமயம் சந்தேகம் ஏற்பட்டுட்டா அதைக் க்ளியர் செய்துக்க வேண்டியது ரொம்ப முக்கியம். தெரிஞ்ச வரையில நிவிதா மேல எந்தச் சின்னத் தப்பும் இல்லே. ரிப்போர்ட்டும் சுத்தமா இருக்கு. நான் கூப்பிட்டுப் பேசிடறேன். விசாரிச்சிடறேன். நம்ம கம்பெனிக்கும் ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்சுக்கும் நடக்கிற வழக்கைப் பத்திச் சொல்லி எச்சரிச்சு வச்சிடறேன். நீங்களும் கொஞ்சம் கவனமா இருங்க. போங்க. போய் நிவிதாவை வரச் சொல்லுங்க.''

அந்தோணி கையில் வைத்திருந்த தன் பின்னை மேஜையில் இருந்த பின் குஷனில் குத்திவிட்டு, கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே சென்றார்.

ஷியாம் உதட்டுக்குள் உற்பத்தியான சிரிப்பைக் கலைத்துக் கொண்டு, ''யெஸ், கம் இன்'' என்றான்.

நிவிதா உள்ளே வந்து நின்று, ''வரச் சொன்னீங்களா...'' என்று இழுத்தாள்.

''ஆமாம். உக்காருங்க.''

அமர்ந்து அவன் முதுகுக்குப் பின்னால் ஏர்கண்டிஷனரைப் பார்த்தாள்.

''நிவிதா, இதே மெட்ராஸ்ல உள்ள ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்ங்கிற நிறுவனம் மேல நம்ம கம்பெனி வழக்கு ஒண்ணு போட்டிருக்கு. மோசடி வழக்கு. அஞ்சரை லட்சம் ரூபாய் மோசடி செஞ்சுட்டாங்க. வட்டியோட சேர்த்துக் கிட்டத்தட்ட ஏழு லட்சம் கேட்டுத்தான் வழக்குப் போட்டிருக்கோம். இன்னும் விசாரணைக்கு வரலே. இந்தக் கேஸை உடைக்கிறதுக்காக அவங்க சில அண்டர்கிரவுண்ட் வேலைகள் செய்யப் போறதாத் தகவல் வந்திருக்கு. இது தொடர்பா நம்ம ஆபீஸ்ல வேலை பார்க்கிற சிலரை லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கித் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிகள் செய்யறாங்க. புரியுதா?''

''புரியுது சார். ஆனா, இதையெல்லாம் எதுக்கு என்கிட்டே...?''

''நீங்க இங்கே புதுசாச் சேர்ந்தவங்க. இந்தத் தகவல்கள் தெரியாதில்லையா? அதனால சொன்னேன். நேர்மையா, கம்பெனிக்கு விசுவாசமா நீங்க நடந்துக்குவீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனாலும் சொல்ல வேண்டியது என் கடமை. எந்தவித

பட்டுக்கோட்டை பிரபாகர்

மான சபலத்துக்கும் இடம் கொடுத்துட வேணும். இதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.''

''சார், துரோகம்னு என்னன்னுகூட எனக்குத் தெரியாது சார். எனக்கு வேலை கொடுக்கிற, மாசா மாசம் சம்பளம் கொடுத்து அதன் மூலமா என் குடும்பத்தையே காப்பாத்திக்கிட்டிருக்கிற நிறுவனத்துக்கு எதிரா என்னால் சிந்தனைகூடச் செய்ய முடியாது.''

''வெரிகுட். இந்த நேர்மையும், விசுவாசமும் கடைசி வரைக்கும் இருக்கணும். இருக்கும். எனக்குத் தெரியும். ஓர் அறிவுரையாத் தான் சொன்னேன். உங்க சீட்டுக்குப் போங்க.''

''தாங்க்ஸ் சார்'' என்று எழுந்து கொண்டான்.

தன் மேஜைக்கு வந்தாள். லேசாகத் தலையை வலித்தது. உள்ளுக்குள் திடும், திடும் என்று பெரிய சத்தத்தில் இதயம் அதிர்ந்து கொண்டிருந்தது.

சற்றுமுன் போனில் அந்த யாரோ ஹரி பேசின விஷயங்கள் அதே குரலில் காதருகே ஒலித்துக் கொண்டிருந்தன.

சில அதிர்ச்சியான தகவல்களை நீங்க தாங்கிக்க வேண்டி வரும்!

அநியாயமா ஒரு பொண்ணோட வாழ்க்கை வீணாய்டக்கூடாதேங்கிற அக்கறையிலே சொல்றேன்!

வினோத்குமார் பத்திச் சில ஆதாரபூர்வமான தகவல்கள் வெச்சிருக்கேன்!

பார்த்துட்டு நம்புறதும், நம்பாததும் உங்க இஷ்டம்!

நாளைக்கு என் தபால் பாருங்க!

வினோத்குமாரைப் பற்றி அப்படி என்ன தகவல்? வலிய ஒருவன் மெனக்கெட்டு என் விலாசமும், போன் நம்பரும் தெரிந்து கொண்டு போன் செய்து பேச வேண்டிய அவசியம் என்ன? யார் இந்த ஹரி?

வினோத்குமாருக்கு வேண்டாத நபரா? அவர் மேல் உள்ள ஏதோ ஒரு பொறாமை காரணமாக இப்படி ஒரு சதி வேலையில் இறங்கியிருக்கிறானா?

வினோத்குமார் யாரையும் பகைத்துக் கொள்ள மாட்டாரே... கொஞ்சம் முன் கோபி. ஆனாலும் தம் மேல் தவறு இருந்தால் உடனே யாராயிருந்தாலும் மன்னிப்புக் கேட்டுவிடுகிற பண்பு உண்டே. பிச்சைக்காரனிடம்கூட, ''ஸாரிப்பா, சில்லறையா இல்லை'' என்று கனிவாகச் சொல்பவர் ஆயிற்றே!

அவரைப் பற்றி அபாண்டமாக நினைப்பதே கூடத் தவறு!

ஆனாலும்... ஆனாலும் அவன் என்னென்னவோ சொல்கிறானே... ஆதாரபூர்வமான தகவல் என்கிறான். என் வாழ்க்கை வீணாகி விடக் கூடாது என்கிறான். எல்லாம் நாடக வார்த்தைகளா?

ஒரு வகையில் பார்த்தால்... வினோத்குமாரை எனக்கு எவ்வளவு தூரம் தெரியும்? இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சந்திப்பு. ஒவ்வொரு சந்திப்புமே மனத்தில் பூட்டி வைத்து நினைத்து மகிழக் கூடிய சம்பவங்கள் நிறைந்தவையே...



எவ்வளவு அன்பு என்மேல். சாதாரணத் தலைவலி என்றால் கூடத் துடித்துப் போய் விடுவதும், தாமதமாக வந்தால் கலங்கிப் போவதும், மற்ற ஆடவர் என்னைப் பார்த்தாலே கோபம் கொள்வதும்... சேச்சே... வேஷம் என்று எப்படி நினைப்பது?

ஒருவேளை... இது ஒரு முகமோ? வினோத்குமாருக்கு வேறு முகங்களும் இருக்கலாமோ? வினோத்குமார் தம் வீட்டில் குடும்பத்தினரிடம் எப்படி நடந்து கொள்வார் என்பது எனக்குத் தெரியாதே... அலுவலகத்தில் சக நண்பர்களிடமும், மேலதிகாரிகளிடமும் எப்படி நடந்து கொள்வார் என்பது எனக்குத் தெரியாதே... ஊர் போகும் போது, வேலை நேரம் போக என்ன, என்ன செய்வார் என்பது எனக்குத் தெரியாதே...

ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறேன்? வினோத்குமார் சிகரெட் பிடிப்பார். சமயங்களில் பீர் குடிப்பார். அதைத் தவிர வேறு எந்தக் கெட்ட பழக்கங்களும் கிடையாது.

ஆனால் போனில் இவன்...

நிவிதா மிகவும் தவித்தாள். மனசு ஒரு நிலைக்கு வராமல் அலையடித்துக் கொண்டிருந்தது. போன் தகவல்படி அவனை நாளைக்குச் சந்திப்பதா, வேண்டாமா என்று ஒரு தீர்மானத்திற்கு வர முடியவில்லை.

உணவு இடைவேளையின் போது விமலா, "என்னச்சு நிவிதா, ஒரு மாதிரியா இருக்கே? நார்மலா இல்லே உன் முகம்!" என்றாள்.

"ஒண்ணுமில்லே" என்றாள்.

மாலை விடுதிக்கு வந்ததும் அதே கேள்வியைப் பத்மா கேட்க, அவளிடம் சொல்லலாம் போலத் தோன்றியது. பத்மா காதலித்துத் திருமணம் செய்து கொண்டவள். அதனால் எனக்கு நல்ல யோசனை சொல்லலாம்.

"எதுக்கோ தயங்கறே நீ. கமான், என்ன நிவிதா?" என்றாள் துவைத்து எடுத்து வந்திருந்த துணிகளை ஒவ்வொன்றாக எடுத்து உதறி, கொடியில் போட்டுக் கொண்டு.

"பத்மா, உன் புருஷனைப் பத்தி ஒரு முக்கியமான தகவல் இருக்குன்னு யாராச்சும் போன் செஞ்சுச் சொன்னால் உனக்கு எப்படி இருக்கும்?" என்றாள் நிவிதா. கட்டிலில் அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டிருந்தாள்.

"எந்த மாதிரித் தகவல்னு தெரியாம எப்படிப் பதில் சொல்றது நிவிதா?"

"தகவல் இன்னும் சொல்லலே. உன் வாழ்க்கையைப் பாதிக்கிற மாதிரி தகவல்! அதைத் தெரிஞ்சுக்க மறுநாள் சந்திக்கச் சொல்றான் போன்ல. நீ என்ன முடிவு செய்வே?"

"சந்திச்சுப் பேசினதுக்கப்புறம்தான் முடிவு செய்ய முடியும் நிவிதா."

"சந்திப்பியா? என் கேள்வி அதுதான்."

"தாராளமா. என்னதான் சொல்றான்னு தெரிஞ்சுக்க வேணுமா?"

"அப்போ உன் புருஷன் மேல உனக்கு நம்பிக்கை இல்லேயா?"

"இது அப்படி இல்லே. என் புருஷன் மேல எனக்கு நம்பிக்கை இருக்குதான். ஆனால் தவறு செய்யறது மனுஷ புத்தி. யாரும் செய்யலாம். என் புருஷன் என்ன தவறு செய்யறான்னு நம்பிக்கையாத் தெரிஞ்சா, அந்தத் தவறிலேர்ந்து அவரைத் திருத்த முயற்சி எடுக்கலாமே... கத்தி வளைச்சது போதும். நேரா சொல்லு. வினோத்குமார் பத்தி யாராச்சும் தப்பா எதுவும் சொன்னாங்களா?"

"இன்னும் சொல்லலே. நாளைக்குச் சொல்றதா போன்ல ஹரின்னு ஒருத்தன் சொன்னான். எங்கே சந்திக்கிறதுன்னு தபால்ல நாளைக்குத் தகவல் வருமாம். அதன்படி நான் சந்திக்கட்டுமா, வேணாமான்னுதான் குழப்பம்!"

"நிவிதா, உன் வினோத் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நான் பொதுவாச் சொல்றேன். முழு யோக்கியன்னு யாரும் இல்லே. நீ இப்போ காதல் கட்டத்திலேதான் இருக்கே. உனக்குக் கிடைக்கிற தகவல் உண்மையா இருந்தா... பிரச்னை இல்லாம விலகிக்க வாய்ப்பிருக்கு."

"என்ன நீ, என்னென்னமோ சொல்றே... என் வினோத் மாட்டு மடியிலேர்ந்து நேராக் கறந்த பால் மாதிரி! கலப்படமே இல்லாதவர். ஆனாலும் அந்த ஹரி என்னதான் சொல்றான்னு கேட்டுக்க முடிவு பண்ணிட்டேன்," என்றாள் நிவிதா தெளிவுக்கு வந்து.

அந்த ரெக்கார்டிங் அறை மிகச் சிறியதாய் இருந்தது. குளிர் செய்யப்பட்டிருந்தது. பிரம்மாண்ட வெளிநாட்டு செட்டில் டேப் சுழன்று கொண்டிருக்க... ஹெட்போன் அணிந்த அந்தப் பெண் கையில் காகிதம் வைத்திருந்தாள். அருகில் நின்றிருந்த தீபக்கும் ஹெட்போன் அணிந்திருந்தான். அவனிடமும் வசனம் எழுதிய காகிதம் இருந்தது.

"ராஜி, நான் உன் அம்மா கேக்கறேன் சொல்லும்மா. உனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்லேயா? ஏன்மா உம்முன்னு இருக்கே?" என்றாள் அந்தப் பெண்.

"அதில்லே. என்ன போட்டும் என் முகப்பரு போகவே இல்லேயம்மா. அடுத்த வாரம் கல்யாணம். என்ன செய்வேன்?" என்று பெண் குரலில் பேசினான் தீபக்.

"அசடு! இவ்வளவுதானா? 'பிம்ப்பிள் குட்பை' க்ரீம் தடவு. போய்டும்."

"ஆம்! உபயோகியுங்கள் புதிய 'பிம்ப்பிள் - குட்பை'" என்று தன் சொந்தக் குரலில் பேசினான் தீபக். பேசிவிட்டு, டேப்பை நிறுத்திவிட்டு, "ஒரே வாரத்தில போய்டும்னு சொல்றதுக்குப் பதிலா வெறுமனே போய்டும்னு சொல்லிட்டேம்மா சாந்தா. இன்னொரு தடவை பேசிடலாம், என்ன?" என்றான்.

அப்போது படியேறி மேலே வந்த ஷியாம் ரெக்கார்டிங்ரூம் கண்ணாடிக் கதவு வழியாகத் தீபக்கைப் பார்த்துக் கையாட்டிவிட்டு, உரிமையாய்க் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

"தொந்தரவா?"

"இல்லேப்பா. ஒரு நிமிஷம் இரு. இந்த



விளம்பரம் மட்டும் ரெக்கார்ட் செஞ்சிட்டு வந்துடறேன். தும்மிடாதே. இருமிடாதே. சிரிச்சுடாதே. பேசாம கவனி. சாந்தா, ரெடியா?''

''க்கும்'' என்று கனைத்துக் கொண்டு, ''ரெடி சார்'' என்றாள் அவள்.

''ஸ்டார்ட்'' என்று பதிவு செய்யும் பித்தானை அழுத்தியதும்...

''ராஜி, நான் உன் அம்மா கேக்கறேன், சொல்லும்மா'' என்று மறுபடி ஆரம்பித்தாள். ஷியாம் அமைதியாக இருவர் பேசுவதையும் கவனித்தான்.

பேசி முடித்ததும், ''வா, போலாம்'' என்று வெளியேறித் தனது தனியறைக்கு அழைத்து வந்தான் தீபக்.

''தீபக். நீ பொம்பளை குரல்ல பேசுவேன்னு எனக்குத் தெரியாதே. பொம்பளை தோத்துருவா போலிருக்கு. நான் எதுக்கு வந்தேன்னு...!''

''தாங்க்ஸ் சொல்லிட்டுப் போகவா?''

''ஆமாம். நான் சொல்லிக் கொடுத்த மாதிரியே ஹரின்னு சொல்லி அந்தோணிகிட்டேயும், நிவிதாகிட்டேயும் அற்புதமாப் பேசியிருக்கே, தீபக். லெட்டர் போஸ்ட் செஞ்சிட்டியா?''

''ஆச்சு. டைப் பண்ணி ஹரின்னு கையெழுத்துப் போட்டிருக்கேன். வெறும் தேங்க்ஸ் பத்தாது மச்சான். இந்த வீக் எண்ட்ல பெங்களூர் போறோம். செலவு பூரா உன்னது. அப்பத்தான் நம்ம ஒத்துழைப்பு தொடரும்'' என்று சிரித்தான் தீபக்.

''ஷ்யூர். அவசியம் போகலாம்,'' என்று தீபக்கின் விசாலமான மேஜை மேல் அமர்ந்து கொண்ட ஷியாம், ''இன்னொரு காரியம் செய்றியா?'' என்று கேட்டான்.

''சொல்லு.''

''ஒரு பேப்பரும், பேனாவும் கொடு.''

பெற்றுக் கொண்டு ஒரு போன் நம்பர் எழுதினான். கீழே விறுவிறுவென்று எழுதி முடித்துத் தீபக்கிடம் கொடுத்து, ''இந்த நம்பர் ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் முதலாளி வல்லபன் வீட்டு நம்பர். டயல் பண்ணி, வல்லபன் இருக்காரான்னு கேட்டு, அவர்கிட்டே இந்த வசனத்தைப் பேசு,'' என்றான்.

தீபக் உடனே ரிசீவரை எடுத்து எண்களைச் சுழற்ற...


''இருடா. நீ பேசப் போறது பொம்பளைக் குரல்ல. அதாவது...''

''புரியுது'' என்று சொன்ன தீபக் பெண் குரலில், ''ஹலோ, வல்லபன் சார் இருக்காரா? நீங்கதான் பேசறதா? வணக்கம் சார். என் பேர் நிவிதா. நான் மீரஜ் எலெக்ட்ரிகல்ஸ் ரீஜனல் ஆஃபீஸ்ல வேலை செய்றேன். உங்க ஸ்தாபனம் மேல போடப்பட்டிருக்கிற வழக்கு சம்பந்தமா என்னால உங்களுக்கு உதவி செய்ய முடியும். உங்க மோசடி சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் கொண்ட டாக்குமெண்ட்ஸ் ஆபீஸ்ல எங்கே இருக்குன்னு எனக்குத் தெரியும். அதை எடுத்து உங்ககிட்டே ஒப்படைச்சா எனக்கு என்ன தருவீங்க சார்?'' என்றான்.

(தொடரும்)



கொடியேற்றம்



போய் விட்டிருப்பான் என்றுதான் பெரியசாமி நினைத்திருந்தார். புழக்கடைத் தோட்டம் அரை ஏக்கர் பரப்பு. ஒரு மூலையில் நின்று களை பிடுங்கும் போது மறு மூலையில் நிற்கிறவர்களைக் கவனிக்கத் தோன்றாது. அவர் கவனிக்கவுமில்லை.

ஹைதராபாத்திலிருந்து அவரது ஜெயில் தோழரான ஆத்மாராவ் கொண்டு வந்து கொடுத்த ஒட்டு மாஞ்செடியை நட்டு, மண்ணைக் கொத்தி விட்டுத் திரும்பிய போது சிவானந்தம் இன்னும் இருப்பதைப் பார்த்தார்.

அவன் சும்மா நிற்கவில்லை.

வாழை மரத்தைச் சுற்றி மண்ணை வெட்டி அணைத்துக் கொண்டிருந்தான்.

ஒன்று கிடக்க ஒன்று தாறுமாறாய்ச் செய்து வைக்கப் போகிறான் என்று துணுக்குற்று வேகமாக அவனை நெருங்கினார். அவர் காலடிச் சத்தம் கேட்டது. சிவானந்தம் திரும்பவில்லை. மண்வெட்டி வாகாக விழுந்தது, வாழைக் கன்று மீது படாமல். ஒரு செய் நேர்த்தியோடு... கண்ணுக்கு நிறைவான, சுத்தமான வேலை.

''நீ இன்னும் போகலியா தம்பி?''

மண்ணை அணைத்து முடித்து விட்டுத் திரும்பினான் சிவானந்தம். கருகருவென்ற மீசையைச் சுற்றியும் புருவ மேட்டிலும் வியர்வை குறுஞ் சிரிப்பாகப் பூத்திருந்தது.

அவன் மண்வெட்டியைக் கீழே வைத்தான். மடித்திருந்த வேட்டியை எடுத்துக் கீழே விட்டான். ஜிப்பாப் பையிலிருந்து ஒரு கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

சிவானந்தத்தின் ஒவ்வோர் அசைவிலும் ஓர் அமைதி இருந்தது. நிதானம் அல்ல. ஒரு கலங்காமை. ஒரு நிச்சயம்.

அவன் பெரியசாமியைப் பார்த்து, சின்னதாய்ச் சிரித்தான். அவ்வளவு இலேசில் என்னை நீங்கள் அனுப்பி விட முடியாது என்று பிரியம் கலந்த பணிவாய், உறுதியாய் வெளிப்படும் சிரிப்பு.

''நீங்க எனக்குப் பதில் சொல்லலீங்களே?''

''சொல்லிட்டேனே! எம். எல். ஏ., யூனியன் சேர்மன், பஞ்சாயத்துத் தலைவர், உனக்குச் சௌகரியப்பட்டா கலெக்டர்னு போய்ப் பாருன்னு தெளிவாத்தானே சொன்னேன்."

அவன் வாழை மரத்தின் அருகில் இரண்டு சிறு இலைகளுடன் முளைத்து வந்திருந்த கன்றைத் திரும்பிப் பார்த்தான்.

''வாழை குலை தள்ளிடும் போலே இருக்கே!''

பெரியசாமி அவன் அக்கறையை, அவன் சாமர்த்தியத்தை மெச்சுவது போல் வேடிக்கை பார்த்தார்.

''என்ன செய்யலாங்கிறே?''

''வாழைக் கன்னை வெட்டித் தார நட்டுப் புடவா?''

''இப்படியெல்லாம் பண்ணிணு நான் குடியரசு தினத்துக்குக் கொடியேத்த வந்துடுவேன்னு பார்க்கறியா?''

சிவானந்தம் வெள்ளையாகச் சிரித்தான். அவர் சொல்வது ஒரு குற்றச் சாட்டு என்பது போல. அது தன் உத்தேசமல்ல என்று மறுப்பது போல.

''உம் பேரு என்ன சொன்னே?''

''சிவானந்தம்''

''சிவானந்தம், ஒனக்கு எத்தனை வயசு?"

''இருபத்திமூனு.''


''எனக்கு எத்தனே ஆகும்னு தெரியுமா?''

''அறுபத்தஞ்சு இருக்கலாம்.''

''இல்லே அறுபத்தொன்பது. ஒன்னே விட நாப்பத்தாறு வருஷங்கள் இந்தப் பூமியிலே இருந்துட்டேன். நெறைய மனுஷாளேப் பார்த்தாச்சு. நெறைய பேர் போனதையும் பார்த்தாச்சு. முடிஞ்ச வரைக்கும் யோசிச்சுத்தான் பேசறது. ஒரு முடிவுக்கு வந்துட்டா மாறிப் பழக்கமில்லே.''

சிவானந்தம் கை கூப்பிக் கொண்டு பதில் சொன்னுன்.

''ஐயா! மன்னிக்கணும்! நீங்க கொடியேத்தப் போறது தியாகி நிலமா வந்ததை எந்தப் பள்ளிக் கூடத்துக்கு நீங்க மானியமா கொடுத்தீங்களோ அதே பள்ளிக் கூடத்திலே. கொடி ஏறப் போற கம்பம் கூட,



ஒங்க தியாகி பென்ஷன்லே வாங்கிய கம்பம்தான். பேசப் போறதும் மாசா மாசம் ஒங்க தியாகி பென்ஷன்லே வளர்ந்துக்கிட்டு வர்ற நூல் நிலேயத்துக்கு முன்னடி.''

பெரிய சாமி கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து முகம் துடைத்துக் கொண்டார்.

''தம்பி!'' என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

''மன்னிக்கணும்! நீங்க நான் சொல்லிக் காட்டணும்னு யாராவது புகழணும்னு எதையும் செய்யலே. தெரியும். அந்த இடம் ஒங்களுக்கு எல்லா வகையிலேயும் பாத்தியதைப்பட்டு இருக்குன்னு சொல்ல வேண்டியிருக்கு!''

''நீ யார்கிட்டேயாவது பந்தயம் கட்டிட்டு வந்திருக்கியா?''

சிவானந்தத்துக்குப் புரியவில்லே.

''எதுக்குங்க ஐயா?''

''எப்படியாவது பெரியசாமியை இந்தக் குடியரசு தினத்துக்குக் கொடியேத்த அழைச்சுட்டு வந்துடறேன்னு!''

சிவானந்தம் குபீரென்று சிரித்து விட்டான். சிரித்த போது அவன் எந்தப் பிடிவாதமும் இல்லாத சிறு குழந்தை மாதிரி இருந்தான்.

அவன் சிரிப்பு ஓய்கிறவரை பெரியசாமி அவனேயே பார்த்துக் கொண்டிருந்தார். போன வருஷம் காலமான அவருடைய நண்பர் செல்லேயா சொன்ன செய்தி ஞாபகம் வந்தது.

''மாநிறமா ஒய்ரமா கருகருன்னு மீசை வச்சிட்டு ஒரு பையன், ஓட்டுக் கேட்க வந்த கேண்டிடேட் கிட்டே சிலைப்ட் ரைட்னு என்ன வாங்கு வாங்கினன் தெரியுமா பெரியசாமி? தெருவிளக்கு, குடி தண்ணீர்க் குழாய், ரோடு—மூனு வசதியும் செஞ்சு குடுக்கறதுன்னு இந்தப் பேட்டை ஆளுங்க ஒங்களுக்கு ஓட்டுப் போடுவோம். இல்லேன்னு நீங்க போய்ட்டு வரலாம். சும்மா வாயால் சொல்லப்படாது. இதோ அக்ரிமெண்ட்.. டைப் அடிச்சு வைச்சிருக்கு. கையெழுத்துப் போட்டுக் கொடுக்கணும்கறுன்.''

பெரியசாமி செல்லேயா சொன்ன செய்தியை நினேத்துக் கொண்டார். மூன்றும் மாதம் செல்லேயா போய்ச் சேர்ந்து விட்டார். பெரிய சாமியின் வட்டத்திலிருந்து ஒவ்வொரு புள்ளியாகப் போய்க் கொண்டே வந்து, வட்டம் நாளுக்கு நாள் சுருங்குகிறது. வருத்தம் ஏக்கம் இதெல்லாம் கூட அர்த்தமில்லா விஷயம் என்று புரிந்து ஒரு பக்குவம் வந்து விட்டது.

ஆட்கள் போனலென்ன, நெஞ்சு அடித்துக் கொள்ளும் வரை நினேவு மோதிக் கொண்டிருக்கும்.

செல்லேயா சொன்ன ஆள் இவன்தான் என்று புரிந்து விட்டது. அதே பிடிவாதத்தோடுதான் இவனும் காலே ஏழு மணியிலிருந்து தோட்டத்தில் வந்து நின்று கொண்டிருக்கிறுன்.

சிரிப்பு அடங்கிச் சிவானந்தமே தொடர்ந்தான்.

''அப்படி யார்கிட்டேயும் நான் பந்தயம் கட்டலீங்க. நீங்க நம்ம ஊரிலே கொடியேத்திப் பத்து வருசமாவப் போவுது. நீங்களாம் தடியடிப்பட்டு ஜெயிலுக்குப் போயி சுதந்திரம் வாங்கினவங்க. நீங்களே கொடியேத்த மறுத்துட்டா என்ன நியாயம்?''

பெரியசாமி அவனே உச்சந்தலேயிலிருந்து பாதம் வரையில் ஏற இறங்கப் பார்த்தார். தொண்டையை ஒருமுறை செருமினர்.

சிவானந்தம் தன்கடிகாரத்தை அவிழ்த்து, தோட்டத்தில் போட்டிருந்த ஒரு ஸ்டூலின் மீது வைத்திருந்தான்.

கையவன்

"கடிகாரம் ஒன்னோடதா தம்பி"
"ஆமாங்க"
"எடுத்துக் கட்டிக்கோ"
சிவானந்தம் கீழ்ப்படிந்தான்.
"மணி சொல்லு!"
"எட்டரை"
"ஒன்னரை மணி நேரம் வேஸ்ட் பண்ணியிருக்கே!"
"வேஸ்ட் பண்ணலீங்க ஐயா! வாழைச் சருகுகளைக் கழிக்க விட்டேன். வாழை மரத்துக்கு மண் அணைச்சேன். நேரம் நல்ல மாதிரிதான் போயிருக்கு!"
"குடியரசு தினத்துக்கு நான் வந்து கொடி யேத்தணும்னு ஏன் பிடிவாதம் பண்றே?"
"பிடிவாதம் இல்லீங்க. ஒரு வேண்டுகோள்தான்."
"சரி... அதான் ஏன்?"
"இதென்னங்க கேள்வி? நம்ம ஊர்ல ஒங்களைப் போல் தியாகி,தேச பக்தர் வேறே யார் இருக்காங்க?"
"கீறல் விழுந்த கிராமபோன் ரெகார்ட் மாதிரின்னு சொல்லு."
"ஐயையோ!"
"சொல்லுப்பா. வாயா கட்டுடப் போவுது."
பெரியசாமி ஏதோ கசப்பாக ஆரம்பிக்கப் போகிறார் என்று எதிர்பார்த்தான் சிவானந்தம். மௌனமானான்.
"நான் வரணும்! எவ்வளவு பாடுபட்டுச் சுதந்திரம் வாங்கினோம்... எவ்வளவு பத்திரமா எவ்வளவு தேசபக்தியோட பெற்ற சுதந்திரத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கணும்னு கதை சொல்லி ஒரு 'ஆல் யூஷுவல்' சபதம் எடுக்கணும்... அதானே ஒன் ஆசை?"
சிவானந்தம் நிசப்தத்தை நீடித்தான்.
"நாட்டிலே எவ்வளோ எவ்வளோ நடந்துகிட்டிருக்கு! பார்த்தே இல்லே... மூணும் மாசம் செல்லையா காலமானார். தெரியும்லே... கதர்க்கொடி செல்லையா?"
"தெரியும் ஐயா!"
"அவனும் நானும் அலிப்பூர் ஜெயில்லே ஒண்ணா இருந்தோம். சாகறப்போ அவன் என்ன சொன்னான் தெரியுமா?"
"சொல்லுங்க ஐயா!"
"இவ்வளவு நாள் உயிர் வாழ்ந்தது அதிகப் பிரசங்கம்னான்!"
அறை வாங்கிய மாதிரி சிவானந்தம் தலை கவிழ்ந்தான். மேற்கொண்டு பெரியசாமி வளர்க்கவில்லை. கத்தரித்து நிறுத்திய மாதிரி தம் குமுறல்களை, தம் மனக்கொதிப்புக்களைத் தாம் மட்டும் அனுபவித்தால் போதுமென்று முடிவு கட்டியவாறு கட்டில் கைப்பிடியைத் தடவித் தடவி விட்டுக் கொண்டார்.
மௌனத்தின் கனம் அதிகரித்தது.
"நீங்க ரொம்ப விரக்தியடைஞ்சிருக்கீங்க! நீங்களே இப்படிப் பின்வாங்கி நின்னா எங்களுக்கு வேறே வெளிச்சம்,வேறே பாதை தெரியலே" என்று கொஞ்சம் புத்தக வார்த்தைகளாகப் பேசுகிற கூச்சத்தால் அசடு வழிய இழுத்தான் சிவானந்தம்.
"வெளிச்சம், பாதை" என்று தனித் தனியே இருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டார் பெரியசாமி. பிறகு ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்.
"பெரிய பெரிய வார்த்தைகளா இருக்கு. இதெல்லாம் யாருக்காவது வேணும்னு நீ நெஜமா நெனைக்கறியா தம்பி?" என்று கூர்மையாக அவனைப் பார்த்தார்.
சிவானந்தம் தான் ஒரு கேலிப் பொருளாகிற சங்கடத்துக்கு உள்ளாகப் போவதை உணர்ந்தான்.
"என்னடா கெழவர் குடியரசுக்குக் கொடியேத்த வான்னா பெரிசா அலட்டிக்கிறாருன்னு தோணுது இல்லே?" என்று அவனைக் குறுகுறுவென்று பார்த்தார்.
"என்னய்யா இப்படி 'தொராட்டில்' வாங்க நீங்க. அப்படியெல்லாம் நெனைக்கலீங்க."
"நான் மகிழ்ச்சியா இல்லே. மகிழ்ச்சியடையற மாதிரி எந்தச் செயலும் நாட்டிலே நடக்கலே. கொடிக்கம்பத்துக்குப் பக்கத்திலே வந்து நின்னு கயித்தை அவிழ்த்து அதை மெல்ல மேலே ஏத்தி விட்டுக்கிட்டிருந்தா ஜில்லுன்னு ஒடம்பிலே ஒண்ணு ஏறும் பாரு... அதெல்லாம் போயிடுச்சி. வேதனையும் துக்கமும் வந்து இந்த வயசிலே என் நெஞ்சை முட்டுது. ஒங்க வயசுக்காரங்களுக்கு அது என்னன்னு தெரியாதுப்பா! நான் முன்னே சொல்லலே... இது ஒரு மாமூல் கொண்டாட்டம். இதுக்கெல்லாம் இதுக்குன்னே இருக்கிற பெரிய புள்ளிகளைப் போய்க் கூப்பிடுப்பா!"
சிவானந்தம் தான் முறியடிக்கப்படுவதை ஏற்கிற பேர்வழியல்ல.
"இல்லீங்க ஐயா! நீங்க எங்க மகிழ்ச்சிக்காக வந்தே தீரணும். ஒங்க மாதிரி பெரியவங்க சொல்ற ஒண்ணு ரெண்டு சொல்லாவது எங்க காதிலே விழுலேன்னு இது மாமூல் கொண்டாட்டமாத்தான் போயிடும்!"
"நீ லேசிலே மசியறவனாத் தெரியலே! சாயங்காலமா வா. முடிவு சொல்றேன்!"
பெரியசாமி கட்டிலைவிட்டு எழுந்து, துணிக் கடைக்குப் போகக் கிளம்பினார்.
சிவானந்தம் விடைபெற்றான்.

விடாமல் அவர் சொன்னபடி சாயங்காலம் வந்தான். அவர் கடையில் இருந்தார். கூட்டம் நெருக்கடி.
"காலையிலே வாயேன். வீட்டிலே பேசுவோம்."
சிவானந்தம் எந்த முகமாற்றமுமின்றி விடை பெற்றான்.
மறுநாள் காலையில் அவர் சொன்னவாறு வந்தான். வழக்கப்படி அவர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவனை ஸ்டூலில் உட்கார வைத்து விட்டுக் களை பிடுங்கினார்.
இந்தத் தேசத்தின் சுதந்திரம், குடியரசு இவையெல்லாம் அவர் செய்கிற வேலையோடு மிகவும் சம்பந்தப்பட்டிருப்பது போல் அவர் களைகளைப் பிடுங்கி எறிந்து, பூச்சி மருந்து தெளித்து, சோப்பு போட்டு கை கால் கழுவிக் கொண்டு, கையைத்

துடைத்தவாறு வந்து கட்டிலில் அமர்ந்தார்.

தோட்ட வேலையில் இரண்டு மூன்று முறை அவருக்குத் துணை செய்ய இடையிடையே அவன் முயன்றான். அதையெல்லாம் அவர் தடுத்து விட்டுச் சும்மா உட்கார்ந்திருக்கச் சொன்னார். அவன் பொறுமையாக உட்கார்ந்து அவர் செய்கிற வேலைகளையெல்லாம் பார்த்தான். அலுக்காமல் சலிக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

''மணி என்ன ஆச்சு தம்பி?''

''எட்டரை!''

''கடைக்குப் போகிற நேரம். நல்லது. நான் குடியரசு தினத்தன்னிக்கு வர்றேன்''

''ரொம்ப மகிழ்ச்சி ஐயா! நான் வண்டி கொண்டுக்கிட்டு வர்றேன்''

''வண்டியா?'' அவர் சிரித்தார்.

அவன் உளறிவிட்டது போல் விழித்தான்.

''அப்போ எம். எல். ஏ., யூனியன் சேர்மன், இல்லே டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்னு வேற யாரையாவது...'' என்று இழுத்தார்.

''ஐயா... ஐயா... நீங்க ஒங்க சௌகரியப்படி வாங்க.

''எங்கிட்டே சைக்கிள் இருக்கு''

''நல்லதுங்க''

அவன் விடை பெற்றான்.

வாக்களித்தபடி குடியரசு தினத்தன்று பெரியசாமி பள்ளிக் கூடத்திற்குத் தம் பழைய சைக்கிளில் போனார்.

பத்து ஆண்டுகளாக எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாத பழம் பெரும் தியாகி பெரியசாமி கொடியேற்றுகிறார் என்று ஊர் முழுதும் செய்தியைப் பரப்பி வழக்கத்திற்கும் அதிகமாகக் கூட்டத்தைத் திரட்டியிருந்தான் சிவானந்தம்.

கடவுள் வாழ்த்து முடிந்து உள்ளூர்ப் பிரமுகர் தலைமை உரையில் பெரியசாமியைப் பற்றி நீளமாகப் புகழ்ந்து கூறிவிட்டு அவர் கொடியேற்றுவார் என்று முடித்தார். பலத்த கைதட்டல் எழுந்தது.

பெரியசாமி தம் இருக்கையை விட்டு எழுந்தார். கொடிக் கம்பத்தை நோக்கி நடக்கப் போகிறார் என்று எல்லோரும் எதிர்பார்த்த போது அவர் மைக்கை நோக்கி நகர்ந்தார்.

''பெரியோர்களே, நண்பர்களே, குழந்தைகளே... வணக்கம்! நான் தான் கொடியேற்ற வேண்டும் என்று திடமான உறுதியோடு சிவானந்தம் இடைவிடாது சலியாது முயன்று என்னை இங்கே அழைத்து வந்துள்ளார். அவருக்கு என் பாராட்டு. குடியரசு தினத்துக்கு நான் வருவதாகச் சொன்னேன். கொடியேற்ற என்று சொல்லவில்லை. அதை வேண்டுமென்றே தவிர்த்தேன். இந்தக் கொடியை வடிவமைத்த தலைமுறை எங்கள் தலைமுறை. இங்கே வருகிற வரை, சிவானந்தத்தைச் சந்திக்கிறவரை, தேசம் போகிற போக்கைக் குறித்து எனக்கு மகிழ்ச்சி இல்லை. இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பவர் கரங்களில்தான் இந்தக் கொடியேற்றம் நடக்க வேண்டும். கொடியேற்றுபவருக்குத்தான் அது உயர்ந்து பறக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றும். எனவே சிவானந்தத்தையே இங்கு கொடியேற்றி வைக்குமாறு இதை வடிவமைத்த ஒரு பழைய தலைமுறையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று முடித்தார். கரவொலி அதிர்ந்தது.

இறுதி வரை பெரியசாமியே ஜெயித்த விந்தையை நினைத்துக் கொடிக் கம்பத்தை நோக்கி நடந்தான் சிவானந்தம்!

இவர்தான் முதல்வர்!

தமிழகத்தின் அடுத்த முதல்வராக யார் வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? ஏன்?

கட்சியின் கொள்கைகளை மட்டுமின்றித் தலைவரின் சிறப்புகளையும் அலசிக் கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பரிசு ரூ. 50/—

அதிகபட்சமான கல்கி வாசகர்கள் யாரை முதல்வராகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற ருசிகரமான தகவலும் வெளியிடப்படும்.

முடிவு தேதி: மார்ச், 31.

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புதல் இயலாது. உறை மீது ''இவர்தான் முதல்வர்'' என்று குறிப்பிடவும். ஏப்ரல் 17 புத்தாண்டு மலர் தொடங்கி ஒன்றன் பின் ஒன்றாகக் கட்டுரைகள் பிரசுரமாகும்.

— ஆசிரியர்

?

N.S.K.

சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, இலவச பரிசுகளின் காலத்தை 25.3.88 வரை நீடித்துள்ளோம்.

புதிய குரூப்புகள்

250 x 20	5000
125 x 40	5000
500 x 20	10,000
250 x 40	10,000
1000 x 25	25,000
500 x 50	25,000

1250 x 40	50,000
2000 x 50	1,00,000
100 x 100	10,000
250 x 100	25,000
500 x 100	50,000
1000 x 100	1,00,000

இலவச பரிசுகள்

5000 — எவர்சில்வர் கிண்ணம்
10000 — எவர்சில்வர் குடம் மூடியுடன் (சிறியது)
25000 — வெள்ளி விளக்கு (அ) எவர்சில்வர் குடம்
50000 — வெள்ளி விளக்கு
100000 — குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரம்

விசேஷ சலுகை:

★ இலவச பரிசுகள் புதியதாகச் சேரும் அங்கத்தினர்களுக்கும், புது அங்கத்தினர்களை அறிமுகப்படுத்தும் N.S.K.யின் பழைய அங்கத்தினர்களுக்கும் வழங்கப்படும்.

★ ஒரே குரூப்பில் 10 அங்கத்தினர்களை சேர்ப்பவர்களுக்கு 3வது மாதமே சீட்டுப் பணம் முன்பணமாக அளிக்கப்படும்.

★ சீட்டுப்பணம் 20 நாட்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும்.

★ ரூ. 50000 சீட்டு வரை சம்பள சான்றிதழ் பேரில் சீட்டுப் பணம் வழங்கப்படும்.

போனஸ்: மாதம் தவறாமல் ஏலத் தேதிக்குள் பணம் செலுத்துவோருக்கு சீட்டின் முடிவில் கட்டிய தொகையில் 1% போனஸாக வழங்கப்படும்.

N.S.K. சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

38-B, பர்கிட் சாலை (2வதுமாடி), தி. நகர், சென்னை-600 017

தொலைபேசி எண்: 442950 445252

EXELADS/NSK/40/88



* ஞானானந்த அரங்கம்.



* கிருஷ்ணசாமி

புன்னகை தவழும் முகம். ஆனால் இதுநாள் வரை அந்தப் புன்னகையின் பின் ஒரு சோகம் (நமது கற்பனை?) இருப்பது போல் தோன்றும்! இப்போது பார்த்தால், சிரிப்பில் மனநிறைவு ததும்புகிறது! எவ்வளவுக்கெவ்வளவு இழுத்துப் பறித்ததோ, அத்தனைக்கத்தனை வேகமாகக் கடந்த ஓராண்டில் கட்டடம் எழும்பி முழுமை பெற்று, அண்மையில் திறப்பு விழாவும் கோலாகலமாக நடந்தேறியது.

1971 ல் அந்தப் பக்கம் மனைகள் விற்பனைக்கு வருவதாகக் கேள்விப்பட்ட போது, அட்வோகேட் கிருஷ்ணசாமி 'நமது சபாவுக்கு இருபத்தைந்து கிரவுண்டுகள் வாங்கிப் போடலாமே' என்று நினைத்தார்!

நாரத கானம்
நன்மையில் முடியும்!

சென்னை டி. டி. கே. சாலை வழியாக அடிக்கடிச் செல்ல நேர்கிற எல்லாருக்குமே ஒரு விஷயம் கண்ணை உறுத்தி வந்தது. ஒரு பிரும்மாண்டமான அரங்கு கட்டி முடித்தும், முடியாமலும் அரைகுறையாக நிற்கக் கண்டு யோசித்திருப்பார்கள். கொஞ்சம் விஷயம் தெரிந்தவர்கள், கலை அபிமானிகள், "அடடா! இந்த நாரத கான சபாவுக்கு எப்போதுதான் விமோசனமோ?" என்று எண்ணிப் பெருமூச்சு விட்டிருப்பார்கள். '75 ல் ஹேமமாலினி அடிக்கல் நாட்டிய பிறகு, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டடம் முடியாமல் இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்கிறது என்றால் கவலையாக இராதா?

நமக்கே கவலையென்றால் இதனைக் கட்டி முடிக்கும் பொறுப்பைத் தமது தலையில் தாமே அட்சதை போட்டுக் கொண்டு ஏற்ற அட்வோகேட் கிருஷ்ணசாமியின் மனம் என்ன பாடுபடும்? கிருஷ்ணசாமி பழகுவதற்கு அருமையான மனிதர். எப்போதும்

"அது ஏன் அப்படி நினைத்தீர்கள்? சொந்தத்தில் வாங்கி, விற்று லாபம் அடையத் தானே பலரும் விரும்புவார்கள்?"

"அதுதான் என் தலையெழுத்து!" என்றார் கிருஷ்ணசாமி. "நான் சபாவுக்காகக் கஷ்டப்பட்டு உழைத்து, நன்கொடைகள் பெற்று இதைக் கட்டி முடிக்க வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கும் போது வேறு எப்படி ஸார் நடக்கும்?"

இந்த வாதத்துக்கு நம்மிடம் பதில் இல்லையாதலால், "அது சரி, அடிக்கல் நாட்ட ஏன் ஹேமமாலினியை அழைத்தீர்கள்?" என்று கேட்கிறோம்.

"அவர்தான் மிக அதிகமான ஒத்துழைப்பு தந்தார். ஏழு நடனக் கச்சேரிகள் இலவசமாக நிகழ்த்தினார். போக வரச் செலவு கூட வாங்கிக் கொள்ளவில்லை! கிட்டத்தட்ட லட்ச ரூபாய்க்கு மேல் சேர்ந்தது. அந்த நாளில் அது பெரிய தொகை!"

"அப்படியானால் மளமளவென்று கட்டடத்தை எழுப்பியிருக்க வேண்டியது

தானே!''

''என் தலையெழுத்து; எம். எம். டி. ஏ. குறுக்கே புகுந்தது!'' என்று மறுபடி தலையெழுத்தை இழுத்தார் கிருஷ்ணசாமி. ''இந்தப் பகுதியையெல்லாம்குடியிருப்பாக அறிவித்து விட்டது! அரங்கம் எழ அனுமதியில்லை!''

''அடடா! அப்புறம் உங்கள் தலையெழுத்தை மாற்றி எழுதியது யார்?''

''முதல்வர் எம். ஜி. ஆர்.தான்! வேறு யாரால் முடியும்? இந்தச் சபாவுக்கு மட்டும் பிரத்தியேக விதிவிலக்குப் பெற்றுத் தந்தார். இதற்குள் நாலு வருஷம் ஓடிவிட்டது!''

''இதற்குள் விலைவாசிகள் உயர்ந்து விட்டனவாக்கும்! தலையெழுத்துதான் போங்கள்!''

''கொஞ்சமாகவா உயர்ந்தது! எஃகு மட்டுமே நாலு மடங்கு விலை உயர்ந்தது! போதாக் குறைக்கு எஃகு,—சிமெண்ட்டுக்குக் கண்ட்ரோல் வேறு! இன்னும் என்னென்னவோ இடையூறுகள்.''

''இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி உதவிக்கு வந்ததோ?''

''ஆமாம்; அகில இந்தியாவிலும் உள்ள வங்கிக் கிளைகளுக்குத் தேவையான எல்லா விதமான ஃபாரங்களையும் செக், சலான் போன்ற தாள்களையும் சேகரித்து வைக்க அவர்களுக்கு ஓர் இடம் தேவைப்பட்டது. அதற்கு ஏற்ற இடத்தைக் கட்டித் தருபவருக்குக் கடன் தரத் தயாராயிருந்தது. நான் பேஸ்மெண்ட்டை இதற்கு ஒதுக்கினேன் **(Basement)**; மேலே அரங்கம் அமைக்கப் பிளான் போட்டேன். வங்கி தரும் வாடகைப் பணம், அரங்கத்தை வாடகைக்கு விடுவதால் கிடைக்கும் பணம் இவற்றைக் கொண்டு கடனையும் வட்டியையும் படிப்படியாகக் குறைத்து வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் ஐந்து வருஷம் சிரமமாய் இருக்கும். அப்புறம்நாரதகான சபா கொழிக்கும்.''

''என்னதான் வங்கி உதவினாலும் அது போதுமாயிருந்திராதே!''

''எப்படி ஸார், போதும்? பதினைந்து லட்சம் என்று திட்டமிடப்பட்டது. கட்டி முடித்தபோது 65 லட்சத்தை எட்டியிருக்கிறதே!''

''எப்படிச் சமாளித்தீர்கள்?''

''எல்லாம் ஞானானந்தர் அருள்தான்!'' என்று எதிரே உள்ள படத்தைக் கையெடுத்துக்கும்பிடுகிறார்கிருஷ்ணசாமி.''இன்று மாலை தொழிலாளருக்குக் கூலி கொடுக்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பேன்; சரியாக நாலு மணிக்கு ஒருவர் வந்து கதவைத் தட்டி நன்கொடை கொடுத்து விட்டுப் போவார்! என்னை வக்கீல் என்ற முறையில் காண வரும் கட்சிக்காரர்கள் சிலர் கட்டடத் தொழிலில் இருக்கிறார்கள். அவர்கள் உதவுவார்கள். மலிவு விலைக்குச் சரக்குக் கொடுப்பார்கள். பணம் பொறுத்திருந்து பெற்றுக் கொள்வார்கள்! எப்படியோ படிப்படியாகக் கட்டி முடித்து விட்டேன். ஞானானந்தர் அருள்!''

கிருஷ்ணசாமி தினமும் வணங்கும் ஞானானந்தரின் பெயரைத்தான் அரங்குக்கும்சூட்டியிருக்கிறார். ஞானானந்தரின் முதல் சீடர் ஹரிதாஸ் சுவாமிகள்தான் திறப்பு விழாவை முன்னின்று நடத்தி வைத்தார்.

''இந்த அரங்கை அகாடமிக்குப் போட்டி என்கிறார்களே!''

''சிலருக்குச் சீண்டு முடிவதில்தான் சுகம்! அகாடமிக்குப் பக்கத்தில் இருக்கிறது; அகாடமி அரங்கு போலவே இதுவும் வசதியாக இருக்கிறது என்பது தவிர வேறு போட்டியில்லை. அகாடமி நிர்வாகிகள் ஒருவர் பாக்கியில்லாமல் திறப்பு விழாவுக்கு வந்திருந்தார்கள். அகாடமி தலைவர் வாசு அற்புதமான வாழ்த்துக் கடிதம் எழுதியிருக்கிறார்.''

ஆயிரம் பேர் அமரக் கூடிய பெரிய அரங்கு. வேறு எந்த அரங்கிலும் காண முடியாத, எடுப்பான முன் வாசல் படிக்கட்டுக்கள் அரங்குக்குக் கம்பீரத்தை அளிக்கின்றன. மிக விசாலமான வராந்தா. **(Foyer)** ஒருமினிஹால்.கலைஞர்கள்நிகழ்ச்சி அளிக்க வந்தால் ஹோட்டலில் இறங்க வேண்டாம். இங்கேயே தங்கும் வசதி... இத்யாதியுடன் பிரமாதமாக விளங்குகிறது, நாரதகான சபையின் ஞானானந்த அரங்கு.


''அரங்கைக் கட்டி விட்டீர்கள்; ஆனால் பொதுவாக சபாக்களுக்கே இப்போது மவுசு குறைந்து வருவதாகக் கேள்விப்படுகிறோமே?''

''உண்மைதான். கலை நிகழ்ச்சிகளின் தரம் குறைந்துவிட்டதுதான் காரணம்.நாடகங்கள் ஆபாச ஜோக்குகளின் தோரணமாகி விட்டன. நடனக் கலைஞர்கள் பணம் தந்து அரங்கேறத் தயாராகி விட்டனர். சொன்னால் நம்ப மாட்டீர்கள்; கர்நாடக இசைக் கச்சேரிகள்தான் இப்போது சபாக்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன! சபா மெம்பர்கள் வராவிட்டாலும் கலெக்ஷன் ஆகிறது! இளைஞர்கள் வருகிறார்கள், ஸார்! இளைஞர்கள்!''

''நம்புகிறோம்,ஸார்!நம்புகிறோம்!'' என்று அரங்கை, அதில் கூடியிருந்த ரசிகர்களை ஒரு நோட்டம் பார்த்துவிட்டுச் சொல்கிறோம்.

நாரதகான சபா தொடங்கிய போது 1958 ல் மயிலை ஒய். எம். ஐ. ஏ. கூடத்தில் நடந்த முதல் கச்சேரி மதுரை மணி அய்யருடையது. இன்று அவருடைய கலை வாரிசு டி. வி. சங்கரநாராயணன் கச்சேரி. அரங்கம் ரசிகர்களால் நிரம்பி வழிய, ரசிகர்களின் இதயங்களில் இசை நிரம்பி வழிய, மகிழ்ச்சி வெள்ளம் டி. டி. கே. சாலையில் பெருக்கெடுத்து ஓடுகிறது!

— குட்டி கிருஷ்ணன்



ஆயிரம் பேர் அமரலாம்.

வாங்கும் கடன் வட்டிக்கே போதாது!



இப்போதெல்லாம் தவணை முறையில் பண்டங்கள் வாங்குவது சகஜமாகி வருகிறது. இதில் தவறில்லைதான்; ஆனால் இம்முறையில் காரோ, ஃபிரிட்ஜோ, வீடோ வாங்கும் குடும்பத் தலைவன், 'அசலோடு வட்டியும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்' என்பதை மறக்கவே கூடாது. 'மாதா மாதம் எவ்வளவு பணம் தவணைக் கடனுக்கும் வட்டிக்கும் போகும்; பாக்கி எவ்வளவு கைவசம் இருக்கும்; அது குடும்பம் நடத்தப் போதுமா?' என்று யோசிக்க வேண்டும். இவ்வாறின்றி தவணையில் கிடைக்கிறதே என்பதால் ஏகப்பட்ட பண்டங்களை வாங்கிவிட்டு, வீட்டுச் செலவுக்குப் பணம் போதாமல் தவித்து, அதற்காகக் கடன் வாங்கினால், இந்தப் புதிய கடனுக்கும் வட்டி தர வேண்டியிருக்கும். வெகுசீக்கிரமே, வட்டி கட்டவே கடன் வாங்கும் நிலைக்கு அவன் தள்ளப்படுவான். அப்புறம் தவணை முறையில் வாங்கிய பண்டங்களை ஏலத்துக்கு விடப்படுவதைக் காண்பான். ஒன்றுக்குப் பாதி விலையிலும் கால் வாசி விலையிலும் பண்டங்கள் பறிபோவதைத் தடுக்க முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்பான்!

நமக்குத் தெரிந்த ஒரு குடும்பத் தலைவன் இத்தகைய தப்பு வழியில் போனால் ஆரம்பத்திலேயே அவனைத் தடுத்து, நல்ல வார்த்தை கூறித் திருத்தலாம். ஆனால் அரசாங்கமே இத்தகைய தவறைச் செய்ய முற்பட்டால் யார் புத்தி சொல்வது? எப்படித் திருத்துவது?

அதற்காகத்தான் பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலர், நமது அரசின் உள்நாட்டுக் கடன்கள் அளவுக்கு மீறி அதிகமாவதைக் கண்டு மிகவும் கவலையோடு பேசுகிறார்கள். எலிப் பொறியில் எலி சிக்குவது போல் கடன் பொறியில் அரசு சிக்கிக் கொள்ளப் போகிறது என்று அஞ்சுகிறார்கள். 31.3.88 முடிய மத்திய அரசின் கடன்கள் 1,22,038 கோடி (உள்நாட்டுக் கடன் 99,520 + அயல் நாட்டுக் கடன் 22,518) 31.3.89 முடிய இது 1,39,944 கோடி ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மத்திய அரசு தரும் வட்டி 11,450 கோடி. வரும் ஆண்டில் இது 14,100 கோடியாக உயரும். இதனை நிதி அமைச்சரின் பட்ஜெட் சொற்பொழிவிலேயே காண்கிறோம்.

அபிவிருத்திப் பணிகளுக்கு அரசு கடன் வாங்குவது என்பது உலகெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றே. நமது மத்திய அரசு கடந்த பல ஆண்டுகளாகவே மேலே மேலே கடன் வாங்கிக் கொண்டே வந்திருக்கிறது. ஆண்டுதோறும் திருப்பித் தரப்பட வேண்டிய கடனின் அளவு உயர்ந்து கொண்டே போகிறது. முன்பெல்லாம் அரசு பெறும் கடனுக்கு வட்டி 4½ அல்லது 5½ சதமாக இருக்கும். இப்போது 11½ சதம் வரை தரத் தயாராயிருக்கிறது.

அரசு தான் வாங்கும் கடனை நல்லவிதமாக முதலீடு செய்ய வேண்டும். மின் உற்பத்தி, போக்குவரத்து, சுரங்கங்கள், போன்றவற்றில் முதலீடு செய்ய, அதிலிருந்து வரும் வருமானமானது, அரசு தான் வாங்கிய கடனுக்குத் தரும் வட்டியை விடக் கணிச

மான அளவு அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அசலையும் திருப்பித்தர வாய்ப்பு ஏற்படும். அரசின் நிதி நிலைமையும் திருப்திகரமாக இருக்கும்.

ஆனால் இங்கு நடப்பது என்ன?

ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களில் இதுவரை 200,000 கோடி அரசு முதலீடு செய்துள்ளது. 1990 இல் ஏழாவது திட்டம் முடியும்போது 380,000 கோடி முதலீடாகியிருக்கும். கூடவே அரசு வாங்கியுள்ள கடன்கள் 160,000கோடியையை விட அதிகமாய் இருக்கும்!

அரசு ஆண்டுதோறும் பற்றுக்குறை பட்ஜெட்டையே சமர்ப்பித்து வருகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அரசு முதலீடு செய்துள்ள தொழில்கள் போதிய அளவு லாபம் சம்பாதித்து அரசுக்கு வருவாயை ஈட்டித் தரவில்லை என்பதுதான். அரசுத் துறைத் தொழிலகங்களிலேயே இதுவரை 50,000 கோடி முதலீடாகியுள்ளது. இவற்றில் ஒரு சில நிறுவனங்கள் தவிர மற்றவை நஷ்டத்தில் நடக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது மூன்று சதவீத லாபம் கூட இல்லை!

இன்றைக்கே நமது அரசு பழைய கட்னுக்கு வட்டி செலுத்தப் புதிய கடன் வாங்கி வருகிறது. வெகு சீக்கிரமே அரசு தரவேண்டிய வட்டித் தொகை, அது உள்நாட்டில் பெறக் கூடிய கடனை விடவும் அதிகமாக இருக்கும். அதாவது, வாங்கும் கடன், வட்டி கொடுக்கக் கூடப் போதாத நிலை தோன்றும். பிறகு அசலைத் திருப்புவது எப்படி? அபிவிருத்திப் பணிகளுக்குப் புதிய கடன் பெறுவது எவ்வாறு?

1990 முதல் அரசின் வருவாய் முழுவதையும் அரசு தர வேண்டிய வட்டியே விழுங்கி விடும் என்று அஞ்சப்படுகிறது. அபிவிருத்திப் பணிகளுக்குப் பணம் இராது. ஏற்கெனவே பெற்ற கடன்களின் அசலைத் திருப்பித் தர மேலும் கடன் வாங்க வேண்டும்!

உடனடியாக ஏதேனும் செய்யாவிட்டால் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி நாட்டைத் தாக்கும் என்று பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர். எச்சரிக்கின்றனர்.

இரண்டு விதமாக நிலைமையைச் சமாளிக்கலாம். ஒன்று, அபிவிருத்திப் பணிகளைச் சில காலத்துக்கு நிறுத்தி வைக்கலாம். அல்லது திட்டத்துக்குச் சம்பந்தப்படாத அரசின் ஊதாரிச் செலவினங்களை, டம்பாச்சாரிச் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம். முன்னதைச் செய்தால் நாட்டின் முன்னேற்ற வேகம் தடைப்படும். பின்னதைச் செய்தால் ஒரு மாதிரி வட்டி கொடுத்துச் சமாளித்துக் கொண்டு போக முடியும். கூடவே, அரசு முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் லாபம் ஈட்டித் தருகின்ற விதமாக நடக்க வேண்டும்.

ஆனால் இவற்றையெல்லாம் இன்றைய அரசு சிந்திப்பதாகவே தெரியவில்லை. 'நோட்டு அச்சடித்துத் தள்ள நாசிக் அச்சுக் கூடம் இருக்கும்போது என்ன கவலை?' என்ற எண்ணத்தில் அது கண்மூடித்தனமாகச் செயல்படுவதாகவே தோன்றுகிறது.

— வி. கோபாலன்

பிஜு சொன்னான், ''நான் போயிட்டு வரேம்மா.'' சுசேதா அவனுடைய முக வாய்க் கட்டையைக் கையால் தடவிக் கையை 'இச்' என்று முத்தமிட்டுக் கொண்டாள். "பத்திரமாப் போயிட்டு வா... ரொம்ப லேட் பண்ணாதே... டிபனை ஒழுங்காச் சாப்பிடு... வாட்டர் பாட்டில் எடுத்துக்கிட்டியா?''

பிஜுவுக்கு எரிச்சல் வந்தது. ''எனக்கு இன்னிக்கு மாட்ச் இருக்கு. பாட்டில், கீட்டில் எல்லாம் ஒரு மூட்டை எதுக்குக் கொடுக்கறே? எகப்பட்ட புத்தகம், டிபன் பாக்ஸ்! தினம் கழுதை மாதிரி மூட்டை தூக்கிக்கிட்டு ஸ்கூலுக்குப் போக வேண்டியிருக்கு!''

''போடா பைத்தியம்! எல்லாம் உபயோகப்படற சாமான்கள்தான்... ஒண்ணு கூட அனாவசியமில்லே...''

"ஒரு நாள் எல்லாத்தையும் தொலைச்சுட்டு வந்துடப் போறேன், பாரு!''

அவனுடைய சற்றே நீண்ட, களையான முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனாள் சுசேதா. இது அவனுடைய இரத்தத்தின் இரத்தம், தசையின் தசை... அவளுடைய படைப்பு, அவளாகிய மரத்தின் பழம்......

நினைக்கும் போதே துணுக் கென்றது. அவளுடைய கண்ணே பட்டு விடுமோ?

அவள் உடனே பிஜுவின் இடது கையை இழுத்து அதை மெல்லக் கடித்துத் ''தூ, தூ"வென்று துப்பினாள். கண்பட்ட தோஷத்துக்குப் பரிகாரமாக. ''ஜாக்கிரதையாப் போ, விளையாடற போது விழுந்து அடி பட்டுக்காதே!''

பிஜு புத்தகப் பையை முதுகில் போட்டுக் கொண்டு, தண்ணீர்க் குப்பியைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு, பூட்ஸ் 'டக், டக்' என்று ஒலிக்க வேகமாகப் புறப் பட்டுப் போனான்.


சுசேதாவின் இரண்டாவது குழந்தை சந்தனுவுக்கு அம்மை வார்த்திருந்தது. அவள் மிகவும் சுட்டி. இந்த நிலையிலும் வீடு முழுதும், தவழ்ந்து தவழ்ந்து அலைந்து கொண்டிருந்தாள்.

சுசேதாவின் வீட்டு வேலைகளுக்கு முடிவேயில்லை... இப்படியே இளமை முழுதும் கழிந்துவிடும் போலிருக்கிறது. வாழ்க்கையே இந்த இரண்டாம் மாடியில் அடைந்து கிடக்கிறது. ஊர் சுற்றல் இல்லை, விளையாட்டு இல்லை, கல்லூரி வாழ்வின் வம்புப் பேச்சு இல்லை, மாறுதல் இல்லை.....

அன்றும் இரவு வெகு நேரங்கழித்து வந்தான் சமீக். சுசேதா அவனுக்கு டீ கொடுத்து விட்டு மறுபடியும் இரவுச் சமையல் செய்யப் போன போது, அவனைக் கேட்டான், ''நீங்க என்னதான் நினைச்சுக் கிட்டு இருக்கீங்க?''

சமீக் சற்றுப் பயந்து போனான்: ''என்ன

சீர்ஷேந்து முகர்ஜி





"நம்ம தலைவர் கிட்டத்தட்ட அரசர் மாதிரி!"

"எதுனால சொல்றே?"

"அவர் வெச்சிருக்கிற சின்ன வீடெல்லாம் சேர்த்தா ஒரு அந்தப்புரம் ஆயிடும்."

— ஜெய்சங்கர்.

சொல்றே நீ?" என்ருன் அவசரமாக.

"இப்படியே என் உயிரை உறிஞ்சுடுவீங்களா?.... இப்படி இருக்கிறதைவிட வேலைக்காரியாக இருக்கிறது எவ்வளவோ கௌரவம்!.... என்னை வேலை வாங்கறது சரிதான், ஆனுல் அதுக்கேத்தாப்பலே என்னோட ஆசைகளையும் பூர்த்தி செய்யக் கூடாதா?... ஆனுலும் நீங்க ரொம்ப சுயநலக்காரர்!...."

அவர்கள் வீட்டில் இந்தப் பல்லவி அடிக்கடி கேட்கலாயிற்று. வருடங்கள் உருண்டோடின. சுசேதா இன்னும் உழைத்துக் கொண்டுதான் இருந்தாள். சமீக்கும்தான்! டாக்டர் என்னவோ நன்ருக உடற்பயிற்சி செய் என்றுதான் சொன்னுர். ஆனுல் உடம்பு என்னவோ கெஞ்சிற்று. சந்தனுவுக்குக் கல்யாணம் வேறு நிச்சயமாகும் போலிருந்தது....

முதல் தடவையாகச் சந்தனுவைப் பெண் பார்க்க வந்தவர்களுக்கு அவளைப் பிடித்து விட்டது.

பிள்ளையின் தந்தை சொன்னுர், "நீங்க உங்க பெண்ணுக்கு என்ன கொடுக்க இஷ்டமோ கொடுங்க. எங்களுக்கு ஒண்ணும் கொடுக்க வேண்டாம். எங்களுக்கு வேண்டியது ஒரு லக்ஷ்மிகரமான பெண்தான்!"

சமீக் ஜாடையாகச் சுசேதாவைப் பார்த்தான். அவளுக்குத் தன் பெண்ணைப் பற்றிப் பெருமிதம். ஆனுல் அவனுக்கு உற்சாகமில்லை. சந்தனுவிடம் அவனுக்கு உயிர். அவளை விட்டுப் பிரிந்து அவன் எப்படி இருப்பான்?

இரவின் தனிமையில் அவன் சுசேதாவிடம் சொன்னுன், "நீ கலியாணம், கலியாணம்னு குதிக்கறே... நான் சந்தனுவை விட்டுட்டு எப்படி இருப்பேன்?"

"கவலைப்படாதீங்க, பழகிப் போயிடும்..."

"நீ இந்தப் பெண்களுக்கு மனசிலே கொஞ்சங் கூட ஈரமில்லே..."

"நெஞ்சிலே ஈரமில்லாதவங்க நாங்க இல்லே, நீங்கதான்! என்னை என்னோட அப்பா அம்மாகிட்டேயிருந்து பிரிச்சுக் கூட்டிக்கிட்டு வந்த போது இந்தப் பரிவு எங்கே போச்சு?"

சமீக் சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டுப் பிறகு சொன்னுன், "ஆனுல் சந்தனு சமாசாரம் தனி..."

"அவங்கவங்களுக்கு அவங்கவங்க பெண் தனிதான்."

"நீ கல்நெஞ்சுக்காரி!"

"அப்படித்தான் வைச்சுக்கங்களேன்."

சமீக் சற்று நேரத்தில் உறங்கி விட்டான். ஆனுல் சுசேதாவுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் ஒரு தடவை எழுந்து போய்த் தூக்கத்திலாழ்ந்திருந்த சந்தனுவைப் பார்த்து விட்டு வந்தாள். அவள் கண்களில் நீர் துளித்தது...

பிஜு வெளியூரில் படித்துக் கொண்டிருந்தான்; சந்தனுவும் புக்ககம் போய்விடப் போகிருள்....

சந்தனுவுக்குக் கல்யாணமான கையோடு பிஜுவுக்கும் படிப்பு முடிந்து துர்காபூரில் வேலை கிடைத்தது. வேலையில் சேர்ந்த ஆருவது மாதம் அவன் தன் பெற்ருேர்களைக் கல்கத்தாவிலிருந்து துர்காபூருக்கு அழைத்துப் போய்விட்டான். சுசேதாவுக்குத்தான் மகள் வசிக்கும் கல்கத்தாவை விட்டுப் போவதில் சிறிது ஆதங்கம். ஆனுல் துர்காபூர் குடித்தனம் ஆனந்தமாகவே இருந்தது— பிஜுவுக்குக் கல்யாணம் ஆகும் வரை. சுசேதா அடிக்கடி மருமகளைப் பற்றிக் கணவனிடம் புகார் செய்யலானுள்.

ஒருநாள் சமீக் எரிச்சலோடு சொன்னுன், "எல்லாமே நம்ம இஷ்டப்படி நடக்குமா? கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கிட்டுத்தான் போகணும்.

சுசேதா பதிலளித்தாள். "நீங்க ஆண் பிள்ளைகள்; அட்ஜெஸ்ட் பண்ணிக்குவீங்க. எங்க மாதிரி பெண் பிள்ளைகளாலே முடியாது."

"ஏன் முடியாது தெரியுமா? பெண் பிள்ளைகளுக்கு பொறுமை அதிகம். ஒரு பெண் இன்னெருத்தியைப் பொறுக்க மாட்டாள். மருமகள் மாமியாரோட சத்துரு."

"அப்படியொண்ணுமில்லே. நான் என் மாமியாருக்குச் சத்துருவாயிருந்தேனு?... உங்க பிள்ளை செலக்ட் பண்ணிக்கிட்டு வந்திருக்கானே ஒரு பெண்டாட்டி, அவள் என் கால் தூசுக்குச் சமமா?"

"நான் அதைச் சொல்லலியே."

"நீங்க அப்படித்தான் சொல்றீங்க. உங்களுக்கு அவளைப் பற்றி நல்லாத் தெரியாது. அப்பா, என்ன கர்வம் அவளுக்கு! தோல் கொஞ்சம் சிவப்பு, எம். ஏ. பாஸ் பண்ணியிருக்கா. இதுதான் அவளோட பெருமை! எம். ஏ. பாஸ் பண்ணுததாலே நாங்க மட்டமாயிட்டோமா?"

"இதுதான் பொருமைங்கறது. ஹாஸ்னு எம். ஏ. படிச்சிருந்தா நீ மட்டம்னு அர்த்தமா! யார் சொன்னுங்க?"

"சொல்லாட்டா, நினைச்சுக்கறுங்க... நீங்களுந்தான் மருமகளுக்கு ரொம்ப இடங்

கொடுக்கறீங்க. நான் அவனை ஏதாவது சொன்னா பிள்ளை மூஞ்சியைத் தூக்கிக்கறான்... நான் இனிமேல் இங்கே இருக்க மாட்டேன். நாம் கல்கத்தா போயிடலாம்....''

'கல்கத்தாவில் மாப்பிள்ளை ரபீனுக்கும் சந்தனாவுக்கும் சாப்பாடு பரிமாறிக் கொண்டே தனிக் குடித்தனம் போகும்படி மாப்பிள்ளைக்கு உபதேசம் செய்தாள் சுசேதா.

ரபீன் குனிந்த தலைநிமிராமல் மௌனமாயிருந்தான்.

சந்தனா சொன்னாள், ''குடும்பச் செலவு எல்லாம் இவர்தான். தம்பிகள் ஒரு பைசா கொடுக்கறதில்லே. கொடுத்தாலும் அதை மாமியார் வாங்கி பாங்கியிலே போட்டு வச்சுக்கறா. இந்தப் பிள்ளையைத்தான் அவளுக்குப் பிடிக்காது....''

அவர்களுடைய பேச்சு சமீக்குக்குப் பிடிக்கவில்லை. அவன் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து போய் விட்டான்.

சுசேதா இதைக் கவனிக்காமலில்லை. ஆனால் பெண்ணின் நலத்தைக் கவனிப்பது அவள் கடமை. அவள் மெல்லிய குரலில் மருமகனிடம் சொன்னாள். ''குடும்பத்திலே அமைதி வேணும்னா சில சமயம் சிலருக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யத்தான் வேண்டியிருக்கும்.... நீங்க தனியா வந்துடுங்க.... எங்க வீட்டுக்குப் பக்கத்திலே வந்துட்டீங்கன்னா நான் குழந்தைகளைப் பார்த்துக்கறேன்....''

இப்போதும் ரபீனிடமிருந்து பதில் இல்லை.

''நான் எவ்வளவு சொல்லியும் இவர் கேட்க மாட்டேங்கறார் அம்மா. அப்பா அம்மாவோட இருக்கிறதுதான் இவர் கடமையாம்.''

''சேர்ந்து இல்லாமலேயே அவங்களுக்கு உங்க கடமையைச் செய்யலாமே! மாசா மாசம் பணங் கொடுத்து உதவலாமே.''

ரபீன் சந்தனாவை முறைத்துப் பார்த்து விட்டு வெளியேறினான்.

இரவில் சமீக் சுசேதாவிடம் சொன்னான். ''நீ உன்பெண்ணுக்குரொம்ப இடங் கொடுக்கறே. பின்னாலே கஷ்டப்படுவே...''

''நல்லாயிருக்கே நீங்க சொல்றது! மருமகன் எல்லா சம்பாத்தியத்தையும் கூட்டுக் குடும்பத்திலே போட்டுடறார். ஒரு பைசா கூட மிச்சம் பிடிக்கிறதில்லே... என் பெண்ணுக்கும் கொஞ்சம் பணம் வேண்டாமா?''

சமீக் கோபித்துக் கொண்டு திரும்பிப் படுத்தான்.

பிஜு பதவி உயர்வும் கல்கத்தாவுக்கு மாற்றலும் பெற்று மனைவி குழந்தைகளுடன் வந்து சேர்ந்தான்.

சுசேதாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. சமீக்கின் சோர்ந்த முகத்திலும் உற்சாகம் மலர்ந்தது.

சுசேதா மருமகளிடம் சொன்னாள், ''சொன்னால் கண்பட்டுடும். இருந்தாலும் உன் உடம்பு கொஞ்சம் தேறியிருக்கு. கலியாணத்தின் போது ஒல்லியா குச்சி மாதிரி இருந்தே.''

''துர்க்காபூரிலே தண்ணி நல்ல தண்ணி, அம்மா.''

''இப்போ கல்கத்தாவுக்கு வந்துட்டியோல்லியோ, இனிமேல் பாரு.''

''இருந்தாலும் துர்க்காபூரிலே கலகலப்பே இல்லேம்மா. இங்கே கல்கத்தாவிலே எவ்வளவு ஜனங்கள், பரபரப்பு, பொழுது போக்குகள்! துர்க்காபூர் சுடுகாடு மாதிரி இருந்தது. எப்போடா அதை விட்டுக் கிளம்புவோம்னு இருந்தது....''

சுசேதா வெகு ஜாக்கிரதையாகக் கேட்டாள், ''எங்களோடேயே இருப்பியோல்லியோ...? இல்லே....''

தலையைக் குனிந்து கொண்டே ஹாஸ்னு சொன்னாள், ''இல்லேம்மா, அவருக்கு ஆபீஸிலே ஃப்ளாட் கொடுப்பாங்க....''

சுசேதா பெருமூச்சு விட்டாள்.


ஹாஸ்னு சொன்னாள். ''அவருக்கு இங்கே இருக்கத்தாம்மா இஷ்டம்....''

''அவனுக்கு மட்டும் இஷ்டமிருந்தால் போதாதே அம்மா; உனக்கும் இருக்கணுமே!''

ஹாஸ்னு பதில் சொல்லவில்லை.....

ஹாஸ்னு பிஜுவைக் கேட்டாள், ''ஆபீஸ் ஃப்ளாட் என்ன ஆச்சு?''

''நான் ஆபீஸ் ஃப்ளாட் எடுத்துக்கப் போறதில்லே. இங்கே அப்பா அம்மாவோட இருக்கிறது சௌக்கியமாத்தானே இருக்கு.... குழந்தைகளுக்கும் தாத்தா பாட்டின்னா உசிரு.''



''ஆமா, மேலோட்டமாப் பார்த்தால் நல்லாத்தானிருக்கும்... சந்தனாவும் ரபீனும் கிட்டவே குடியிருக்காங்க. தினம் இங்கே வராங்க....

''வந்தால் என்ன?''

''என்னவா?... அம்மாவும் பெண்ணும் கூடிக் கூடி நாள் பூராக் குசுகுசுன்னு ரகசியம் பேசிக்கறாங்க. பேசிக்க அப்படி என்ன தான் இருக்குமோ! கல்யாணத்துக்கப்புறம் பெண் அம்மா வீட்டிலே இப்படிக் குழையக் கூடாது! சந்தனாவோட கணவன் பெண்டாட்டிதாசன். மாமனார் வீடுன்னா அவனுக்குச் சுவர்க்கம்!''

''சரி சரி, தனியாப் போற பேச்சை விட்டுத் தள்ளு!''

''ஏன் விட்டுத் தள்ளணும்? எப்போதும் பெரிய பெரிய தகராறெல்லாம் இப்படித் தான் ஆரம்பிக்கும்.... நான் இந்த வீட்டிலே இருக்க மாட்டேன், ஆமா!.... நீங்க ஃப்ளாட் எடுத்துக்கத்தான் வேணும்! நீங்க வேணும்னா அப்பா அம்மாவுக்கு மாசா மாசம் பணம் கொடுங்க, எனக்கு ஆட்சேபமில்லே....''

''அப்பா அம்மா தனியா....''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அதுதான் பெண் கிட்டவே இருக்காளே! உங்கம்மாவுக்கு உங்களை விடச் சந்தனா கிட்டேதான் ஆசை அதிகம். நம்ம குழந்தைகளை விட அவ குழந்தைகளுக்குத்தான் இந்த வீட்டிலே சலுகை அதிகம்.....

''இதெல்லாம் உன்னோட பிரமைதான்....''

''நான் ஒண்ணும் பச்சைக் குழந்தையில்லே.... அம்மா அப்பாகிட்டே இருக்கிற பாசத்திலே உங்களுக்குத்தான் இதெல்லாம் கண்ணிலே படறதில்லே. ஆனால் எனக்கு நல்லாத் தெரியறது.....''

திரை மறைவிலிருந்து எல்லாவற்றையும் கேட்ட சுசேதா கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஆம், இவர்கள் இங்கே வெகு காலம் தங்கமாட்டார்கள்.....

''நான் வரேம்மா'' என்றான் ஜெய். ஹாஸ்னு அவனுடைய முகத்தை இரு கைகளாலும் தடவி விட்டுச் சொன்னாள், ''போயிட்டு வாப்பா, மறக்காம டிபன் சாப்பிடு... வாட்டர் பாட்டில் எடுத்துக்கிட்டியா?''

ஜெய் எரிச்சலுடன் பதிலளித்தான். ''எடுத்துக்கிட்டேன், எடுத்துக்கிட்டேன்.''

ஹாஸ்னு பிள்ளையின் சற்றே நீண்ட முகத்தின் அழகில் சொக்கிப் போனாள். களை சொட்டும் முகம். திடீரென்று ஹாஸ்னுவுக்குத் தோன்றியது — தன் கண்ணே பட்டு விடுமோ என்று. இப்போதெல்லாம் இவற்றில் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது அவளுக்கு. சற்று மறைவில் கை கூப்பிக் கடவுளை நினைத்து மானசீகமாய்ப் பிரார்த்தித்தாள். ''குழந்தையைக் காப்பாற்று!''

பிஜு போய்விட்டான். ஜெய் பள்ளிக்குப் போய் விட்டான். பெண் தியா ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தாள். படம் போடுகிறாளாம்! கொஞ்ச நாள் காய்ச்சல் கண்டு இப்போதுதான் அவள் உடம்பு குணமாயிருந்தது. புதிய வேகத்துடன் விஷமம் செய்தாள்....

நாள் முழுதும் வேலை ஹாஸ்னுவுக்கு. ஓய்வு ஒழிவில்லை. வீடு முழுதும் அலைந்து கொண்டே இருக்க வேண்டியிருந்தது.

ஒவ்வொரு இரவும் வெகுநேரங்கழித்துத் தான் பிஜு வீடு திரும்புகிறான். அன்றும் அப்படித்தான். ஹாஸ்னு அவனுக்கு டீ கொடுத்துவிட்டு அவன் எதிரில் அமர்ந்து கொண்டு கேட்டாள்:

''நீங்க என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கீங்க?''

''என்ன சொல்றே நீ?''

''ஒவ்வொரு சாயங்காலமும் இப்படியே பொழுது போக்க முடியுமா என்னாலே? இதை விட ஒரு வீட்டிலே வேலைக்காரியாக உழைக்கலாம்!..... உங்க குடும்பத்தைக் கவனிச்சுக்கறேனே! என்னோட ஆசைகளையும் பூர்த்தி பண்ற கடமை இல்லையா உங்களுக்கு?''

வங்காளியிலிருந்து தமிழாக்கம்:
சு. கிருஷ்ணமூர்த்தி

அடுத்த இதழில்...



"நான் ஏன் அரசியலுக்கு வந்தேன்?"

—ஜானகி சிறப்புப் பேட்டி



* கதர் பொம்மைகளுடன் தாரா.

கதரின் சிறப்பில் ஏழையின் சிரிப்பு!

"கதர் என் இரத்தத்தில் இருக்கிறது. அதனுடனேயே வளர்ந்தேன். இப்பொழுது அதுதான் என் உயிர் மூச்சு" என்கிறார் தாரா.

மகாத்மா காந்தி — ராஜாஜி ஆகிய இருவருக்கும் பேத்தியான தாரா, இப்படிப் பேசுவதில் ஆச்சரியமில்லைதான் என்றாலும் அவருக்குக் 'காதி' என்றவுடனேயே ஏற்படும் உத்வேகம் நம்ப முடியாத ஒன்று!

அவருடைய வீட்டில் எங்கு திரும்பினாலும் கதர்த் துணியினால் செய்யப்பட்ட பொம்மைகள் — கலைப் பொருள்கள்.

"ஒரு சிறு 'காதி'த் துண்டைக் கூட நான் வீணாக்குவதில்லை. பழைய கந்தல்கள் கூட பொம்மையின் உள்ளே அடைத்து உடலுக்கு உருவம் தர உபயோகப்படுகின்றன. இதை நான் வியாபாரத்துக்காகச் செய்யவில்லை. ஆத்ம திருப்திக்காகச் செய்கிறேன். நமக்காகப் பெயர் தெரியாத கிராமப்புறங்களில் நூல் நூற்றுத் துணி நெய்யும் ஆயிரக்கணக்கான முகமில்லாப் பெண்களின் உருவகம் இந்தப் பொம்மைகள்" என்கிறார் தாரா.

தாரா பட்டாச்சார்ஜி, தேவதாஸ் காந்திக்கும், ராஜாஜியின் மகள் லக்ஷ்மிக்கும் பிறந்தவர். டில்லி பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர், சிதார் வாத்தியத்திலும் தேர்ச்சி பெற்றவர். பதினைந்து வருடங்கள் கணவருடன் ரோம் நகரில் இருந்த போது அங்கிருக்கும் இந்தியக் குழந்தைகளுக்கு ஹிந்தி போதித்தார். இந்தியக் கலாசாரத்தையும் கதரின் பெருமையையும் அங்கு பரப்புவதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். "ஒன்றரை வருடங்களுக்கு முன், கணவர் திடீரென்று இறந்ததும் நிலைகுலைந்து இந்தியாவுக்குத் திரும்பிய போது 'காதி'தான் என்னைக் காப்பாற்றியது" என்கிறார் தாரா.

கதரின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தும் பணியில் இப்பொழுது அதி தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார் தாரா. உத்தரப் பிரதேசம், ஆந்திரா, குஜராத் எனப் பல மாநிலங்களில் கிராமம் கிராமமாகச் சென்று



* காந்திஜியுடன் தாரா.



அருச்சனை

1. தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், ரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதரி, செவ்வந்தி, ஆகிய பதினான்கு வகையான நறுமணமிக்க பூக்களைக் கொண்டு வழிபாடு செய்யவும்.

2. புனுகு, கத்தூரி, முதலிய சாந்துடன் சந்தனம் மணமிகுந்த குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், வயிரம் ஏறிய அகில், ஆகிய இவற்றினு டன் அளவாகப் பனிநீர் சேர்த்துக் குழைத்து அவற்றை அணிய வேண் டிய இடங்களில் முறையாக அணிந்து அன்புடன் வழிபட வேண்டும்.

3. உள்ளன்புடன் படைப்பினைக் குழைத்து விளக்கம் மிக்க திரு விளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக. புகையும் ஒளியும் காட்டி வழிபடுக. இனம் பற்றி மணியும் இயமும் இயம்புக. செந்தமிழ் மாமறைத் திருமுறை யோதுக.

இத்தகையதொழுகையினர் நினையுங்கால்
திருவடிப் பேற்றின்பம் உடனே கைகூடும்.

வணக்கம்

ஐம்புலனும் அடக்கியவர்கள், முழங்கை இரண்டு முழந்தாளிரண்டு நெற்றி ஒன்று ஆக ஐந்துறுப்பும் நிலத்தே படும்படி புரியும் வணக்கமும் செபமும் வழிபாட்டுக்கு இன்றியமையாதனவாகும். அத்துடன் இடை விடா நினைப்பாகிய தியானமும் அதற்கு வேண்டும்.

பலன்

மேல் ஓதுப்பெற்ற பொருள்களையெல்லாம் அன்பினால் தொகுத் துக் கொண்டு மெய்மையாக வழிபாடு செய்யின் இவ்வுலகின்கண் எய்த வேண்டுவன அனைத்தும் எய்தும் மேலும் தேவவுலக வாழ்வும் உண்டா குமெண்வகையான சித்திகளும் கைகூடும். எளிதிற் கிடையாத வீடு பேறும் கிடைக்கும்.

திருமந்திரம்

கதர் தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களது தொழில் வேறுபாடுகளையும் பொருளாதார நிலைகளையும் கண்டறிந்து வருகிறார். "எனது வேர்களை அறியும் முயற்சி இது" என்கிறார் தாரா.

"படித்தவர்களுக்குக் கூட இன்று காதியைப் பற்றி உண்மை விவரம் தெரிவதில்லை. 'கைத்தறிக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு; இதில் நூல் நூற்பதும் கையினால்; நெய்வதும் கையினால்' என்பதையே பலருக்குச் சொல்லித்தான் புரிய வைக்க வேண்டியிருக்கிறது! அதனாலேயே கதர் துணி சற்று விலை கூடுதலாக உள்ளது. ஆனால் கதரின் அழகே தனி. கதரை உடுத்திக் கொண்டு எந்த இடத்திற்குச் சென்றாலும் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டுப் போகிறது" என்கிறார் தாரா. ஆனால் நூறு சதம் கதரே உடுத்த வேண்டும் என்கிற பிடிவாதம் இவருக்கு இல்லை. முடிந்த அளவு கதரை உபயோகிப்பதும் அதன் சிறப்பை உணர்வதுமே தேசத் தொண்டுதான் என்பது இவரது வாதம்.

"காந்திஜி ராட்டினத்தைத் தெய்வத்துக்குச் சமானமாக மதித்தார். 'ராம்துன்'னும் 'சர்க்கா'வும் ஒன்றுதான் என்கிற எண்ணத்தை என்னுள் சிறு வயதிலேயே உருவாக்கினவர் காந்திஜி. நான் அதனாலேயே கதரைப் பவித்திரமானதாகக் கருதி அதைப் பிரசாரம் செய்வதை ஓர் ஆன்மீகச் சேவையாகக் கருதுகிறேன்."

"எல்லாப் பள்ளிகளிலும் கதர் தயாரிப்பு வகுப்பு கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்' என்கிறார் தாரா. சிறு வயதிலேயே ராட்டினத்தின் தத்துவத்தை உணரும் குழந்தைகள் தேச ஒற்றுமையை வளர்க்கும் பிரஜைகளாக உருவாவார்கள் என்பது இவர் கணிப்பு. கதர் உடுத்திக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணிடம் வரதட்சணை வாங்க எந்த ஒரு வரனுக்கும் மனம் வராது என்று உறுதியாக நம்புகிறார்!

தாரா எல்லா வேலைகளையும் சொந்த ஆர்வத்தினால் கைப்பணம் செலவழித்துச் செய்கிறார். அவருடைய இடத்தில் வேறு யாராவது இருந்தால் தமது பிறப்பையே சாதகமாக்கி என்னவெல்லாமோ சலுகைகள் பெற்றிருப்பார்கள். தில்லியில் இருக்கும் உயர் அதிகாரிகளின் பெயர்கள் கூட இவருக்குத் தெரிந்திருக்கவில்லை!

மிகுந்த எளிமையும் உயர்ந்த லட்சியங்களும் உடைய தாரா, கதர் பற்றி ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பேசப் பேச, ராஜாஜியின் ஒரு கருத்து நினைவுக்கு வந்தது: "கதருக்குச் சுதந்திரத்துக்கு முன்பு இருந்த ஒரு முக்கியத்துவம் வேறு. இன்று அந்நிலை மாறிவிட்டது. எளியோருக்குக் கதர் கட்டி வராது. இனி கதர் என்பது வசதி படைத்தவர்களின் உடையாகி அந்தஸ்தின் சிறப்புச் சின்னமாக வேண்டும். இதுதான் கதர் உற்பத்தி பெருகவும் கதரால் பிழைப்பு நடத்துகிறவர்கள் வாழவும் வழி வகுக்கும்.

— வாஸந்தி

தளபதி இடமதி:

ஜனாதிபதி ஆட்சியில் அமைச்சரவை எங்கே?



இடமதி: சட்டசபையினுள் போலீஸ் நுழைந்ததை ஆட்சேபிப்பவர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சட்டசபையினுள் போலீஸ் நுழைய வேண்டிய அவசியமே இருக்காது! காரணம், சட்டசபைக்குள்ளேயே போலீஸ் 'அவுட்போஸ்ட்' ஒன்றை வைத்து விடுவோம்!

— காயத்ரி, மதுரை.

இடமதி: தமிழகத்திலே ஜனாதிபதி ஆட்சி வந்து நாற்பது நாள் ஆகிறது; என்ன பிரயோஜனம்? ஜனாதிபதி இன்னமும் அமைச்சரவையே அமைக்கவில்லை! முன்பு புரட்சித் தலைவரின் அமைச்சரவை உருவாகத் தாமதமாகிறது என்று வாய்கிழியத் தாக்கியவர்கள் இதற்கு என்ன சொல்கிறார்கள்? ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்?

— ராஜேஷ்குமார், வேலூர்.





"ஏய்யா இடமதி, 'எங்க ஆட்சியிலே லஞ்சம் வாங்கலே'ன்னு சொன்னாப் போதாதா?"

"ஏங்க, என்ன ஆச்சு?"

"'எங்க ஆட்சியிலே லஞ்சம் வாங்கிக் கொண்டும் எதுவும் செய்யலே'ன்னு நேற்று கூட்டத்திலே உளறித் தொலைச்சிருக்கிரே!"

— எஸ். பரமசிவம், சிதம்பரம்.

(காயத்ரியின் இடமதி துணுக்கு இரண்டாம் முறையாக இடம்பெறுகிறது. எனவே, அவர் பரிசு இரட்டிப்பு முறைப்படி ரூ. 50/— பரிசு பெறுகிறார். அவருக்கு வாழ்த்துக்கள்.)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 380/—: விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—: விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

